# யாழ்-மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நிர்வாக கட்டமைப்பும் அதன் செயற்பாடுகளும்

இவ்வாய்வுக் கட்டுரையானது வணிகமாணிப் பட்டப்படிப்பின் ஒரு பகுதியாக யாழ்-பல்கலைக்கழக வணிகமுகாமைத்துவதுறைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.


பூ. சுரேஸ்வரன்

*பதிவெண் :* 87 / C / 100

*சுட்டெண் :* C 4098

வணிக முகாமைத்துவத்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

யாழ்ப்பாணம்

இலங்கை



1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ORGANISATION STRUCTURE AND ACTIVITIES OF NGO'S IN JAFFNA DISTRICT

THIS DISSERTATION IS TO BE SUBMITTED TO THE DEPARTMENT OF COMMERCE AND MANAGEMENT OF UNIVERSITY OF JAFFNA SHRI LANKA IN PARTIAL FULFILMENT OF THE REQUIREMENT FOR THE DEGREE IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION

P. SURESHWARAN

**REGD. No: 87 / C / 100**

**INDEX No: C. 4098**

DEPARTMENT OF COMMERCE & MANAGEMENT STUDIES

UNIVERSITY OF JAFFNA

THIRUNELVELY

JAFFNA

SHRI LANKA

**1991**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், யாழ்ப்பாணம்

COUNCIL OF NGOO, JAFFNA.

# Council Of NGOs. Jaffna

100. Rasavinthoddam, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AUTHORISATION OF THE HEAD OF THE DEPARTMENT.

This is to certify that MR. P. SURESHWARAN of the Department of Commerce & Management studies is authorised to do an Indipendent research study on Organization structure and Activities of N.G.O.S in Jaffna. and Submit the report in Partial fulfilment of the requirement for the degree of Bachelor of Commerce 1991

Date:

...............

(Prof. N. Balakrishnan)
Head, Dept. of Commerce
& Management Studies

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுரை

பல்கலைக்கழகங்களில் சிறப்புநெறி பயிலும் மாணவர்களுக்கு அவர்களது சொந்த ஆக்கங்களை பரீட்சிப்பதற்காக ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கும் முகமாக நான் யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிகவியல் சிறப்புப்பட்டத் தேர்வில் ஒரு பகுதியினை நிறைவு செய்யும் பொருட்டு "யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நிர்வாகக்கட்டமைப்பும், அதன் செயற்பாடுகளும்" பற்றிய ஒரு விசேட ஆய்வு என்னும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையினை சமர்ப்பிப்பதற்காக இத்தலைப்பினைத் தெரிவு செய்வதற்கு அனுமதியளித்த வணிகமுகாமையியல் துறைத்தலைவர் மதிப்பிற்குரிய பேராசிரியர் கே.பாலகிருஷ்ணன் அவர்கட்கு முதற்கண் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளேன்.

இவ் ஆய்வுக்கட்டுரைக்கான தலையங்கத்தையும் அதன் பகுதிகளைத் திருத்தித்தந்தும், இவ் ஆய்வு தொடர்பாக பல்வேறு ஆலோசனைகளையும் பயன்தரு அறிவுரைகளையும் சிரமம்பாராது வழங்கியதுடன், கேட்டநேரத்தில் தகுந்த உதவிகளையும் கருத்துக்களையும் தந்து இக்கட்டுரை பூரணமாக அமையும்படி உதவி நல்கிய வணிகமுகாமையியல் துறை விரிவுரையாளர் திரு.க.தேவராஜா அவர்கட்கும் என மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இவ் ஆய்வுக்கட்டுரை [illegible]டையத் தேவையான ஆலோசனைகளையும், தகவல்களையும் பெறுவதற்கு அனுமதியளித்த தங்களது பணிகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு அன்புடன் என்னை உபசரித்த இணையத்தின் இணைப்பாளர் திரு.பி.பாலசிங்கன் அவர்கட்கும் அத்துடன் இந்த இணையத்தில் அங்கம் வகிக்கும் நிறுவனங்கள், கழகங்கள், திருச்சபைகள், குழுக்கள், மிசன்கள் போன்றவற்றில் இருக்கின்ற நிர்வாக உறுப்பினர்கள் போதுமான தகவல்களையும், ஆலோசனைகளையும் தந்துதவிய அனைவருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவ் ஆய்வுக்கட்டுரைக்கு போதுமான தகவல்களையும், ஆலோசனைகளையும் பெறுவதற்காக இவ்வமைப்புக்களுக்கு செல்ல எனக்கு உதவிய நண்பர்களான திரு.த.பரமேஸ்வரன், திரு.மயூரன், திரு.அரவிந்தன், திரு.சங்கரன், திரு.குமரவேள் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இக் ஆய்வுக்கட்டுரைக்கான காகிதாதிகள், தட்டச்சு செய்தல், புத்தக மட்டை செய்தல் போன்ற எல்லா உதவிகளையும் பொறுப் -பேற்ற அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளை கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இக்கட்டுரையைத் தட்டெழுத்து வடிவில் ஆக்கித்தந்துதவிய அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்தட்டெழுத்தாளர்களான செல்வி.ச.பரமநாதன், செல்வி.ர.இராஜேந்திரன் ஆகியோருக்கும், புத்தகவடிவில் அமைத்த புனித வளன் கத்தோலிக்க அச்சகத்திற்கும், ஏனைய உதவிகளை செய்து தந்த நண்பர்கள் அனைவருக்கும் எனது

நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

யாழ் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் அகதிகளாக்கப்படுவதும் பல்வேறு இன்னல்களை அனுபவிப்பதும் சகசமாகிவிட்டது. இதனால் எமது மக்களுக்கு என்றுமே அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி வேண்டப்படுகின்றது. இத்தகைய நிறுவனங்கள் ஆற்றுகின்ற உதவிகளை ஒழுங்குபடுத்தவும், நெறிப்படுத்தவும் ஓர் அமைப்பு வேண்டப்பட்டது. இதன் காரணமாகவே 1990ல் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையம் ஆற்றி வருகின்ற பணியை மதிப்பிடுவதன் மூலமாக யாழ் மாவட்ட மக்கள் பெரும் பயனை அடைய முடியுமென நான் கருதுகிறேன். இதன் காரணமாகவே இணையத்தின் நிர்வாக கட்டமைப்பையும், செயற்பாடுகளையும் ஆராய முன்வந்துள்ளேன்.

இவ் ஆய்வுக்கட்டுரையில் முதலாவது அத்தியாயத்தில் ஆய்வின் நோக்கம், ஆய்வுக்கான கருதுகோள், ஆய்வுக்கான தரவுகள், ஆய்வின் வரையறைகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்பன காட்டப்பட்டுள்ளன. உத்டெக் நிறுவனத்தின் வரலாற்று பின்னணி, இந்த இணையத்தின் நோக்கம் போர்க்கால சூழ்நிலைகளில் இணையத்தின் பணிகளும் காட்டப்பட்டுள்ளன. மேலும் இணையத்தின் நிர்வாக அமைப்புகளையும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்களது பணியினையும் முதலாவது அத்தியாயம் காட்டுகிறது.

இரண்டாவது அத்தியாயத்தில் இந்த அரசசார்பற்ற நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் நிறுவனங்களான கெயர் ஸ்தாபனம், தென்னிந்திய திருச்சபை, போரூட் நிறுவனம், கிழுடெக் அமைப்பு, மெதடிஸ் மிசன், உறவுப்போராட்டக்குழு, நெட்பாளா ஸ்தாபனம், அகதிகள் புனர் வாழ்வு நிதியம் 83, இலங்கை செஞ்சிலுவை சங்கம், சர்வோதயம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் (      ) தமிழர் புனர் வாழ்வுக்கழகம், அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம், கிறிஸ்தவ வாலிபர் சங்கம், மக்கள் நலன் காக்கும் பிரிவு போன்ற நிறுவனங்கள் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராயப்பட்டுள்ளன. அங்கத்தவ நிறுவனங்களின் தொழிற்பாடுகள் இந்த அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ளன.

மூன்றாம் அத்தியாயத்தில் அவ் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கம் வகிக்கும் நிறுவனங்களில் புனர் வாழ்வு நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், தமிழர் புனர் வாழ்வுக்கழகம், அகதிகள் புனர் வாழ்வு நிதியம் 83 என்பன அகதிகள் தொடர்பாக ஆற்றிவரும் புனர்வாழ்வு நடவடிக்கைகளாக மருத்துவ உதவி, நிதி உதவி, மீளக்குடியமர்த்தல் உதவிகளான குடியேற்றத்திட்டம், வீடமைப்புத்திட்டம், கல்வி உதவிகளான பாலர் பாடசாலைகள், ஆசிரியர்களுக்கான பயிற்சி, வேலைவாய்ப்பு உதவிகளான விவசாயம், கால்நடைவளர்ப்பு, கோழிவளர்ப்பு, மீன்பிடித் தொழில், கைத்தொழில்களான தச்சுவேலை, மேசன்வேலை போன்ற தலையங்கங்களில் ஆராயப்பட்டுள்ளன.

நான்காம் அத்தியாயத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகள் ஆராயப்பட்டுள்ளன. இணையமும் அதில் அங்கம் பெற்றுள்ள நிறுவனங்களும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கி வருவதால் அப்பிரச்சனைகள் பற்றி எடுத்து கூறப்பட்டுள்ளது.

ஐந்தாவது அத்தியாயம் முடிவுரையாக அமைக்கப்பட்டுள்ளது. அதில் இணையம் எதிர் நோக்கும் பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காணமுடியுமென ஆராயப்பட்டுள்ளதுடன் தீர்வுகள் சம்பந்தமான விதந்துரைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் இணையத்தின் பணிகள் மேலும் சிறக்க வழி கூறப்பட்டுள்ளது

ஆக்கியோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருடக்கம்

## அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நிர்வாக கட்டமைப்பும், அதன் தொழிற்பாடுகளும்

பக்கம்


அத்தியாயம் - 1

1.0 அறிமுகம்

1.1 ஆய்வின் நோக்கம்

1.2 ஆய்வுக்கான கருதுகோள்

1.3 ஆய்வுக்கான தரவுகள்

1.4 ஆய்வின் வரையறைகள்

1.5 அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

1.5.1 வரலாற்றுப் பின்னணி

1.5.2 அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நோக்கம்

1.5.3 போர்க்கால சூழ்நிலைகளில் அரசசார்பற்ற நிறுவன இணையத்தின் அவசியம்

1.5.4 அரசசார்பற்ற நிறுவன இணையத்தின் கட்டமைப்பு

அத்தியாயம் - 2

2.0 அங்கத்துவ நிறுவனங்களின் தொழிற்பாடுகள்

அத்தியாயம் - 3

3.0 புனர் வாழ்வு நடவடிக்கைகளில் அரசசார்பற்ற நிறுவன இணையத்தின் பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 1

## 1.0 அறிமுகம்

### 1.1 ஆய்வின் நோக்கம்

1980 காலப்பகுதியில் இனஉணர்வு உக்கிரம் அடைந்தும் பதில் தாக்குதல்களும் பலம் வாய்ந்தவையாக இருந்தன. 1981ம் ஆண்டில் நீர்வேலி வங்கிக் கொள்ளையின் எதிரொலியாக நீர்கொழும்பு எம்பிலிப்பிட்டியா, காலத்தை, நக்கலை, பலங்கொடை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் இனக்கலவரம் இடம்பெற்றன. 1980 களை [illegible] தொடர்ந்த மக்கள் தொடர்ச்சியாக வடக்கு நோக்கி இடம்பெயர்ந்த கொண்டிருந்தனர். 1983ம் ஆண்டில் ஆடி மாதத்தில் ஏற்பட்ட இனக் கலவரம் இலங்கை வரலாற்றில் என்றும் மறக்க முடியாத அழிக்கும் பதிந்த ஒன்றாகும். பெருந்தொகையான தமிழர் உயிரிழந்தனர். அத்தோடு அவர்களது சொத்துடமைகள் பெரும்பகுதி அழிக்கப்பட்டன. உடுத்த உடுப்புடன் மக்கள் உயிர் பாதுகாப்பு வேண்டி அகதிகள் முகாம் களில் தஞ்சம் புகுந்தனர். சிறைச்சாலைகளில் இருந்த தமிழ்க்கைதிகள் சிறையில் வைத்தே கொலை செய்யப்பட்டனர். இலங்கை மணித்திரு நாட்டின் அவலநிலை கண்டு உலகமே மூக்கில் விரலை வைத்த பாதிப்புற்ற மக்களை அனுதாபத்துடன் நோக்கியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகள் ஆயினர். இந்தியாவிற்கும், ஏனைய நாடுகளுக்கும் மக்கள் அகதிகளாகச் சென்று அரசியல் தஞ்சம் கோரினார்கள். இக்கால கட்டத்தில் இடம்பெற்ற இனக்கலவரங்கள் ஒரே நேரத்தில் பல இடங்களில் நடைபெற்ற முறைகளை நோக்கும் போது நன்கு திட்டமிடப்பட்டதாக தென்படுகிறது. இனஒற்றுமையை கட்டி எழுப்ப வேண்டியவர்களே இனவேற்றுமையை கொழுந்து விட்டு எரியச்செய்தனர். கசப்புணர்வுகள் இருசாராரையும் நன்கு தாக்கியது. தமிழ் மக்கள் மேலும் அரச பயங்கரவாதத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டனர். மதகுருமார் கொல்லப் பட்டனர். தொடர்ந்தும் வடபகுதியில் இருந்து இந்தியா நோக்கி தமிழ் மக்கள் [illegible] அகதிகளாக பெருக்கெடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்
----


அத்தியாயம் - 4

4.0 அரசசார்பற்ற நிறுவன இணையம் எதிர் நோக்கும் பிரச்சனைகள்

அத்தியாயம் - 5

5.0 முடிவுரை - தீர்வுகளும் விதந்துரைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுத்தர இந்த இணையத்தில் அங்கம் பெறாத பெருமளவான அரச சார்பற்ற நிறுவனங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக அல்வையர் முன்னணி, வடமாகாண கசநோயாளர் சங்கம், சுகாதாரமும் ஆலோசனையும் வழங்கும் சங்கம், வை.டபிள்யூ.சீ.ஏ, ரோட்டறிக் கழகம், லயன்ஸ்கழகம், பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி, சமூக பொருளியல் மேம்பாட்டுக்கழகம், பரமானந்த ஆச்சிரமம், அநாதைகள், முதியோர் வதியும் இல்லம், கில்னோர்றி மெமோறியல் சொயற்றி, ஒக்ஸ்பாம் கிளிநொச்சி. யூ.என்.எச்.சி.ஆர், வாழ்வகம், இந்து அநாதைகள் இல்லம், டபிள்யூ.ஆர்.டி.எவ், வை.எம்.எச்.ஏ, இந்து மகாசபை, அர்க்காபுரம், சாந்திகம், எ.ஆர்.ஓ.ஏ (நுரோட்), இந்துப்பேரவை, விஷ்வ இந்துபரிஷ போன்ற நிறுவனங்களும் இவ்விணையத்தில் இணையாததால் இவற்றின செயற்பாடுகளை இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இந்நிறுவனங்களும் அகதிகள் சார்பான பல பணிகளை ஆற்றிவந்தபோதும் இவை இணையத்தில் அங்கம் பெறாத காரணத்தால் இந்த ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

## 1.5 அரசசார்பற்ற நிறுவனங்களின் தோற்றம்

### 1.5.1 வரலாற்றுப் பின்னணி

யாழ் மாவட்டத்தில் இதுவரை காலமும் இயங்கி வந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் எமது நாட்டில் வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களின் வளங்களைப்பெற்று தமது நிறுவனக் கொள்கைக்குட்பட்ட மாதிரி நிவாரண புனருத்தாரண பணிகளில் செயற்பட்டு வந்தன. இவைகளில் குறிப்பாக போருட், நிறுவனம், கெயர், றெட்பானா, சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்றன முக்கியம் பெறும். இந்நிறுவனங்கள் அந்நாட்டு தலைமை அலுவலகத்தில் கிடைக்கப்பெறும் வளங்களினூடாக இலங்கையில் உள்ள வதிவிடம் பிரதிநிதியின் தலைமையின் கீழ் இலங்கையில் உள்ள மாவட்டங்களில் தமது செயற்பாடுகளை ஆற்றி வருகின்றன. இந்நிறுவனங்கள் சில தமது செயற்திட்டங்களுக்காக சில கிராமங்களை செயற்திட்ட கிராமமாகக் கொண்டு கடமையாற்றி வருகின்றனர்.

இவை வெளிநாட்டு முகவர்களின் உதவியுடன் நலன் விரும்பிகளின் நன்கொடைகளும் எமது மாவட்டத்தில் தேசிய மட்டத்திலும், மாவட்டரீதியிலும் இயங்கி வருகின்றன. உதாரணமாக இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், சர்வோதயம் போன்ற நிறுவனங்கள் தேசியமட்டத்திலும், மேலும் தமிழர் புனர் வாழ்வுக் கழகம், அறவழிப் போராட்டக்குழு, மக்கள் நலன் காக்கும் பிரிவு போன்றன எமது மாவட்டத்தில் தமது காரியாலயங்களைக் கொண்டு செயற்பட்டு வருகின்றன.

எமது மாவட்டத்தில் இயங்கிவரும் இந்து கிறிஸ்தவ கத்தோலிக்க மத சார்பான நிறுவனங்கள் தமது மத ரீதியான தொடர்புகள் ஊடாகவும் பொதுவான உதவித்திட்டங்களின் ஊடாகவும் செயற்பட்டு வருகின்றன. உதாரணமாக மனித முன்னேற்ற நடுநிலையம், இந்துப்பேரவை, சைவவிருத்திச்சபை, இந்து இளைஞர் பேரவை, தென்னிந்திய திருச்சபை, வாலிபக்கிறிஸ்தவசங்கம், மெதடிஸ்திருச்சபை, இந்துப்பேரவை போன்றவை உதவி வழங்கி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.5.2 1990ம் ஆண்டு நவம்பர்மாதம் அளவில் இப்படியாக இயங்கிவந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது செயற்பாடுகளுக்கும் பயனாளிகளின் தெரிவின் போதும் ஏனைய நிறுவனங்களுடன் எந்தவித தொடர்பும் அற்றவகையில் தனிமையாக இயங்கி வருவதையும் இதனால் பல சந்தர்ப்பங்களில் இரட்டிப்பு வேலைகள் நேருவதையும் எமது மாவட்டத்திற்கான கிடைக்கப்பெறும் வளங்கள் உரிய முறையில் உரியவர்களை சென்றடையாத தன்மை போன்றன பிரச்சனைகளை அவதானித்த மேற்படி அரசசார்பற்ற பிரதிநிதிகள் தமக்குள் ஒரு ஒருங்கிணைப்பு செயற்பாடு இருப்பது அவசியம் என உணர்ந்து 1990ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் திகதி அளவில் அரச சார்பற்ற நிறுவனம் இணையம் ஒன்றை ஸ்தாபித்தனர். இதனடிப்படையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ( N.G.O ) தமது செயற்பாடுகளை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தன. இவ்விணையத்தின் தோற்றம் அவரவர் வேலையை மிக இலகுவாக்கின எனக் கூறலாம். ஒவ்வொரு நிறுவனமும் தமது செயற்பாட்டை ஒரு உதவி அரச அதிபர் பிரிவின் அடிப்படையில் நடாத்தி வருவதென தீர்மானித்தது. அதன் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றன. இவ் இணையத்தின் முக்கிய தோற்றமாக சில விடயங்களை எடுத்துக் கொள்ளலாம்.

(1) இரட்டிப்பு வேலைகளை தவிர்த்துக் கொள்ளுதல்.

(2) சரியான பயனாளிகள் சென்றடைவதற்கான வழிவகைகளை வகுத்துக் கொள்ளுதல்.

(3) நிறுவனப் பிரதிநிதிகள் தமக்கிடையிலான அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதல்.

போன்ற நடவடிக்கைகளை கூறலாம்.

மேலும் இவ் இணையம் நிறுவனங்களின் செயற்திட்டங்களை அவர்கள் விரும்பும் பகுதிகளில் ஏனைய நிறுவனங்களின் அனுசரணையுடன் நடாத்துவதற்கு வழி அமைக்கிறது. மேலும் யாழ் மாவட்டத்து தகவல் தரவுகளை மையப்படுத்தி ஒரு முழுமையான 'தகவல்வங்கி' ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

சில பொதுவான வெளிநாட்டுத்திட்டங்களை வெவ்வேறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஒவ்வொரு நிறுவனமும் பொறுப்பேற்று செயற்படுவதற்கு வழி அமைகின்றது. இணைய நிறுவனங்கள் இருப்பிட குடிசை அமைப்பு விவசாய உதவித் திட்டங்கள், மீனவருக்கான உதவித்திட்டம் உழைப்பாளி, இறந்த உதவித்திட்டங்கள் அனாதைகளுக்கான உதவித்திட்டங்களை ஒரு பொதுக்கருத்துக்களுடன் அமைத்து உதவுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச அதிபர் மற்றும் அரச திணைக்களங்களுடன் ஒழுங்கான தொடர்புகளையும், மாதாந்த சந்திப்புக்களையும் ஏற்படுத்தி அரச வழங்கலும் உரிய முறையில் பயன்படுவதற்கான உதவியை பங்களிக்கிறது.

1.5.3 போர்க்கால சூழ்நிலைகளில் அரச சார்பற்ற இணையத்தின் இவசியம்

தற்போதய போர்க்கால சூழ்நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களில் பெரும்பாலானோர் இடம்பெயர்வதால் தமது திட்டங்களை சரியான முறையில் செயற்படுவதற்கான சூழ்நிலை குறைவாக காணப்படுவதால் சுய வேலைவாய்ப்பு திட்டங்களில் கடுதலாக கவனத்தை செலுத்துகின்றது. இத்துடன் மக்களை தெரிவு செய்து அவர்களில் வறுமையாக இருப்பவர்களில் சிலரை தெரிந்து அவர்களை சுயதொழில்களில் அவர்களை வாழ வழிவகுப்பதற்காக அவர்களுக்கு சுழற்சி முறையில் கடன்களை மீளளிக்கும் வகையில் "சிறு சுழற்சி முறைக்கடன்" என்ற நிதி வழங்கும் முறையை அறிமுகப்படுத்தி வருகின்றது. மேலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது பகுதியில் இடம்பெயர்ந்து வரும் மக்களினால் அவர்களை சரியான முறையில் இனங்கண்டு அவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்க முடியாதுள்ளது. காரணம் ஒரு குறித்த பிரதேசத்தில் பல இடங்களை சேர்ந்த மக்கள் வந்து குடியிருப்பதனால் அவர்களை எந்த உதவி அரச அதிபர் பிரிவை சேர்ந்தவர்கள் என்று இனங்கண்டு செயற்பட முடியாதுள்ளது. அத்துடன் போக்குவரத்துப்பிரச்சனையும் முக்கியமாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.5.4 அரச சார்பற்ற நிர்வாகக்கட்டமைப்பு

தலைவர்

செயலாளர்

பொருளாளர்

செயற்பாட்டுக்குழு
(9 அங்கத்தவர்கள்)

இணைப்பாளர்

மக்கள் நலன் காக்கும் பிரிவு

கிறிஸ்தவ இளைஞர் சங்கம்

கெயர் நிறுவனம்

தென்னிந்திய திருச்சபை

போரூட் நிறுவனம்

திறுடெக் நிறுவனம்

மெதடிஸ் திருச்சபை

அறவழிப்போராட்டக்குழு

நெட்பாறு நிறுவனம்

அகதிகள் புனர் வாழ்வு நிதியம் 83

செஞ்சிலுவைச்சங்கம்

சர்வோதயம்

சிறுவர் பாதுகாப்பு நிதியம்

தமிழர் புனர் வாழ்வுக்கழகம்

அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காட்டிய நிர்வாகக் கட்டமைப்பு வரைபடத்தில் தலைவர் தனது அதிகாரத்திற்கு உட்பட்டு தீர்மானங்களை எடுப்பார். அவரே கூடிய அதிகாரங்களை உடையவராக இருப்பார். செயலாளர் தலைவரினால் எடுக்கப்படும் தீர்மானங்களை செயற்படுத்து வதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் செயற்பட பொருளாளர் நிதி சம்பந்தமான விடயங்களில் நிதிகளை பெறுவதிலும் அதனை தேவைக்கேற்ப செலவிடுவதிலும் செயற்படுவார். இந்தத்தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் மாறிறியமைக்கப்படும். அடுத்து செயற்பாட்டுக்குழு இதில் ஒன்பது அங்கத்தவர்கள் இருப்பார்கள். இவர்களில் இருந்துதான் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகள் தெரிவு செய்யப்படும்.

இவர்களுக்கு மேலாக இணைப்பாளர் என்ற ஒருவர் நிரந்தரமாக அவரது பதவி கொண்டிருக்கும். அவர் இந்த இணையத்தில் உள்ள அங்கத்துவ நிறுவனங்களை அவர்களது செயற்பாட்டு வேலைத்திட்டங்களை சுலபமாக்கி அவற்றை உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் அவர்களது பணிகளை செயற்பட வைப்பதோடு சில தேவைகளைப்பொறுத்து இணைத்தின் அங்கத்தவ நிறுவனங்களில் செயற்பாடுகளை வழங்குவதற்காக அவர்களைக் குறிப்பிட்ட பகுதிகளுக்கு என நிறுவப்படும். முக்கியமாக போர்க்கால சூழ்நிலைகளில் இடம்பெயரும் மக்களுக்கு உதவிகளையும், நிவாரணப்பணிகளையுமே முக்கியமாகக் கொண்டு செயற்பட இந்த இணைப்பாளர் முக்கியம் பெறுவார். இவர் குறிப்பிட்ட பிரதேசங் களுக்கு அவர்களது செயற்பாடுகளை வழங்கக்கூடிய மாதிரி அவர்களை வழங்குவதே இந்த இணைப்பாளரின் கடமையாகும். அங்கத்துவ நிறுவனங்களான கெயர், தென்னிந்திய திருச்சபை, போரூட், கிழுடெக், மெதடிஸ்திருச்சபை, அறவழிப்போராட்டக்குழு, றெட்பானா, அகதிகள் புனர் வாழ்வு நிதியம் 83, செஞ்சிலுவைச்சங்கம், சர்வோதயம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், தமிழர் புனர் வாழ்வு நிறுவனம், அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம், கிறிஸ்தவ இளைஞர் சங்கம், மக்கள் நலன்காக்கும் அமைப்பு போன்றவற்றை இணையம் கொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.0 தன்னார்வ நிறுவனங்களின் தொழிற்பாடுகள்

2.1 கெயர் சர்வதேச ஸ்தாபனம்

2.2 தென்னிந்திய திருச்சபை

2.3 போரூட் ஸ்தாபனம்

2.4 கியூடெக் அமைப்பு

2.5 மெதடிஸ்ட் மிசன்

2.6 அறவழி போராட்டக்குழு

2.7 றெட்பானா ஸ்தாபனம்

2.8 அகதிகள் புனர் வாழ்வு நிதியம்

2.9 செஞ்சிலுவைச்சங்கம்

2.10 சர்வோதயம்

2.11 சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ.இ)

2.12 தமிழர் புனர் வாழ்வுக்கழகம்

2.13 அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம்

2.14 கிறிஸ்தவ வாலிபர் சங்கம்

2.15 மக்கள் நலன் காக்கும் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கெயர் ஸ்தாபனம் - CARE INTERNATIONAL

சர்வதேச கெயர் நிறுவனத்தின் ஒரு கிளை யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகிறது. இந்நிறுவனமானது 1988ம் ஆண்டுக்கு முன்னர் பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான மதிய உணவுகளையே வழங்கி வந்தது. அத்துடன் போசாக்கு குறைந்த குழந்தைகளுக்கும், போசாக்கு குறைந்த கர்ப்பிணித் தாய்மாருக்கும் போசாக்கு உணவான திரிபோஷாவை வழங்கி வந்தது.

## நிறுவனத்தின் செயல் திட்டங்கள்

### சேதமடைந்த வீடுகளுக்கான மதிப்பீட்டுத்திட்டம்

சர்வதேச கெயர் நிறுவனமானது 1988க்கும் பின்னரே அகதிகளுக்கான நிவாரண புனர் வாழ்வுத் திட்டங்களில் ஈடுபடத் தொடங்கியது. இதன்படி நிறுவனமானது முதலில் யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையினாலும் குண்டு வீச்சு விமானங்களினாலும் சேதமாக்கப்பட்ட வீடுகளுக்கான விபரத்தையும், அதற்கான மதிப்பீடு ஒன்றையும் தயாரித்தது. சில கிராமங்கள் மாத்திரம் இதற்காக எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு வினாக்கொத்துக்களை வழங்கி இந்த விபரங்கள் சேகரிக்கப்பட்டன. மாதிரிக்கு சில வீடுகளைத் தெரிவு செய்து அதைத்திருத்துவதற்கான செலவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன. இத்திட்டத்தின்படி கிராமங்களில் வேலை வாய்ப்பு இன்றியிருக்கும் இளைஞர்களுக்கு தச்சு, மேசன் வேலைகளில் பயிற்சி அளித்து அவர்கள் மூலமாகவே சேதமடைந்த வீடுகள் திருத்தப்படுவதாக திட்டமிடப்பட்டது. இதிலிருந்து சேதமடைந்த வீடுகள் திருத்தப்படுவதுடன் வேலையின்றியிருக்கும் இளைஞர்களுக்கும் தொழில் வாய்ப்பு வழங்குவதே இதன் நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் சில கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளூர் உற்பத்தியினை ஊக்குவித்தல் சம்பந்தமான ஆய்வுகளும் நிறுவனத்தினால் மேற் கொள்ளப்பட்டது. இதன்படி உள்ளூர் உற்பத்தி அதிகரிப்புடன் இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பு பெறுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்ட விவசாயிகள் உதவித்திட்டம்

யாழ் மாவட்டத்தில் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான ஒரு திட்டமே இதுவாகும். இத்திட்டமானது சர்வதேச கெயர் ஸ்தாபனத்தால் யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் கெயர் ஸ்தாபனம்,அமெரிக்க கெயர் ஸ்தாபனம் ஆகியவற்றின் ஊடாக அவற்றின் முழு உதவியுடன் இத்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டமானது 1991ம் ஆண்டு மாசி மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்காக ¼ ஏக்கர் காணிகளையுடைய 15000 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டனர். தற்போது 3750 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது மாவட்டத்திலுள்ள மக்கள் ஸ்தாபனங்கள் மூலமாக அவற்றின் உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றது. இதற்காக 4 மக்கள் ஸ்தாபனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களும், அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை பற்றிய விபரமும் வருமாறு,

(1) யாழ் மாவட்ட சிக்கன சேமிப்பு கூட்டுறவுச்சமாசம் - 8000 விவசாயிகள்
(2) உலர் வலைய நிதியம் - 3000 விவசாயிகள்
(3) அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம் - 2500 விவசாயிகள்
(4) கோப்பாய் நலன் காக்கும் கழகம் - 1500 விவசாயிகள்

இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட விவசாயிகளுக்குத் தேவையான சகல உள்ளீடுகளும் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றது. தற்போதைய கஸ்ரமான நிலமை காரணமாக இவை கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டு வழங்கப்படுகின்றன. இவற்றுள் விதைகள், நாற்றுக்கள், உரங்கள், கிருமி நாசினிகள், நீர் இறைப்பதற்குத் தேவையான மண்ணெண்ணெய் அனைத்தும் வழங்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திட்டத்தில் இணைந்துள்ள விவசாயிகளுக்கு 300 நீர் இறைக்கும் இயந்திரங்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் விவசாய ஆலோசனைகள், விளைபொருட்களுக்கான விற்பனை வசதிகள் அனைத்தும் வழங்கப்படுகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்த பின் இவ்வாறான ஒரு முழுமையான விவசாயத்திட்டத்தை அரசாங்கமோ அல்லது வேறு எந்த நிறுவனமோ நடைமுறைப்படுத்தவில்லை. இத்திட்டத்தின் முழு நோக்கம் உணவு உற்பத்தியை பெருக்கி விவசாயிகள் வருமானத்தை அதிகரித்து அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்து பொருளாதார வளர்ச்சியையும், புனர் வாழ்வையும் ஏற்படுத்துவ-தாகும். இத்திட்டம் இற்றைவரை வெற்றிகண்டுள்ளது. ஆனால் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

தொழில் பயிற்சித்திட்டம்
---------------

இத்திட்டத்தின் கீழ் தொழில் அற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தச்சுவேலை, மேசன்வேலை, தையல்வேலை, ஒட்டுவேலை போன்ற பல பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான பயிற்சியாளர்கள் பத்திரிகைகள், சனசமூக நிலையங்கள் என்பவற்றிலான விளம்பரங்கள் மூலமாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். கல்வி கற்ற, கல்வி அறிவு அற்ற அனைவருக்கும் அவர்கள் தராதரத்திற்கேற்ப பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தச்சுவேலைப் பயிற்சிக்கு க .பொ .த சாதாரண சான்றிதழ்களும், மேசன் வேலைப் பயிற்சிக்கு 8ம் தர சான்றிதழ்களும் நிறுவனத்தினால் பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுபவர்களிடமிருந்தே எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திட்டத்திற்காக யாழ் மாவட்டத்தில் பல தொழில்நுட்ப நிலையங்களும், தொழில்நுட்ப கல்லூரிகளும் தெரிவு செய்யப்பட்டு அந் நிலையங்களிலேயே பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சிக்காலத்தின் போது பயிற்சியாளர்களுக்கு கொடுப்பனவுகளும் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றன. இதன்படி நிறுவனமானது பயிற்சி வழங்கும் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு ஒரு பயிற்சியாளனுக்கு 2600 ரூபாவை வழங்கும். அதிலிருந்து ஒரு பயிற்சியாளன் பயிற்சி நாள் ஒன்றுக்கான கொடுப்பனவாக 30 ரூபாவினைப் பெற்றுக் கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு பயிற்சி முடிவில் தொழில் செய்வதற்கான உபகரணம் அடங்கிய தொகுதி ஒன்றும் பயிற்சி சான்றிதழ்களும் வழங்கப்படும். அத்துடன் தொழில்வாய்ப்புக்களும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் நோக்கம் படித்த இளைஞர்கள், யுவதிகள் வருமானம் பெறக்கூடிய ஒரு சுயதொழிலைப் பெறுவதும், மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகளை இவர்களைக் கொண்டே திருத்துவதும் ஆகும். மற்றும் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள் தங்கள் சேதமடைந்த வீடுகளை தாமாகவே திருத்திக் கொள்ள முடியும் என்பதாகும். இத்திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கானோர் நன்மை அடைந்துள்ளனர், தொழில்வாய்ப்புக்களையும் பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மவாட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கெயரினால் வழங்கப்பட்ட நிவாரண உதவி பற்றிய விபரம் (ஜுலை 1990 - டிசெம்பர் 1990)

---

| இடம் | பொருள் | தொகை | குடும்பம் | பெறுமதி |
|---|---|---|---|---|
| சங்கானை | அரிசி | 100 மூடை | 670 | 107,500.00 |
| குருநகர் | குடும்பப்பை | 375 பை | 375 | 93,750.00 |
| | லக்ஸ்பிறே | 22 பெரியபை | 300 | 22,000.00 |
| பருத்தித்துறை | லக்ஸ்பிறே | 57 பெரியபை | 800 | 57,000.00 |
| ஊர்காவற்துறை } | அரிசி | 60 மூடை | 402 | 100,500.00 |
| வேலணை } | குடும்பப்பை | 100 பை | 100 | 25,000.00 |
| } | லக்ஸ்பிறே | 43 பெரியபை | 600 | 43,000.00 |
| தென்மராட்சி | அரிசி | 600 மூடை } | 942 | 100,500.00 |
| | பருப்பு | 350 கிலோ } | | |
| | குடும்பப்பை | 1000 பை | 500 (இருமுறை) | 250,000.00 |
| | லக்ஸ்பிறே | 10 பெரியபை | 500 | 10,000.00 |
| | லக்ஸ்பிறே | 43 பெரியபை | 600 | 43,000.00 |

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்த 2000 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டது. அத்துடன் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இந்த நிவாரண உதவி வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசர நிவாரணம்

அகதிகளுக்கு விநியோகிப்பதற்காக உள்ஊர் அரச சார்ப்பற்ற நிறுவனங்களுக்கு உவந்தளிக்கப்பட்ட உணவுப்பொருட்கள்

| | | |
|---|---|---|
| (அ) | பாசிப்பயறு | 4260 கிலோ |
| (ஆ) | கௌபீ | 1111 கிலோ |
| (இ) | உழுந்து | 300 கிலோ |
| (ஈ) | அரிசி | 300 கிலோ |
| (உ) | குரக்கன் | 6666 கிலோ |
| (ஊ) | குடும்பப்பொதிகள் | 2000 பொதிகள் |

ஒவ்வொரு பொதியிலும்,
2 கிலோ அரிசி
1 கிலோ சீனி
2 கிலோ கோதுமை மா
1 கிலோ கௌபீ
3 துண்டு சன்லைட் சவர்க்காரம்
3 கேக்
(ஒவ்வொன்றும் 200 கிராம்)

கமத்தொழில் உதவித்திட்டம்

உள்ஊர் நான்கு (4) அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக 15000 கமத்தொழில் நலன்பெறுவோருக்கு கீழ்க்காணும் உதவிகள் வழங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (அ) | விதைவகைகள் | - 48 மெற்றிக்தொன் (தானியம், பருப்புவகை, காய்கறிகள்) |
| (ஆ) | உரம் | - 1687.5 மெ.தொன். |
| (இ) | நீர் இறைக்கும் இயந்திரம் | - 120 |
| (ஈ) | மண்வெட்டிகள் | -8161 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பயிற்சி

கீழ்காணும் நிலையங்களில் 1991 ஆம் ஆண்டில் 364 இளைஞர் களுக்கு 24 தச்சுவேலை, மேசன் வேலைப்பயிற்சி நிலையங்களில் பயிற்சி யளிக்கப்பட்டது.

(அ) பற்றீசியன் நிறுவனம் - யாழ்ப்பாணம்

(ஆ) யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம் - - வட்டுக்கோட்டை

(இ) அலமிலியாதுஸ்பிள்ளை தொழில்நுட்ப நிறுவனம் - யாழ்ப்பாணம்

அரச தொழில் நுட்பக்கல்லூரி - கொக்குவில்

ஒவ்வொரு பயிற்சி பெறுவோருக்கும் உதவி நன்கொடையாக அவர்கள் பயின்ற நிறுவனங்களிடம் கீழ்க்காணும் செலவினங்களுக்காக ரூபா 2,600/- வழங்கப்பட்டது. அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிக்கு இது கொடுபடவில்லை.

(1) பயிற்சி பெறுவோருக்கு ஊக்குவிப்புத்தொகை (நாளொன்றுக்கு 30/-)

(2) நிர்வாக செலவினங்கள்

(3) பயிற்சி கொடுப்போருக்கான வேதனங்கள்

(4) நுகரப்படும் பொருட்கள்

அரச தொழில்நுட்பக்கல்லூரியில் பயிற்சி பெற்றவர்களுக்கு நாளொன்றுக்கு ஊக்குவிப்புத் தொகையாக ரூபா 18/- வழங்கப்பட்டது. ஒவ்வொரு பயிற்சி நெறியும் 50 நாட்கள் கொண்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிந்திய திருச்சபை

மேற்படி அமெரிக்க இலங்கை மிசன் செய்து கொண்டு வந்த சபை வேலையை 1904ம் ஆண்டு தொடக்கம் இலங்கை கொங்கிரிகேஷனல் சங்கம் மேற்பார்த்தது. இச்சங்கம் 1910ம் ஆண்டு தென்னிந்திய ஐக்கிய சபையின் யாழ்ப்பாண சபாசங்கம் எனப்பெயர் பெற்றது. இச் சபாசங்கம் 1947ல் உதித்த தென்னிந்திய திருச்சபைக்குள் பிரவேசித்தது. 1947ல் இலங்கை அமெரிக்கன் மிசன் தான் அதுவரை செய்து கொண்டு வந்த வேலைகள் எல்லாவற்றையும் தென்னிந்திய திருச்சபைக்கு கொடுத்தது. அடுத்தடுத்த வருடங்களில் யாழ்ப்பாண சுதேச சுவிசேஷ சங்கமும் ஸ்திரீகள் அப்படியே தமது வேலைகளையும் தமக்கு ஒப்புக்கொடுத்தன. இப்பொழுது யாழ்ப்பாண ஆதீனம் தென்னிந்திய திருச்சபையின் 14 ஆதீனங்களில் ஒன்று. தென்னிந்திய திருச்சபை சர்வலோக திருச்சபையின் ஓர் அம்சமாகயிருப்பதால் சர்வலோக திருச்சபையின் எல்லா வாக்குத்தத்தத்திற்கும் ஆச் சுதந்திரத் -திற்கும் உரித்துடையது. இதன் நோக்கம் இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுத்தப் பட்ட கடவுளுடைய சுவிசேஷத்தை கைக்கொண்டு அதை பரிசுத்த ஆவி தேவனுடைய வல்லமைக்கும், அன்னியோன்னியத்திற்கும் ஊடாக கூறி சாட்சியாய் இருப்பதே.

எனவே இவை யாவற்றையும் உணர்ந்த தென்னிந்திய திருச்சபை தனை முதலில் மக்களின் அத்தியாவசிய உலகப்பிரகாரமான தேவைகளில் அவர்களுக்கு உதவி செய்து அதில் நிறைவை கண்டபின் ஆத்ம ஆதாய காரியங்களிலும் ஈடுபட்டு மக்களை நல்மேய்ச்சலில் உள்ள இடங்களிலும், பல வழிகளிலும் நடாத்தி வருகிறது. பல ஆண்டுகளாக செயற்பட்டுவரும் தென்னிந்திய திருச்சபை யாழ் பல சிறந்த பணிகளை செய்து வருகிறது என்பதை கீழ்வரும் காரியங்கள் நிரூபிக்கின்றன.

கடவுள் எங்களில் செய்து வரும் அன்பு பிறர்பால் செல்ல வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடன் சாதி, மத பேதமின்றி எல்லோரும் ஒரு குடும்பமாக வளரக்கூடிய குழந்தைகளுக்கு சிறுவர் பகல் பராமரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்களை நடாத்தி வருவதுடன், வசதியற்ற பிள்ளைகள் தங்கிப் படிக்கக் கூடியதாக சிறுவர் சிறுமியர் இல்லங்களும் பல அமைக்கப்பட்டு, அங்கு தங்கிப்படிக்கும் சிறுவர், சிறுமியருக்கு வேண்டிய சகல தேவைகளையும் பூர்த்தி செய்து பராமரித்து வருகிறது.

வறியவர்கள் எப்போதும் பிறர்கையை எதிர்பார்த்திராது தம்முடைய காலில் நிற்கத்தக்கதாக உதவி செய்யும் வழியாக தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆரம்பித்து படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் இலகுவில் கற்றுக் கொள்ளக்கூடியதாக இலவச தையல் வகுப்புக்களும், அத்தோடு வேறு பல வேலைகளும் படித்துவிட்டு தொடர்படிப்புகளுக்கு செல்ல முடியாதவர்களுக்கென சுருக்கெழுத்து, தட்டெழுத்துப்பயிற்சிகள் ஆங்கிலம் தமிழ் இரு மொழிகளிலும் பயில ஒழுங்கு செய்து கொடுத்து வருகிறது.

சமுகஅபிவிருத்தி பணிகளாக கோழிப்பண்ணை, ஆட்டுப்பண்ணை என்பவற்றை செயற்படுத்துவதுடன் நியாயவிலைக்கடைகளும் திறந்து கொடுத்து மக்களுக்கு உதவி வருகிறது. புனர்வாழ்வு நடவடிக்கையாக இல்லம் இன்றி தவிக்கும் மக்களுக்கு போதுமான வசதியுடன் கூடிய வீடுகளும், 3,4 குடும்பங்களின் பாவனைக்கென பொதுக்கிணறுகளும் வெட்டிக் கொடுத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுத்துள்ளது. மேலும் பல சுயவேலைவாய்ப்புக்களையும், வேலையின்றி தவிப்போருக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதரவற்ற சிறுவர் இல்லம் ஒன்றை இணுவிலில் அமைத்து அதற்கு "நம்பிக்கை இல்லம்" என்ற பெயருடன் அதில் வாழும் சிறுவர், சிறுமியர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் நோக்குடன் அவர்களுக்கு பாடசாலை வசதிகளையும் செய்து கொடுத்து உணவு, உடை என்பவற்றை கொடுத்தும் வருகிறது. அந்த ஆதரவற்ற பிள்ளைகள் பிற்காலத்தில் நம்பிக்கையுடன் வாழக்கூடியதாக அவர்களுக்கு சிறந்த பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது. அதில் உள்ள படிக்கக் கூடியவர்களுக்கு படிக்கும் வசதிகளையும் பாடசாலைக்கு அவர்களை கொண்டு செல்வதற்கென சொந்தமாக வாகன வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமக்களுக்கும் ஏற்ற மருத்துவ வசதிகளை பெற்றுக் கொள்ளக்கூடிய மருத்துவமனைகள் இயங்கி வருகிறது. இலவசமாகவும், வசதிக்கட்டணமாகவும் இவை இயங்கி வருகின்றன.

இவ்விடயம் தொடர்பாக 60 நாட்கவன நிலையங்களும், தொழில் பயிற்சி நிலையங்களும் பராமரிக்கப்படுகின்றன. பண்டத்தரிப்பில் உள்ள சாந்தசோலை எனும் இடத்தில் ஒரு புதிய நாட்கவன நிலையமொன்றை நாம் ஆரம்பித்துள்ளோம். 5 வயதிற்கு குறைந்த 50 பிள்ளைகள் இந்நிலையத்தில் பராமரிக்கப்படுகிறார்கள். இதைவிட வாசித்தல், எழுதல் என்பன பற்றி எதுவுமே அறியாத முதியோர்களுக்காக வயதுவந்தோர் கல்வித்திட்டம் ஒன்றையும் செயற்படுத்தி வருகிறோம். இத்தத்திட்டம் வெற்றியளிக்குமாயின் இதைப்பல கிராமங்களுக்கும் விஸ்தரிக்க எண்ணியுள்ளோம். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு ஆளுக்கு 350/- ரூபா பெறுமதியான உலர் உணவு வீதம் 600 பேருக்கு விநியோகித்தோம்.

இத்தத்திட்டத்திற்குள் கொண்டுவரப்பட்ட கிராமங்களாவன, கலைத்திசைவெட்டை காந்திஜி கிராமம், உடுவில் சத்தியபுரம், வட்டுக்கோட்டை முதலிகோவிலடி, சங்கிலிப்பாய்.

மிருகவளர்ப்பு, கோழி வளர்ப்பு, தையல் தட்டச்சு முதலியவற்றில் நாட்டமுள்ள கைம்பெண்களுக்கு தொழில்பயிற்சி நிலையம் பயிற்சியளிக்கிறது. இத்தப்பயிற்சி நெறியாளருக்கு தம்மைப்பராமரிப்பதற்கென சிறு உதவியும் வழங்கப்பட்டது. இவ்வாறு பயிற்சி பெற்ற 75 பேரைக்கொண்ட தொகுதியின -ருக்கு முன் 12ந் திகதி ஒரு பசு, கோழிக்கூட்டுடன் 50 குஞ்சுகளும், தையல் இயந்திரம் என்பன வழங்கப்பட்டன. இரண்டாவது தொகுதியினர் 6 மாதகாலப் பயிற்சிநெறியை ஆரம்பித்துள்ளனர். இவர்களுக்கும் பயிற்சிக்காலத்தில் வாழ்க்கைப்படியொன்று வழங்கப்பட்டது. 400 பாடசாலைப்பிள்ளைகளுக்கு எழுத்து உபகரணங்கள், சீருடைத்துணிகள், சப்பாத்துக்கள், பாதஉறைகள் ஆகியன வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போருட்

இலங்கையின் சமூக அபிவிருத்தி, புனர்வாழ்வு, நிவாரண விடுவிப்பு வேலைகளுக்கு போருட் நிறுவனமே முக்கிய தளமாகக் காணப்படுகின்றது. நிறுவனத்தின் வேலைகள் அமுலாக்கப்படுவதற்கு முன்பு எவ்வேலைகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது அடையாளம் காணப்பட்டு, அவை தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும் அவற்றின் அமுலாக்கத்திற்குத் தேவையான வசதிகள், கண்காணிப்பு, மதிப்பீடு போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன. இவை இரண்டுக்கும் இடையில் நிறுவனத்தின் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகள் நோறாட், சீடா போன்ற உதவி வழங்கும் நிறுவனங்களுக்கும் திட்டம் தொடர்பான அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்படும். திட்ட அமுலாக்கம் என்பது நிறுவனத்தின் இயக்குநர் சபை உதவி வழங்குநர்களின் அனுமதி இலங்கை அரசின் அனுமதி என்பவற்றுடன் மேற்கொள்ளப்படும்.

திட்டம் ஆரம்பித்தவுடன் தொடர்புபட்ட ஆளணி ஊழியர்களும், முகாமையும் அந்நட வடிக்கையுடன் நெருக்கமாகத் தொடர்புபட்டிருப்பதுடன் ஒரு உள்ளூர் அரச சார்பற்ற நிறுவன இணைப்பாளரும் பணியாற்றுவார். திட்டம் தொடர்பாக உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விரிவான முகாமைத் திட்ட அறிவும் அது தொடர்பான பயிற்சி என்பன அளிக்கப்படும். இவை தொடர்பான நடவடிக்கைகளிற்கு முக்கியமாக செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு தொடர்புபட்ட அமைச்சுக்களுடனும், அரச நிறுவனங்களுடனும் குழப்ப சூழ் நிலைகளில் இருக்கின்ற மக்களுக்கு சேவைகளை மேற்கொள்வதற்காக பலமான உறவுகளையும் கொண்டுள்ளது.

## யாழ்ப்பாணம் மேற்கு – காரைநகர்

யாழ் மேற்கு அல்லது காரைநகர் திட்டமானது நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் மிக நீண்ட திட்டமாக சினோர் அபிவிருத்தித் திட்டத்துடன் 1960 களில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெறுகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் சங்கானை, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 20 கிராமங்களில் 11 போருட் உறுப்பினர்கள் உள்ளூர் தொண்டர் ஸ்தாபனங்களுடன் சேர்ந்து பணிகளை மேற்கொள்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்கள்

### கல்வி கலாச்சார நடவடிக்கைகள்

17 ஆரம்பப் பாடசாலைகளில் 546 மாணவர்களை பயிற்றுவிக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. 75 வீதமான வரவு மாணவர்கள் தொடர்பாக இருக்கின்றது. 6 தொண்டர்கள் 6 மாதப் பயிற்சியுடன் இவற்றை நடாத்திக் கொண்டிருப்பதுடன் இன்னுமொரு குழுவொன்று இத்தகைய பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. அறிவூட்டும் வகுப்புக்கள் 13 கிராமங்களிலும் கல்வி வட்டங்கள் 11 கிராமங்களிலும் நடாத்தப் படுகின்றது. முறையே 142, 113 பேர்கள் பங்குபற்றுகின்றார்கள். 19 கிராமங்களில் 19 நூலகங்கள் நடாத்தப்பட்டு இவற்றுக்கிடையே எல்லாமாக 2247 நூல்கள் பராமரிக்கப்படுகின்றன. 10 கிராமங்களில் விளையாட்டுப்போட்டி நடாத்தப்பட்டதுடன் 8 விளையாட்டுக் கழகங்கள் போருட் ஆதரவுடன் அமைக்கப்பட்டுள்ளன.

### வருமான உழைப்பு

33 பெண்கள் தையல், வெட்டுதல், பின்னல் பயிற்சிகளுக்கு நிதி உதவி பெற்ற-துடன் 44 பெண்கள் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து 22 பெண்கள் பனம் பொருள் நுட்ப வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள். சிறியளவிலான கடன்களுடன் சிறிய குழுக்களாகப் பெண்கள் வாசனைப் பொருட்கள் போன்றவைகளை விற்பதற்காக பைக்கற்றுக்களாக அடைப்பதில் ஈடுபட்டிருக்கின்றார்கள். சிறியளவிலான கடன்கள் விலங்குப் பண்ணைகள் நடாத்துவதற்காகவும் பெண்கள் குழுக்களாக கோழிப்பண்ணை, ஆடு வளர்ப்புக்களில் ஈடுபடுவதற்காகவும் வழங்கப்படுகின்றன. 5000/- ரூபா முதல் 10000 ரூபா வரையான கடன்கள் அமைப்புக்களினூடாக மீன்பிடித் தொழிலாளர்களுக்கு வலை, சிறிய வள்ளங்களை வாங்குவதற்கு வழங்கப்படுகின்றது. பெண்களுக்கு வீட்டுத் தோட்டம் தொடர்பாகவும் குறிப்பாக வெங்காயச் செய்கை போன்ற விவசாய நடவடிக்கைகளிற்காகவும் கடன் வழங்கப்படுகின்றது.

### சமூக நலன்புரி சுகாதார நடவடிக்கைகள்

நோய்த் தடுப்பு நடவடிக்கையாக குடிநீருக்கு குளோரின் கலந்து சுத்தப்படுத்தல், அரச சுகாதாரப் பகுதி ஆளணி உதவியுடன் செய்யப்படுகின்றது. 40 தொண்டர்கள் 2 விசேட சுகாதாரக் கருத்தரங்குகளினூடாகப் பயிற்றுவித்து அதில் சரியாக 30 தொண்டர்கள் மாதக் கருத்தரங்குகளில் பங்குபற்றுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 கிராமங்களில் திருச்சிறுவை நடமாடும் மருத்துவப் பகுதியூடாகப் பயனடைகின்றன. ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு தொடர்ச்சியாக ஐக்கியச் சங்கங்களினால் தயாரித்து வழங்கப்படும் இலைக்கஞ்சி மற்றும் சத்துள்ள உணவுகள் ஊட்டச் சத்துக்காக வழங்கப்படுகின்றன. இதனால் பயனடைபவர்கள் மூன்றில் ஒரு பகுதியினராவார். இவர்கள் அவர்களுடைய சத்துணவை மட்டும் தொடர்பாக நியம அளவுத் திட்டத்துடன் கண்காணிக்கப்படுகின்றார்கள்.

வீடமைப்பு, நீர், சுகாதாரம்

வீடமைப்பு வசதிகள் புனர்வாழ்வுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இருந்தும் 8 வீடுகள் கூரைக்கான சீற்றுக்கள் வழங்கப்பட்டிருப்பதுடன் ஒரு விதவைக்கு வீடொன்றும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. பல புதிய கிணறுகள் தோண்டப்பட்டு அவை கிராமத்தவர்களுக்கு குடிநீரை வழங்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. மேலும் 10 கிணறுகள் 7 கிராமங்களில் அமைக்கப்படுகின்றன. 19 கிராமங்களில் 234 மலசலகூட வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

ஒழுங்கமைத்தல்

நிறுவனத்தின் உள்ளூர் இணைப்பாளர்கள் பலர் முக்கிய பதவிகளில் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். பல G.T அமைப்புக்கள் சிறிய நிலத் துண்டுகளை தமக்கென சொந்தமாக வாங்கி அவற்றில் சனசமூக நிலையங்களை தமது நோக்கங்களை விரிவுபடுத்துவதற்காக அமைத்துள்ளார்கள். பல சிக்கன கடன் வழங்கும் சேமிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆறு கிராமங்களில் ஏற்கனவே இருக்கின்ற பெண்கள் குழந்தைகள் அமைப்புகளிற்கு மேலதிகமாக அமைக்கப்பட்டு இருக்கின்றன.

புனர்வாழ்வுத் திட்டங்கள்

யாழ்ப்பாணம் மேற்கு

காரைநகர்ப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகப் புதிதாக புனர்வாழ்வு நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. 4 கிராமங்கள் பாதிக்கப்பட்டு அவற்றின் மக்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். இப்புனர்வாழ்வு நடவடிக்கை சி.டி நடவடிக்கைக்கு சமாந்தரமாக மூத்த திட்ட அதிகாரியின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயல் திட்டங்கள்

### கல்வி, கலாச்சாரம்

ஆரம்ப பாடசாலைகள் நன்னடத்தை அமைப்புக்களினாலும் 8 ஆரம்பப் பாடசாலைகள் போருட்டினாலும் நடாத்தப்படுகின்றன. 238 மாணவர்கள் கல்வி பயில்வதுடன் அவற்றில் 89 பேர் 1989 இல் அரச பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். 4 தொண்டர் ஆசிரியர்கள் ஒரு மாதப் பயிற்சிக்குப் பின் ஆரம்பப் பாடசாலைகளை நடாத்துகின்றார்கள். அறிவு புகட்டும் வகுப்புக்கள் 3 கிராமங்களில் 24 பெண்கள் பயனடையும் விதத்தில் நடாத்தப்படுகின்றது. கல்வி வட்டங்கள் 4 கிராமங்களில் 22 பேர்கள் பயனடையும் விதத்தில் நடாத்தப்படுகின்றது. குளோப் நூல் நிலையம் 71 பேர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு 580 புத்தகங்களை இரவல் கொடுக்கும் வகையில் செயல்படுவதுடன் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள், வார இதழ்களையும் கொண்டிருக்கின்றன. போருட்டினால் சம்பளம் வழங்கப்படும் ஆசிரியைகளினால் 26 மாணவர்களுக்கு சங்கீதம் கற்பிக்கப்படுகின்றது. இவர்களில் 11 பேர் சித்தியடைந்தும் உள்ளார்கள். 9 கிராமங்களில் நாடகங்கள், நாட்டிய நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் போன்றன நடாத்தப்பட்டன.

### வருமான உழைப்பு

19 பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்கப்பட்டு பெண்கள் சங்கம் இத்தகைய வெளியீடுகளை விற்பனைக்கு விட்டிருக்கின்றது. 3000 ரூபா கடன் துணிகள் வாங்கி உடுப்புக்களை தைத்து விற்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. இதில் அரைவாசியே திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும். பெண்கள் சங்கம் பனை அபிவிருத்தியூகிய பகுதி ஒன்றை நடாத்துவதுடன் கடதாசிப் பைகள் செய்பகுதியையும் நடாத்துகின்றது.

ஒரு கிராமத்தில் உள்ள விதவைகளுக்கு தும்புத் தொழிலுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அதை திருப்திகரமாக செய்ய முடியவில்லை. பன்னை வளர்ப்பு ஒரு பொருளாதார முயற்சியாக கொள்ளப்பட்டு இருப்பதுடன் 26 குடும்பங்கள் கடன் திட்டத்தில் ஆடுகளையும் பெற்றுள்ளன. ஒரு கிராமத்தில் உள்ள சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்திற்கு வலைகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இது மீன்பிடித் தொழில் நடைபெறத் தொடங்கியதும் திருப்பிச் செலுத்தப்படும். இத்தகைய கடன் திட்டத்தினால் மீன்பிடித் தொழிலை அடிப்படையாகக் கொண்ட 61 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருமான உழைப்பு

19 பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்கப்பட்டு பெண்கள் சங்கம் இத்தகைய வெளியீடுகளை விற்பனைக்கு விட்டிருக்கிறது. 3000 ரூபா கடன் தொகை வாங்கி உடுப்புக்களைத் தைத்து விற்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. இதில் அரைவாசியே திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும். பெண்கள் சங்கம் பனை அபிவிருத்தி ஓலை பகுதி ஒன்றை நடாத்துவதுடன் கடதாசிப் பைகள் செய்யும் பகுதியையும் நடாத்துகிறது.

ஒரு கிராமத்தில் உள்ள விதவைகளுக்கு குடிசைத் தொழில்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அதை திருப்திகரமாக செய்ய முடியவில்லை. பண்ணை வளர்ப்பு ஒரு முயற்சியாகக் கொள்ளப்பட்டிருப்பதுடன் 26 குடும்பங்கள் கடன் திட்டத்தில் ஆடுகளையும் பெற்றுள்ளனர். ஒரு கிராமத்தில் உள்ள சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்திற்கு வலைகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இது மீன்பிடித் தொழில் நடைபெறத் தொடங்கியதும் திருப்பிச் செலுத்தப்படும் இத்தகைய கடன் திட்டத்தினால் மீன்பிடித் தொழிலை அடிப்படையாகக் கொண்ட 61 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

## சமூக சுகாதார நலன்

சுகாதாரக் கருத்தரங்குகள் மாதந் தோறும் நடாத்தப்பட்டு அதில் 18 தொண்டர்கள் பங்கு பற்றுகிறார்கள். முதலுதவிப் பயிற்சி வகுப்புக்கள் சமூக அபிவிருத்தி உதவி நடவடிக்கைகளுக்காக நடாத்தப்படுகின்றது. மதிய நேர உணவு எல்லா ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கும் தாய்மார்கள், தொண்டர்கள் உதவியுடன் வழங்கப்படுகிறது.

## வீடமைப்பு, குடிநீர், சுகாதாரம்

புனரமைப்புத் திட்டத்தின்கீழான 51 வீடுகளில் 17 முடிந்திருப்பதுடன் 31 வீடுகள் கூரை அமைக்கு வேலைகள் பூர்த்தியாகி இருக்கின்றன. மற்றும் இரண்டு கிராமங்களில் 8 வீடுகள் முடிக்கப்பட்டு வழங்கப்பட்டவர்கள் குடியேறி இருக்கிறார்கள். பிறிதொரு கிராமத்தில் 4 சேதமடைந்த வீடுகள் திருத்தப்பட்டதுடன் ஏழு புதிய வீடுகளும் அமைக்கப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிராமத்தில் மின்சார இறைக்கும் இயந்திரம் ஒன்றின் பொருத்தலுடன் நீர் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிறிதொரு கிராமத்தில் கிணறு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதுடன் சேதமடைந்த குழாய்கள் மக்களால் தாங்களாகவே போஷட்டின் உதவியுடன் திருத்தப்பட்டுள்ளன. நீர் கொண்டு செல்லும் வண்டியும் ஒரு நல்ல பராமரிப்புடன் நீர் விநியோக அமைப்பிற்கும் மெருகூட்டியுள்ளது. 67 மலசல கூட வசதிகள் 4 கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

<u>ஒழுங்கமைத்தல்</u>

சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் வருடாந்தப் பொதுக் கூட்டங்கள் நான்கு கிராமங்களில் நடாத்தப்பட்டிருப்பதுடன் அவற்றின் புதிய அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அங்கத்தவர்கள் வீடு அமைத்தல், ஆரம்ப பாடசாலை வேலைகள் முதலியவற்றில் சிரமதானப் பணியை மேற்கொள்ள ஒழுங்கு செய்தனர்.

<u>யாழ்ப்பாணம் கிழக்கு</u>

இலங்கை இந்திய இராணுவ நடவடிக்கைகளினாலும், மீண்டும் நடைபெற்றமையினாலும் வடமராட்சி மக்கள் மிகவும் கொடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். இத் திட்டம் ஆரம்பத்தில் 7 கிராமங்களில் 1988 இல் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் தற்போது 3 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 35 கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு கிராமத்திலும் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் கிராம அபிவிருத்தி வங்கியாகச் செயற்படுகிறது.

<u>வருமான அமைப்பு</u>

35 கிராமங்களில் கிராம அபிவிருத்தி வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. இது சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கமாக இயங்கி வருகிறது. வங்கிகள் கிராம மக்களாலேயே முழுநேர உதவியாளர் ஒருவரால் இயக்கப்படுகிறது. இவர்கள் வங்கியாளர்கள் என அழைக்கப்படுவர். இவர்களுக்கு வங்கிகள் ஊதியத்தை வழங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தாப் பணத்தையும், போட்டிக் கடன் உதவியையும் கொண்டு 220 கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 2600 பேர் நகை மீட்பு மற்றும் விவசாயத் தொழில்களைத் தொடர்கின்றனர். கடன் மீளக் கொடுப்பனவுகள் உற்சாகம் அளிப்பவையாகக் காணப்படுகின்றன.

## கல்வி

24 கிராமங்களில் பாலர் பாடசாலைகள் இயங்குகின்றன. 30 சுய உதவியாளர்களுக்கு பாலர் கல்விப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2 நூலகங்கள் நடாத்தப்படுகின்றன. 15 கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 16 பெண்களுக்கு தையல் பயிற்சி நடாத்துநர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் 30 கிராமங்களில் இலவச பெண்களுக்கு தையல் பயிற்சிகளை வழங்குவர்.

நிறுவனத்தால் செயற்படுத்தப்பட்ட செயற் திட்டங்களும் அவர்களுக்கு ஏற்பட்ட செலவினங்களும் வருமாறு:-

| செயற்பாடுகள் | செலவினங்கள் (ரூபாவில்) | | |
|---|---|---|---|
| பாலர் பாடசாலை | 168.930 | 119.023 | 68.425 |
| வளர்ந்தோர் கல்வி | 37.914 | 36.229 | 2.014 |
| கல்வி வட்டம் | 64.835 | 49.500 | 10.466 |
| நூல் நிலையம் | 59.434 | 10.351 | 2.490 |
| கலாச்சாரம் | 12.943 | 50.730 | 3.665 |
| விளையாட்டு | 13.155 | 15.677 | —— |
| கல்வி பயிற்சி சார்ந்தவை | 5.200 | 18.862 | —— |
| கைத்தொழில், கைவேலை | 26.490 | 241.135 | 36.207 |
| மிருக வளர்ப்பு | 14.150 | 102.154 | 200.815 |
| காணி, மீட்பு | 30.300 | 240.339 | 20.959 |
| கமம் | 17.291 | 265.489 | 174.114 |
| நோய்த்தடுப்பு, சுகம், சுகாதாரம் | 25.377 | 31.394 | 13.929 |
| போசாக்கு | 45.464 | 66.369 | 36.138 |
| வீடு | 56.028 | 44.975 | 16.904 |
| குடிநீர் | 48.460 | 34.440 | —— |
| மலசல கூடம் | 56.408 | 44.575 | —— |
| கட்டமைப்பு | 13.798 | 25.134 | 18.506 |
| மதுவிலக்கு | 4.896 | 7.675 | 8.516 |
| கல்வியில் புத்துணர்ச்சி | 7.100 | —— | —— |
| நிவாரணம் | 6.320 | 26.300 | 185.435 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போரூட் கிராமம் கிக்குக் கருத்திட்டம்

இந்தக் கருத்திட்ட எல்லைக்குள் சுகாதாரம், கல்வி, இளைஞர் விவகாரம் என்பவற்றைக் கையாள்வதற்கு மேற்படி கருத்திட்டம் பல கிளைத் தொகுதிகளை அமைத்துள்ளது. செயற்பாடுகளைப் பன்முகப்படுத்தும் நோக்கத்தோடும், அதே வேளை அபிவிருத்திப் பணியில் மக்கள் பங்களிப்பிற்கு முக்கியத்துவம் அளிப்பதற்காகவுமே இவ்வாறு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டப் பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகக் குறைந்த செலவிலான சுகாதாரக் கல்வி வசதிகளை ஏற்படுத்துவதும் இதன் இன்னொரு நோக்கமாகும்.

சஞ்சீவி

கருத்திட்டப் பிரதேசத்தில் சுகாதாரச் செயற்பாடுகளுக்கானது இதற்கென தனியாக ஒரு மருந்தகமும் உண்டு. இந்த மருந்தகத்தில் கிடைக்கும் இலாபங்கள் சுகாதார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

செவ்வந்தி

கல்வி சார்ந்த செயற்பாடுகளுக்கானதாகவிது காணப்படுகிறது. புத்தகங்கள் எழுதுசாதனங்களென்பவற்றைப் புத்தகக் கடையில் இருந்து விற்பதன் மூலம் கிடைக்கும் இலாபம் கல்விச் செயற்பாட்டிற்காகவும் ஒரு நூலகப் பராமரிப்பிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

கஸ்தூரி

கணனி தொடர்பான கல்விக்கும் ஆரம்பக் கல்விக்குமான பயிற்சி நிலையம் ஆகும். இங்கிலாந்து பரீட்சைகளுக்காக இந்த நிலையம் மாணவர்களைத் தயார் செய்வதோடு போரினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவி வருகிறது.

துளசி

பாடசாலைப் பெண்களுக்கான சீருடைகளைத் தயாரிக்கும் தையல் நிலையம் இதுவாகும். ஸ்ரீமதி அதிபர்களின் சிபார்சித்த அமைய பிள்ளைகள் சீருடைகளுக்கான பணத்தை தவணைமுறையில் செலுத்துகின்றார்கள். கைம்பெண்களுக்கு வேலைவாய்ப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிப்பதோடு மட்டுமன்றி நாசியால் வரும் வாடத்தில் நேரம் இருமு கைம்பெண்களுக்கும், இளம் பெண்களுக்கும் தையல் துறையில் பயிற்சியும் அளித்து வருகின்றது.

குறிச்சி

க.பொ.த.சாதாரணம், க.பொ.த.உயர்தரம் வகுப்புகளுக்குத் தம்மைத் தயார் செய்யவும் வறிய பிள்ளைகளுக்கும் வாசிப்பதற்குத் தேவையான தகவல்களைச் சேகரிப்பதற்கும் பயன்படும் நூல் நிலையம் இதுவாகும். செவ்வந்தியின் உதவியுடன் இது பராமரிக்கப்படுகின்றது.

போரூட் யாழ்ப்பாணம் மேற்குக் கருத்திட்டம்

உப உணவுப் பயிர் உற்பத்தி (எள்ளு)

நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த நிலையால் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்தது பொதுவாக சாதாரண மக்களுக்கும், குறிப்பாக ஏழை மக்களுக்கும் தமது நாளாந்த தேவைகளை சமாளிக்க முடியாது திணறுகிறார்கள். மக்கள் தமது சொந்த உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உதவவேண்டும். என்பதற்காகவும் யாழ்ப்பாணம் மேற்கு போரூட் 1991 மார்ச்சில் மக்களுடன் கலந்து ஆலோசித்து ஒரு பயிர்ச் செய்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. தம்முடைய சொந்தக் காணிகளிலோ அல்லது குத்தகைக் காணிகளிலோ கமக்காரர் எள்ளைப் பிரதானமாகவும், குரக்கன் போன்ற ஏனையவற்றை உப பயிராகவும் பயிரிடச் செய்வதற்கான திட்டமே இதுவாகும். சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை, சங்கானை, உப அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள கிராமங்களிலேயே இந்தப் பயிர்ச் செய்கைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

| உதவி.அ.அ.பிரிவு | கிராமங்கள் |
|---|---|
| சண்டிலிப்பாய் | சண்டிருப்பு<br>உயரப்புலம் |
| ஊர்காவற்றுறை | மடத்து வெளி<br>வைத்தலை (காரைநகர்) |
| சங்கானை | ஏலியட்டபம், மடத்தடி, சித்தங்கேணி, தொல்புரம், பெரியவடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1, <u>உ,த,எ,பிரிவு</u> – <u>சண்டிலிப்பாய்</u>

| | | |
|---|---|---|
| பயிர் செய்யப்பட்ட ஏக்கர் | – | 25 |
| சம்பந்தப்பட்ட குடும்பங்கள் | – | 36 |
| விதையாகக் கொடுக்கப்பட்டஎள்ளு | – | 18 கிலோ |

2. <u>உ.த.எ.பிரிவு</u> – <u>ஊர்காவற்றுறை</u>

| | | |
|---|---|---|
| பயிர் செய்யப்பட்ட ஏக்கர் | – | 05 |
| சம்பந்தப்பட்ட குடும்பங்கள் | – | 21 |
| விதையாகக் கொடுக்கப்பட்டஎள்ளு | – | 06 கிலோ |

3. <u>உ.த.உ.பிரிவு – சங்கானை</u>

| | | |
|---|---|---|
| பயிர் செய்யப்பட்ட ஏக்கர் | – | 70 |
| சம்பந்தப்பட்ட குடும்பங்கள் | – | 93 |
| விதையாகக்கொடுக்கப்பட்ட எள்ளு | – | 58 கிலோ |

| | | |
|---|---|---|
| மொத்தப் பயிர் செய்யப்பட்ட ஏக்கர் | – | 100 |
| மொத்தமான சம்பந்தபட்ட குடும்பங்கள் | – | 150 |
| மொத்த விதையாகக் கொடுக்கப்பட்ட எள்ளு | – | 82 கிலோ |

குரோட்டர் ஏரியா என்ட்டரும் பயிர் விதை 4 கிலோவும் குரக்கன் 75 கிலோவும் எள்ளுடன் கூடவே பயிரிடப்பட்டதற்காகக் கொடுக்கப்பட்டது. எள்ளு 3 மாத காலத்தில் அறுவடை செய்யப்படக் கூடிய ஒரு குறுகிய காலப் பயிராகும். இதுவும் தவிர இதற்கு நீர்ப்பாசனம் வேண்டியதில்லை. மழையோடு விதைப்புச் செய்யலாம். எள்ளுச் சத்துக்கள் நிறைந்த ஒரு உணவு என்பது மட்டுமல்ல. புரதமும் எண்ணெய்த் தன்மையும் கொண்டிருப்பதோடு அயடின் சத்தும் இதிலே உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பயிர் இப்போது அறுவடை செய்யப்படுகின்றது. ஏறத்தாழ 6500 கிலோ எடையுடைய நெல் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தக் காலப் பகுதியில் கமக்காரருக்கு விநியோகிப்பதற்காக நெல்விதை வங்கியை ஏற்படுத்துவதற்கு இந்த அறுவடையில் 164 கிலோ நெல்லைக் கமக்காரர்கள் இதற்கென வழங்குவார்கள்.

இந்தக் கருத்திட்டம் மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள நல்லெண்ணம் கொண்ட சங்கங்களின் ஒத்துழைப்போடு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

போரூட் யாழ்ப்பாண மேற்குக் கருத்திட்டம்

உணவு விநியோகம்

1991 மே 25ம் திகதி ஊர்காவற்றுறை, காரைநகர் போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக ஊர்காவற்றுறை, வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து யாழ்ப்பாணம், சங்கானை, நல்லூர் உ.அ.அ.பிரிவுகளுக்கு 21000 குடும்பங்கள் இடம் பெயரவேண்டி ஏற்பட்டது. இந்த 21000 குடும்பங்களுள் 4000 குடும்பங்கள் 17 அகதி முகாம்களில் வசிக்கின்றார்கள். இம்முகாம்கள் அரச கொடுக்கின்ற உலர் உணவுகளுடன் அரச சார்பற்ற உதவி நிறுவனங்களால் பராமரிக்கப்படுகின்றன. முதல் இரண்டு நாட்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தயார் செய்யப்பட்ட உணவோடும் அடுத்த இரு நாட்களும் அரச கொடுத்த அவ்வாறான உணவோடும் மக்கள் வாழ நேர்ந்தது.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் (எமது கருத்திட்டக் கிராமமான சின்ன மருவில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள்) 160 குடும்பங்களை ஒரு மாதத்திற்கு பராமரித்தது. இப்போது அவர்கள் தற்காலிக கொட்டில்களில் அரச கொடுக்கின்ற தற்காலிக நிவாரண உலர் உணவுப் பொருட்களுடன் வாழ்க்கை நடாத்துகின்றார்கள். காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுள் 90% சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இணைந்து வாழ்கின்றார்கள். சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைந்து போரூட் – யாழ்ப்பாணம் மேற்குக் கருத்திட்டம் செயலகம் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் இடம் பெயர்ந்தோர் தங்கு வந்த இரண்டாம் நாளுக்குத் தேவையான உலர் உணவை விநியோகித்தனர். ~~இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகிப்பதில் அரசோடு எமது~~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகிப்பதில் அரசோடு எமது நிறுவனம் மிக நெருக்கிய தொடர்பை வைத்துக் கொண்டுள்ளது. 1991 மே மாதம் 4835 குடும்பங்களுக்கு 20 மெட்ரிக் தொன் உணவு பொருட் நிறுவனம் விநியோகித்தது. சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு வடக்கம்பறை என்னும் இடத்தில் இயங்கும் காரைநகர் கூட்டுறவுச் சங்கத்திடம் போதியளவு உணவுப் பொருட்கள் கையிருப்பில் இல்லை. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் பணிப்புரைக்கு இணங்க இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகப்படுவதற்காக பொருட் யாழ் மேற்குப் பிரிவிற்கு அரச உணவுப் பொருட்கள் 48 மெட்ரிக் தொன் கொடுக்கப்பட்டது.

<u>போரூட் யாழ்ப்பாணம் கிழக்கு</u>

யாழ்ப்பாணம் கிழக்கு பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி/ ஆகிய மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் உதவி செய்கிறது.

சமூக அபிவிருத்திப் பணிக்காக 38 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மருதங்கேணிப் பிரிவில் 10 அகதி முகாம்களுக்கு ஆதரவு அளிக்கப்பட்டு வருகிறது

பாடசாலை செல்லாத குழந்தைகளுக்கான 23 கல்வி நிலையங்கள் நடாத்தப்படுகின்றன.

நூல் நிலையங்கள்

கல்வி நிலையங்கள்

தையல் நிலையங்கள்

பாடசாலை செல்லாத குழந்தைகளின் ஆசிரியர்களுக்கான பயிற்சி

சுகாதாரக் கருத்துரையாடல்கள்

வைத்திய உதவி

பாடசாலை ஆதரவுத் திட்டங்கள்

கைத்தொழில் வருவாய்க்கான சுழல்வீட்டுக் கடன்

குளங்கள் புனரமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கான வீட்டுப் உதவிகள்

கைம்பெண்கள், அநாதைகள், அங்கவீனர்கள் என்போருக்கான வருவாய் ஊக்குவிப்பு உதவி

வைத்தியசாலைக்கான உதவி

நீர்

சுகாதாரம்

மருவிக்கு

சமூக சுகாதாரமும், நோய்த்தடுப்பும்

## போரூட் யாழ்ப்பாணம் மேற்கு செயற்பாடுகள்

சங்கானை, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 18 பின்தங்கிய கிராமங்களையும் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 21 சேமநல நிலையங்களையும் பராமரித்து மேற்கொள்ளும் செயற்பாடுகளைச் செய்து வருகிறது.

குழந்தைகளுக்கான பாடசாலைகள்

சத்தூட்டல்

கல்விக் குழுக்கள்

நூல் நிலையங்கள்

பண்பாட்டுத் திட்டம்

விளையாட்டுக்கள்

கல்விப் பயிற்சியும், அதை தொடர்பான செயற்பாடுகளும்

வருவாய் ஊக்குவிப்புக்கள்

மிருக வளர்ப்பு

மீன் வளர்ப்பு – மீன்பிடிப்பு

விவசாயம்

சமூக சுகாதாரமும், தடுப்பு முறைகளும்

உணவூட்டத் திட்டம்

சுற்றுப்புறப் பாதுகாப்பு

வீட்டு வசதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்

சுகாதாரம்

மருந்துக்கு

தேவையானோர்க்கு உதவி

பாடசாலை செல்வோருக்கான ஆதரவுத் திட்டம்

குளங்கள் திருத்துதல்

நிர்வாகச் செயற்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் – மறை மாவட்ட மனித முன்னேற்ற நிலையம்

உலகின் எட்டுத் திக்கும் பரந்து இயேசு கிறிஸ்துவின் பொய்யா மொழி வழி செல்லும் கத்தோலிக்கத் திருச்சபையின் நீதி, சமாதான அபிவிருத்தி ஆணைக்குழு செயலாற்றுகின்றது. இலங்கை ஆயர் பேரவையின் சமூகப் பணிக் கரமாகிய "சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிலையம்" இதன் செயலகம் ஆகும். யாழ் மறை மாவட்டத்தின் (யாழ் முல்லை கிளிநொச்சி மாவட்டத்தின்) நீதி சமாதான அபிவிருத்தி ஆணைக்குழுவின் செயலகம் "மனித முன்னேற்ற நிலையம்" (            ) என அழைக்கப்படுகின்றது. இது 1973ம் ஆண்டு யாழ் ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் பெரு முயற்சியினால் ஆரம்பிக்கப் பட்டது. இந்நிலையமானது நாட்டில் நீதி தழைத்தோங்கவும்சமாதானம் நிலவவும் சாதி சமய மொழிகளை இவை வேறுபாடு இன்றி சகல துறைகளிலும் செயலாற்றி வருகின்றது.

## நிலையத்தின் செயல்ப்பாட்டு முறை

மக்களின் இன்ப துன்பங்களும் தேவைகளும் மக்கள் மத்தியில் வாழும் பங்கு தந்தையர்கள்(பங்குக் குருக்கள்) மூலமாக நிலையத்திற்கு அறிவிக்கப்படுகின்றன. முறைகளை அறிந்ததும் யாழ் – ஆயரின் அனுமதி பெற்று பங்குத் தந்தையர் வழியாகவே உதவிகள் செய்யப்படுகின்றது. இயற்கை அல்லது மனிதனால் ஏற்படும் அழிவுகளின் போது வடக்கு – கிழக்கு கத்தோலிக்க நிவாரணப் பணியகம் வழியாக வும் அபிவிருத்திட்டங்களுக்கு "செடெக்" நிலையம் மூலமாகவும் உதவிகள் பெற்று வழங்குவதற்காக இவ் அமைப்புக்களின் பங்காளியாக நிலையம் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள்

↓

குழுக்கள்
(நீர்ச்சபை நிறுவனங்கள்)

↓

யாழ் மாவட்ட ரீதியான சமாதான ஆணைக் குழு

↓

மனித முன்னேற்ற நிலையம்

↓

யாழ் மறைமாவட்ட ஆயர்

↓

வடக்கு கிழக்கு நிவாரண அமைப்பு

↓

சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிலையம்

↓

இலங்கை ஆயரவை நீதி சமாதான அபிவிருத்தி நிலையம்

↓

சர்வதேச சமாதான அபிவிருத்தி ஆணைக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## HUDEC அமைப்பும் செயல்பாடும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>நிலையத்தின் பணிகள்</u>

அகதிகள் நிவாரணம்

அகதிகள் புனர்வாழ்வு

இயற்கை அழிவுகளின் நிவாரணம் – புனர்வாழ்வு

இனக்கலவரங்களின் நிவாரணம் – புனர்வாழ்வு

தடைச்சட்டங்களால் பாதிக்கப்படுவோர் நிவாரணம்

நீதி சமாதானத்தினை தேடித் தொடர்புகள்

குடிநீர் வசதி

இல்லிட அமைப்பு

சுயதொழில் வாய்ப்பு

மீனவர் உதவித் திட்டம்

விவசாய உதவித் திட்டம்

கால்நடை, கோழிப்பண்ணை உள் உதவி

நூல் நிலையம்

சுகாதாரப் பயிற்சி

தலைமைத்துவப் பயிற்சி

இளைஞர் பாசறைகள்

சமூக மாற்று அமைப்பு முறைகள்

ஆரம்பக் கல்வி

தொழிற் கருத்தரங்குகள்

முறைசாராக் கல்வி

கருத்தரங்குகள்

கலை நிகழ்ச்சிகள்

<u>நிலையத்தின் நிவாரணப் பணியின் வகைகள்</u>

<u>பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம்</u>

1983 இல் இருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளிலேயே நிவாரண வேலை பெரும்பாலும் நடைபெற்றது. பின்னர் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தால் யாழ்ப்பாணப் பகுதிக்கும்இது விஸ்தரிக்கப்பட்டது. வேலைக்குப் போக முடியாத நிலையில் இருந்த மீனவக் குடும்பங்களுக்கும், பிற தொழில் புரிவோருக்கும் பங்குக் குழுக்களின் மூலம் ஏனைய மதத் தலைவர்கள் மூலமாகவும் நிவாரணம் வழங்கப் பட்டது. சில சமயங்களில் முழு மறை மாவட்டமும் பிரச்சனையில் மூழ்கி இருந்த போது 64இற்கும் மேற்பட்ட நலன்புரி நிலையங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கப் பட்டது.

## தடுப்புக் காவலில் உள்ளோர்க்கு நிவாரணம்

முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டோருக்கு உடைகள், சவர்க்காரங்கள் போன்றன 200 ரூபா வரை அளிக்கப்பட்டது. பூசா முகாமிலேயே 699 பேர் இவ்வாறு உதவி பெற்றனர். முகாம்களில் உழைக்கும் அங்கத்தவர் தடுப்புக்காவலில் இருந்தால் அக்குடும்பங்களுக்கு மாதாந்தம் உதவிப்பணம் அல்லது ஒரே முறையில் முதலீட்டுக்காக 2400 ரூபா வழங்கப்பட்டது.

## உயிரிழப்பிற்கு நிவாரணம்

வன்செயல்கள், இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இறந்தவர்களின் மரணச் சடங்கிற்காக உடனடியாக 500 ரூபா அளிக்கப்படுகின்றது. இறந்தவர் உழைக்கும் அங்கத்தவரானால் மேலும் உதவிகள் வழங்கப்படும்.

## விடுதலை பெற்றோருக்கு புனர்வாழ்வு

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு பூசா வெலிக்கடைத் தடுப்பு முகாம்களில் வைத்து சித்திரவதைக்குள்ளாகி விடுதலை பெறும் அப்பாவிகளுக்கு அவர்களின் கைத்தொழில் முதலீட்டுக்காக ஒரு குடும்பத்திற்கு 2400 ரூபா வழங்கப்படுகின்றது. மிக ஏழைக் குடும்பங்களுக்கு மேலதிக உதவிகளும் கொடுக்கப்படுகின்றன.

## உழைக்கும் அங்கத்தவரை இழந்த குடும்பங்களுக்கு

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக உழைக்கும் அங்கத்தவரை இழந்த குடும்பங்களின் புனர்வாழ்வுக்காக ஆரம்பத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்டோருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10,000 ரூபா முதல் 20,000 ரூபா வரையான உதவி வழங்கப்பட்டது. உதவி கோருவோர் தொகை அதிகரித்த போது நிலையத்தின் நிதி நிலைமைக்கு ஏற்ப உதவித் தொகை குறைக்கப்பட்டது. தற்பொழுது முதலீடாக 2400ரூபாவும் வழங்கப்படுகின்றது. சிலக் குடும்பங்களுக்கு அதிக முதலீடு தேவைப்படுவதால் அவர்களுக்கு மேலும் 10,000 ரூபா கடனாக வழங்கப்படுகிறது.

## உழைப்போரை இழந்தவிடத்து ஒன்றிணைந்த அபிவிருத்தி

மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சில இடங்களில் வழங்கப்படும் நிவாரணப் பணம் வீடமைப்பு, கல்வி, பராமரிப்பு போன்ற பிற தேவைகளுக்குச் செலவிட அனுமதிக்கப்படுகின்றது. வெலிக்கடையில் கொலையுண்டோரது 31 குடும்பங்களுக்கும் 45986040 ரூபாவும், குருநகர் சம்பவத்தில் கொலையுண்டோரது 20 குடும்பங்களுக்கும் 34316775 ரூபாவும் கோப்பாயில் 36 குடும்பங்களுக்கும் ஒரு குடும்பத்திற்கு தலா 10,000 ரூபாவும் நிவாரணமாக வழங்கப்பட்டது.
வழக்கமாக வழங்கப்படுகின்ற இரண்டு சக்கர உழவு இயந்திரம், கல்லுடைக்கும் இயந்திரம், அரைக்கும் இயந்திரம் ரேடியோ, சைக்கிள் திருத்தும் கருவிகள் முதலியவையும் வாடகைக்கு விடப்படும். கதிரை, பிங்கான் முதலியவையும் பல கிராமங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. பட்டம், பிளாஸ்டிக் பைகள், பீப்பி வலைகள், கற்பூரம் போன்றவற்றை உற்பத்தி செய்யும் சிறு கைத்தொழிலுக்கான பயிற்சியும் சில கிராமங்களில் அளிக்கப்பட்டுள்ளது.

## உடல்நல சேவை

1987 அக்டோபர் நடவடிக்கைகளின் போது 36 கிராமங்களுக்கு வைத்திய உதவிகள் அளிக்கப்பட்டது. நிலையத்தில் ஒரு வைத்திய நிலையம் இயங்கி வருகிறது. நடமாடும் வைத்தியர் பிரிவும் நிலையத்திடம் உண்டு. தேவைப்படும்போது அது பங்குகளுக்கும், கிராமங்களுக்கும் சென்று பணிபுரியும். ஏற்கனவே 734 சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இன்னும் பலர் பயிற்றுவிக்கப்பட்டு உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>உளநல சேவை</u>

பயங்கர சம்பவங்களால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக உளநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கும் சிகிச்சை அளிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் ஒரு உளவியல் சிகிச்சை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகுதி பெற்ற வைத்தியர் இவர்களுக்கு சிகிச்சை அளிக்கின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்டோரையும் பராமரிப்பதற்காக தொண்டர்கள் பயிற்றப்படுகின்றனர்.

<u>ஊனமுற்றோருக்கு உதவி</u>

இராணுவ நடவடிக்கைகளின் போது துப்பாக்கிச் சூடுகள், செல் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கால் இழந்தவர்களுக்கு ஊன்றுகோல்கள் கொடுக்கப்படுகின்றன. செயற்கைக் கால் வேண்டுவோருக்கு சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் இருந்து அதைப் பெற்றுக் கொள்ள ஒழுங்கு செய்யப்படுகின்றது.

<u>போஷாக்கு அற்ற சிறுவர்களுக்கு உணவு</u>

நிலையத்தினால் 10,000 பிள்ளைகளுக்கு திரிபோஷா வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது. 1989 இல் திரிபோஷா பெற முடியவில்லை. ஆறு வயதிற்குட்பட்ட போஷாக்கற்ற பிள்ளைகளுக்கு பால்மா விநியோகிக்கப்படுகிறது.

<u>போக்குவரத்து</u>

பெரும்பாலான புனர்வாழ்வு நிலையங்களில் பொருட்களைக் கொண்டு செல்ல போதிய வாகன வசதிகள் இல்லை. அத்தியாவசியப் பொருட்களான உணவு, உடை, மருந்து வகைகள், சீமெந்து, பாத்திரங்கள் போன்றவற்றை நிலையத்தின் வாகனங்கள் அங்கு எடுத்துச் செல்கின்றன. எந்த ஆபத்தான வேளையிலும் வாரந் தோறும் கொழும்புக்குச் சென்று வருவது நிலையத்தின் நிவாரணப் பணிக்கு இன்றியமையாதது ஆகின்றது.

<u>விற்பனை நிலையம்</u>

நிலையம் கொண்டிருக்கும் புனர் வாழ்வு நிலையங்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்கு யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயத்தின் முன் ஒரு விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கு நிலையம்

பண்டத்தரிப்பு, அச்சுவேலி, உருத்திரபுரம் ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் கருத்தரங்குகளை நடாத்துவதற்கு புனித பத்திரிசியார் வீதியில் ஓர் இடம் வாடகைக்கு அமர்த்தப் பட்டுள்ளது. இந்த நிலையத்தினால் பல்வேறு இடங்களில் கருத்தரங்குகள் நடை பெற்று வருகின்றன.

## இயற்கை அழிவு நிவாரணம்

வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை அழிவுகளில் மேலும் நிவாரணம் வழங்கப் படுகின்றன. மக்கள் ஏதாவது கிராமங்களில் இருந்து பாதிக்கப்பட்டால் தொகையும் தேவை பற்றிய விபரமும் நிலையத்திற்கு அறிவிக்கப்படும். நிலையம் உடனடி நடவடிக் கை எடுப்பதன் மூலம் நிவாரணம் வழங்கப்படும்.

## வேண்டுகோளின் பேரில் நிவாரணம்

யாழ் அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க 370 குடும்பங்களுக்கும் கிளிநொச்சி அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க 140 குடும்பங்களுக்கும் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. நல்லை ஆதீனக் குருக்கள் முஸ்லிம் மௌலவி ஆகியோர் ஊடாக 349 குடும்பங்களுக்கும் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனர்வாழ்வுப் பணி

இலங்கையில் 1958 ம் ஆண்டுக்குப் பின் பல இனக்கலவரங்கள் காரணமாக பாதிப்புற்றோர் தொகை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. தமிழர் சிறுபான்மை யாக உள்ள தென்பகுதியில் வாழும் மக்களே முதல் பாதிப்புக்கு உள்ளாகினர். மத்திய மலை நாட்டில் வாழும் இந்திய வம்சத்தினர் பலர் தமக்கு ஆபத்து நேர்ந்த போது வடக்கிலுள்ள பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். இவர்கள் குடிவாசல், தொழில்துறை, பாதுகாப்பு, எதுவுமின்றி அல்லற்பட்டனர். ஏனெனில் இவர்களுக்கு உறவினர்களோ வேறு தொடர்புகளோ இல்லை. ஆகவே வடக்கில் உள்ள மக்கள் இவர்களுக்கு கைகொடுத்து உதவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஆனால் வடக்கிலும் பூரண பாதுகாப்பு இருந்தது என்று கூற முடியாது. பல இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு இருந்தன. இராணுவத்தினருக்கு அழிவுகள் நேரும் போதெல்லாம் பழிவாங்கும் நடவடிக்கையாக பொது மக்களின் உயிருக்கும் பொருளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

ஈற்றில் 1983ம் ஆண்டு கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்களின் விளைவாக ஆயிரக் கணக்கானோரின் உயிருக்கும், பொருள் பண்டங்களுக்கும் அழிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து 18215 தமிழர்கள் கடல் மார்க்கமாக கப்பல் மூலம் காங்கேசன் துறைக்குக் கொண்டுவரப்பட்டனர். விமான மூலமும், புகையிரத மூலமும் நெடுஞ் சாலை வழியாகவும் அகதிகள் வந்த வண்ணம் இருந்தனர். காங்கேசன் துறைமுகத்தில் ஏனைய தொண்டர் ஸ்தாபனங்களுடன் நிலையத்தின் தொண்டர்கள் 25 பேர் கடுமை யாக உழைத்தனர். ஊரடங்கு, இராணுவ நடமாட்டம் போன்ற இடையூறுகளின் மத்தியில் காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்குப் போக்குவரத்து வசதிகளை நிலையம் செய்தது. இவ்வாறு வந்து சேர்ந்த அகதிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் குடியேற்றப்பட்டனர். அகதிகள் தொகை அதிகரித்தமையினால் பல்வேறு முகாம்கள் அமைக்கப்பட்டது. வேறு தொண்டர் ஸ்தாபனங்களிடம் முகாம்கள் ஒப்படைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறைகளும், உள்நாட்டுப் போரும் அதிகரித்து வந்ததால் மறை மாவட்டத்தில் உள்ள சகல பங்குகளையும் நிலையத்தின் முகவர்களாகக் கொண்டு 57 பிரிவுகளின் ஊடாகச் செயலாற்றப்பட்டு வருகின்றது. வைத்திய நிலையங்களும் 36 தொடக்கப்பட்டுள்ளன. பாதிப்புற்றோர் வருமானம் பெறக் கூடிய திட்டங்களில் ஈடுபடுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். இவை வெறும் திட்டங்கள் அல்ல. அர்ப்பணம் மிக்க மனிதாபிமானப் பணிகளாகும். பௌதீக பொருளாதார அபிவிருத்தி மட்டுமல்ல. சமுதாய முன்னேற்றமும் நிலையத்தின் நோக்கமாகும். குடியேற்றப்பட்ட அகதிகள் ஆரம்பத்தில் இருந்தே சுய முயற்சி உடையவர்கள் தம் மட்டத்திலும் தம்மை சூழ்ந்துள்ள கிராம மக்கள் மட்டத்திலும் பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாக இருக்கும் படி அவர்கள் வழி நடத்தப்பட வேண்டும்.

## <u>அபிவிருத்திப் பாதையில் அபிவிருத்தித் திட்டங்கள்</u>

தற்போதைய நாட்டு நிலைமைகள் காரணமாக பாரிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்க முடியாமல் போனது மட்டும் அல்லாமல் ஏற்கனவே நடைமுறை படுத்தப்பட்டு வந்த பல்வேறுசிறிய சிறிய செயல்த்திட்டங்கள் கூட தடைப்படும் நிலையேற்பட்டுள்ளது. நிவாரணம் புனர்வாழ்வு போன்ற செயற்பாடுகளும், செயற் திட்டங்களுமே மிகவும் அத்தியாவசியமானவையாக நிலையத்தினால் மேற்கொள்ளப் படுகின்றன. இருந்தும் பால் பாடசாலைகள் சுகாதாரப் பயிற்சி, சுயதொழில் வேலைவாய்ப்புப் போன்ற திட்டங்கள் ஓரளவு தடையின்றி நடைபெற்று வருகின்றன. நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் சமூக அபிவிருத்தித் திட்டங்களை நான்கு பிரிவு களாகப் பிரிக்கலாம்.

1. பாலர் கல்வி
2. சயநம்பிக்கை ஏற்படுத்தும் , கைத்தொழில் பயிற்சியும், வருமானம் பெறும் திட்டங்களும்.
3. கல்வி
4. சுகாதாரம்

மேற்குறிப்பிட்ட செயற் திட்டங்களின் செயற்பாடுகள் அநேகமானவை குறிப்பிட்ட சமூகத்துடன் தொடர்பு கொண்டு அவர்களின் முன்னேற்றத்திற்கு ஆகிய பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வதற்கு நுழைவாயில்களாகப் பயன்படுத்தப் படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாத பல திட்டங்களை திணிப்பதை விட மக்களுக்கு அவர்களின் நிலைமையை உணர வைத்து முன்னேற்றத்திற்கு வேண்டிய செயற்பாடுகளை அவர்கள் அறிந்து தாமாகக் குழுக்களை உண்டு பண்ணி அக்குழுக்களின் ஊடாக அபிவிருத்தித் திட்டம் பாதையில் முன்னேற வைப்பது நிலையத்தின் நோக்கமாகும்.

<u>சுயநம்பிக்கை ஏற்படுத்தும் தொழிற்பயிற்சியும், வருமானம் பெறும் திட்டங்களும்</u>

குறிப்பாக பாடசாலைப் படிப்பை முடித்த வீட்டில் இருக்கும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் அவர்கள் தமக்கென ஒரு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தவும் அவற்றால் பெறப்படும் வருமானத்தால் குடும்பச் செலவுகளில் ஒரு பகுதியினை ஈடு செய்யவும் இத்திட்டம் உதவுகின்றது.

| பயிற்சி | இடம் |
|---|---|
| தையல் | பண்டத்தரிப்பு மகளிர் அபிவிருத்திச்சங்கம் |
| தட்டச்சு | சில்லாலை இளைஞர் கழகம் அறணி இளவாலை |
| உணவுப்பொருட்கள் தயாரித்தல் | கிளிநொச்சி, கோப்பாய் |
| உடை உற்பத்தி நிலையம் | மல்லாகம் |
| ஓட்டுவேலை | மிருசுவில், கரம்பொன், யாழ்ப்பாணம் கோப்பாய் |
| விவசாயம் | மயிலிட்டி |
| மாடு, கோழி வளர்ப்பு | மிருசுவில், பொன்நகர், யாழ்ப்பாணம் |
| தும்புத் தொழில் | ஜெயந்திநகர், மணியந்தோட்டம் |

மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக நவாந்துறையில் மூன்று இலட்சம் ரூபாவில் ஒரு கடனுதவித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. சமுதாயத்தில் மிகவும் ஒடுக்கப்பட்டோர் எனக் கருதப்படும் திருநகர் மக்களுக்காக கிட்டத்தட்ட பன்னிரண்டு இலட்சம் ரூபா அளவில் ஒரு பாரிய வீடமைப்போடு கூடிய மாடு, கோழிப்பண்ணைகள் கொடிகாமத்தில் மேற்கே கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட திட்டங்கள் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட கலவரங்கள் ஆலும். இராணுவ நடவடிக்கைகளினாலும் மிகவும் பாதிக்கப்பட்டாலும் இன்னும்தொடர்கின்றன. என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை போன்ற மேலும் பல செயற் திட்டங்கள், புனர்வாழ்வுத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப் படுகின்றன.

## குடிநீர் விநியோகம்

நல்ல குடிநீர் கிடையாத பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. குழாய்க் கிணறுகளும், திறந்த கிணறுகளும் இத்திட்டத்தின் கீழ் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. இவை தனியாருக்கல்லாமல் குழுக்களாகப் பயன்படுத்தப்படும்வகையில் தீர்மானிக்கப்படுகின்றன.

## மலசல கூடங்கள்

மலசலகூட வசதியற்ற காரணத்தால் மிகவும் அசுத்தமடையும் கிராமங்களில் வசதியற்றோருக்கு மலசலகூடங்கள் அமைத்துக் கொள்வதற்கு உதவிகள் மேற்கொள்ள படுகின்றன.

## நிலையத்தின் இன்றைய பணிகள்

யாழ் – மனித முன்னேற்ற நடு நிலையம் முழுமையான ஒரு கத்தோலிக்க நிறுவனம். இது யாழ் ஆயரின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றது. இதன் சமூக பணிகள் வழியாக மனித முன்னேற்றத்திற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளது. அதற்கு மதம், இனம், சாதி போன்ற மதிலால் வரையறுக்கப்பட்டவை ஒரு தடைக் கல்லாக இருந்ததும் இல்லை.

ஆகவே தான் இலங்கையில் காலத்திற்குக் காலம் நிகழ்வுற்று முடிந்த இனக் கலவரங்களினால் கட்டவிழ்த்து விடப்பட்ட கொள்ளை, படுகொலை போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எல்லா வகையிலும் தனது தகுதிக்குட்பட்ட எல்லா உதவிகளையும் புரிந்து வந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக 1990 ஜுனி மாதம் 13ம் திகதி அரசினால் பிரகடனப் படுத்தப்படாத யுத்தம் தமிழ் மண்ணிலே தமிழ் மக்களுக்கு எதிராக ஆரம்பமானது. அரசின் கட்டுப்பாட்டை மீறி படைப்பிரிவுகள் தன்னிச்சையாக இயங்க ஆரம்பித்தன. அதன் விளைவாக விமானத்தில் இருந்து ஆலயங்கள், பாடசாலைகள், மருத்துவ மனைகள், குடியிருப்புக்கள் என்ற பேதமின்றி குண்டுகள் வீசப்பட்டதினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேக மக்கள் வீடு வாசல்களை விட்டு வெளியேறி கையில் கிடைத்த எஞ்சிய சொத்தாகக் கருதி அகதிகளாகத் வேறு மாவட்டங்களுக்கு பாதுகாப்புத் தேடி ஓடினார்கள்.

திடீர்க்கதியாக அகதிகளாக எல்லாரும் மக்களுக் யாழ் மனித முன்னேற்ற நடுநிலையத்தின் பணிகள் மீளவும் தொடர ஆரம்பித்தன. 1990 ஜூன் மாதம் 13ம் திகதி முதல் விரிவாக்கப்பட்ட பங்குத் தந்தையர்களின் ஊடாக ஒவ்வொரு பங்குத் தந்தையும் தனது பங்கில் உள்ள தேவாலயம் பாடசாலை போன்ற இடங்களில் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான உணவு, உடை மருத்துவ வசதி, இருப்பிட வசதி நீர் வசதி மற்றும் மலசலகூடம் போன்ற அத்தியாவசிய வசதிகளை செய்து கொடுத்து வந்துள்ளது. இப்படியான சேவைகளைச் செய்யும் போது குருக்கள், கன்னியர்கள் கூட பாதுகாப்புப் படையினரால் வீண் சிரமத்திற்குக் கடும் கடும் தாக்குதலுக்கும் உட்படுத்தப்பட்டனர். அப்படி இருந்த போதிலும் அவர்கள் பணி ஓயவில்லை. யாழ் போதனா வைத்தியசாலை குண்டு வீச்சினால் பாரிய சேதத்திற்கு உள்ளானதின் பேரில் பெருந் தொகையான மக்கள் வசதி இன்மையால் மிகவும் சிரமத்திற்கு உள்ளானார்கள். போதனா வைத்தியசாலையின் பணிப்பிரிவுகள் பல மானிப்பாய் மருத்துவ மனைக்கு மாற்றப்பட்ட போதிலும் மக்களின் அதி அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இந்நிலையில் இந்நிலையம் கைகொடுத்து உதவியுள்ளது. அதாவது நடமாடும் மருத்துவப் பிரிவு தேவைப்பட்ட மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியோடு சென்று தனது சேவைகளை ஆற்றியுள்ளது. இவ்வாறு குண்டுபட்ட, வெட்டுக்காயப்பட்டவர்கள் மாத்திரம் 1149 நபர்கள் நிலயத்தைச் சார்ந்த28 பங்குத் தந்தையர்களினால் 94 அகதி முகாம்களில் 14437 குடும்பங்கள் அதாவது 72138 அங்கத்தவர்கள் இதுவரைபராமரிக்கப்பட்டுள்ளனர். அவற்றுள் ஒரு வயதிற்கும், ஐந்து வயதிற்கும் உட்பட்டதுமான குழந்தைகள் முறையே 1154, 2487 இவர்களுக்கு இது வரை வழங்கப்பட்ட உலர் உணவின் விபரம் பின்வருமாறு:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அரிசி | 1370 | மூடை |
| மா | 710 | மூடை |
| சீனி | 650 | மூடை |
| பருப்பு | 528 | மூடை |
| பயறு | 382 | மூடை |
| தேயிலை | 1880 | கிலோ |
| லக்டோஜன் | 1474 | பெட்டி |
| பால்மா | 11722 | பக்கற் |
| தீப்பெட்டி | 1600 | பெட்டி |
| உப்பு | 15 | மூடை |
| தேங்காய் எண்ணெய் | 317 | போத்தல் |
| புளி | 15 | மூடை |
| உள்ளி | 283 | மூடை |
| சவர்க்காரம் | 8243 | கட்டி |
| பேரீச்சம்பழம் | 20 | மூடை |

இவற்றை விட ஒவ்வொன்றும் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று லொறி உணவுப் பொருட்கள் கிளிநொச்சிக்கும் 7 லொறி உணவுப் பொருட்கள் முல்லைத் தீவிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. இன்னும் முற்றாக வீடுகளை இழந்த பல குடும்பங்களில் 75 குடும்பங்களுக்கு 300 வீதம் 45000 ரூபாய்கள் வழங்கப்பட்ட. இதை விட 500 குடும்பங்கட்கு மேற்படி உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இவற்றுடன் 1990ம் ஆண்டு ஆனி மாதம் தொடக்கம் கார்த்திகை வரை பங்குத் தந்தையர் வழியாக 5429524 ரூபா பணமாக அகதிகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதியுதவி வழங்குவோர்

நிலையத்தின் செயற்பாடுகளுக்கு யாழ் - மறை மாவட்ட ஆயரும் அவர்கள் மூலமான வெளிநாட்டு உள்நாட்டு நிதியுதவி ஸ்தாபனங்களும் நிதியுதவியினை வழங்கி வருகின்றன. அவற்றில் சில

| | |
|---|---|
| செடெக் | இலங்கை |
| குறோஸ் | வடஅமெரிக்க கத்தோலிக்க நிறுவனம் |
| செபிமோ | ஹொலண்ட் |
| கறிற்றாஸ் | இன்ரர் நஷனல் |
| கறிற்றாஸ் | இத்தாலி |
| கறிற்றாஸ் | நெதர்லாந்து |
| கறிற்றாஸ் | ஜேர்மனி |
| கறிற்றாஸ் | சுவிற்சலண்ட் |
| நொறாட் | நோர்வே |
| ஏ.பி.எச்.டி | ஆசியா |
| மிசிறியோர் | ஜேர்மனி |
| சி.பி.எவ்.ரீ.ஓ.ஓ | லண்டன் |
| கெயர் | சிறீலங்கா இன்ரநஷனல் |
| றொகெயர் | அயர்லாந்து |
| சுதேசிய ஆதுராலயம் | கொழும்பு |
| ஒக்ஸ்பாம் | லண்டன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகதிகளுக்கு விநியோகிக்கப்பட்ட நிவாரணப் பொருட்களின் செலவு விபரம்**

**(13,06,1991 — 30.11.1991)**

**யாழ்ப்பாணம்**

| | | | |
|---|---|---|---|
| அரிசி | 1370 | 1600 | 2192000 |
| மா | 710 | 1340 | 951400 |
| சீனி | 650 | 1500 | 975000 |
| பருப்பு | 528 | 3000 | 1584000 |
| பயறு | 382 | 2400 | 916800 |
| தேயிலை | 1880 | 200 | 376000 |
| லக்ரோஜன் | 1474 | 1680 | 2476320 |
| பால்மா | 11722 | 60 | 703320 |
| தீப்பெட்டி | 1600 | 36 | 57600 |
| உப்பு | 15 | 125 | 1875 |
| தேங்காய் எண்ணெய் | 317 | 20 | 6340 |
| புளி | 15 | 2100 | 31500 |
| உள்ளி | 283 | 1500 | 424500 |
| சவர்க்காரம் | 8243 | 5 | 41215 |
| பேரீச்சம்பழம் | 20 | 1000 | 20000 |
| | | | 10757870 |
| முல்லைத்தீவு | 7 | 300000 | 2100000 |
| கிளிநொச்சி | 3 | 300000 | 900000 |
| உடை | | | 365000 |
| இல்லிடக் கிடுகு | 250 | 5000 | 1250000 |
| பணம் | | | 5429524 |
| மற்றது | | | 189496 |
| மொத்தச் செலவு | | | 20991890 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் போரின் விளைவால் ஏற்பட்டுள்ள விளைவுகளைக் கருத்திற் கொண்டு மக்களுக்கு அவசர உதவி அளிப்பதற்காக எம்மைத் தயார் செய்து கொண்டோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் வழங்கும் உணவு போதுமானதாக இல்லை. இக்கை [illegible] வாழவைப்பதற்கான உதவியின் தேவையைக் கருத்திற் கொண்டு மனிதாபிமான ரீதியான உதவி வழங்குவதற்காக கொழும்பில் இருந்த வொறின் மூலம் ஐ.சி.ஆர்.சி கப்பல்களின் உதவியுடனும் உலர் உணவுகளைக் கொண்டு வந்தோம். பல்வேறு கிராமங்களில் உள்ள எமது சமய முகவர் மூலமாக 167,896 பேர்களைக் கொண்ட 41794 குடும்பங்களுக்கு உலர் உணவு, தேயிலை, புடவைகள், சவர்க்காரம் மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய், பயிற்சிப் புத்தகங்கள் ஆகிய வழங்கினோம். 5352 போசாக்கின்மையால் வாடிய குழந்தைகளுக்கு பால்மா விநியோகிக்கப்பட்டது. சருவில் அகதி முகாம்களுக்கான தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்கு ரூபா 314,720 சின்னமடுவில் ரூபா 25,000 மாரீசன்கூடலில் 130,540/75 பாசையூரில் ரூபா 55050 பண்டத்தரிப்பில் ரூபா 39070 கோப்பாயில் ரூபா 76,076 உரும்பிராயில் ரூபா 132,054 புதுக்குடியிருப்பில் 121,825 பூநகரியில் 166,570 கிளிநொச்சியில் ரூபா 227,450 செலவிடப்பட்டது. தற்காலிகக் கொட்டில்கள் அமைப்பதற்கும் சேதமுற்ற வீடுகளை சரிபார்ப்பதற்குமாக 446 குடும்பங்களுக்கு 162,750 தென்னோலைகள் விநியோகிக்கப்பட்டன. நவாந்துறையில் 486 குடும்பங்களுக்கும் ஆஸ்பத்திரி வீதி, அடைக்கல மாதா கோவிலில் 1029 குடும்பங்களுக்கும் பாசையூரில் 297 குடும்பங்களுக்கும் உதவி வழங்குமாறு கேட்கப்பட்டோம். புனித சிலுவைச் சகோதரிகளால் நிர்வாகிக்கப்படும் எமது [illegible] நடமாடும் வைத்திய தொகுதி கீழ்க்காணும் இடங்களுக்குச் சென்று வைத்திய உதவி செய்தது.

| | | |
|---|---|---|
| வடமராட்சி | 18 முகாம்கள் | 1300 குடும்பங்கள் |
| சாவகச்சேரி | 20 முகாம்கள் | 1800 குடும்பங்கள் |
| வேலணை | 13 முகாம்கள் | 1100 குடும்பங்கள் |
| பூநகரி | 17 முகாம்கள் | 1750 குடும்பங்கள் |
| யாழ்ப்பாண நகர சபை பிரதேசம் | 11 முகாம்கள் | 1700 குடும்பங்கள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டத்தரிப்பில் உள்ள எமது முதலிலையாளர்களுக்கான பயிற்சி முகாமில் 15 பெண்கள் பயிற்சி பெற்றனர். மானிப்பாயில் பாடசாலை செல்லாத குழந்தைகளுக்கான பூசிப்பருக்கு பயிற்சி வழங்கப்பட்டது. உடுவில் வசிக்கும் பாதிக்கப்பட்ட தாய்மாருக்கு உதவிகள் வழங்கினோம். மல்லாகத்தில் உள்ள எமது தையல் நிலையம் சிறிய அளவில் இயங்கி பாடசாலை பிள்ளைகட்கு சீருடை விநியோகிக்க முடிந்தது. (35,265) உருத்திரபுரத்தில் 43 அநாதைக் குழந்தைகளையும் புதுக்குடியிருப்பில் 13 அநாதைக் குழந்தைகளையும் நாம் பராமரித்து வருகின்றோம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபா 10000 வீதம் உதவி வழங்கி கிளிநொச்சி மாவட்டத்திலும் உள்ள 320 குடும்பங்களுக்கு விவசாய உற்பத்திக்கான உதவி வழங்கினோம். வளைகுடாவில் பாதிக்கப்பட்டோருக்கான உதவியாக ரூபா 1163,100 வழங்கப்பட்டது. (439 குடும்பங்களுக்கும், 459 மாணவர்களுக்கும் கத்தோலிக்க தேவாலயத்தோடு இணைந்துள்ள இந்த அரசாங்க பற்றற்ற நிறுவனம் யாழ்ப்பாணத்திலே ஒரு நிலையத்தை ஏற்படுத்தி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்கின்ற மக்களுக்கும் உதவி வழங்கி வருகின்றது. யாழ்ப்பாணப் பகுப் பிரிவில் துன்பங்களுக்கு ஆளாகியுள்ள மக்களுக்குப் பயன்படும் சேவைகளைச் செய்யக் கூடியதாக எமக்கு உதவிய அதிவணக்கத்திற்குரிய கலாநிதி பி.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்திற்கும் எமது சேவக பணியாளர்களுக்கும் மதகுருமார், சகோதரிகள், தொண்டர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெதடிஸ்த திருச்சபை

### அமைப்பும் பணியும்

பின்னணி

இத்திருச்சபை உலகளாவிய திருச்சபையின் ஒரு அங்கமாக வாழ்ந்து வருகின்றது.

இது இலங்கையில் தன்னாதிக்கம் உள்ள ஆட்சியும் உடைய சபையாக வாழ்கின்றது.

இதனோடு நெருங்கிய நட்புறவு சகோதரசபைகள், இங்கிலாந்து ஜேர்மனி போன்ற நாடுகளில் உண்டு.

இலங்கையில் 1814ம் ஆண்டு இச்சபை ஸ்தாபிக்கப்பட்டது.

மெதடிஸ்த திருச்சபை — திருச்சபைகளுக்கு இடையிலான ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் வரவேற்கின்றது.

பல சபைகளோடும் இணைந்து நெருங்கி செயற்படுகின்றது.

### அமைப்பு

தலைமையகம் கொழும்பில் இருக்கின்றது.

இதன் ஆட்சி முறை ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் பெருமளவுக்கு வகுக்கப்பட்டது.

முக்கிய அதிகாரம் உடைய "மகாசங்கம்" வருடா வருடம் சபை வாழ்விற்குரிய முக்கிய தீர்மானங்களை மகாசங்கம் எடுக்கும் [illegible]

நாட்டில் எல்லாப் பகுதிகளில் இருந்தும் மகா சங்கத்திற்கு பிரதிநிதித்துவப்படுத்தவர் திருச்சபை நிர்வாகத்தில் இதன் யாப்பும் ஒழுங்கும் மரபும் முக்கிய பங்கு வகிக்கின்றது. வடக்குக் கிழக்கு நிர்வாகத்தை "சபா சங்கம்" என்னும் அமைப்பு நிர்வகிக்கின்றது. எமது திருச்சபை 30 சேகரங்களாகப் பிரிக்கப்பட்டு நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்து வருகின்றது.

யாழ் குடா நாட்டில் யாழ் சேகரம் பருத்தித்துறை சேகரம் என இரு சேகரங்கள் உண்டு. யாழ் குடா நாட்டில் எமது திருச்சபையின் பங்களிப்பு எல்லாம் இச்சேகர அமைப்பின் ஊடாகவே சமுதாயத்திற்கு கொடுக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலட்சியங்கள்

திருச்சபை என்பது சமுதாயத்திற்கு வாழும் மக்களின் அமைப்பு.
இறைமகன் ஜேசுவின் சாயலிற்கு ஏற்ப மனுக் குலத்தை மாற்றுவதே எமது பணி.
இதன் பயனாக சமுதாயத்தில்நீதி, சமாதானம், சமத்துவம் இலங்கும் என்பது எம் எதிர்பார்ப்பு.
சகல மனிதரும் சம உரிமையோடும், சமத்துவத்தோடும் வாழ வேண்டியவர்கள் என்பது எமது குறிக்கோள்.
எம்மைச் சூழ உள்ள சமுதாயத்தை நேசிப்பதும் அதன் அடிப்படையில் பணி செய்வதுமே எமது நோக்கம்.

## பணி

1. மெதடிஸ் திருச்சபை கல்விப் பணியில் இந்த நாட்டிலே ஆரம்பித்து நூற்றுக்கணக்கான ஆரம்பப் பாடசாலை, கனிஷ்ட பாடசாலைகளையும், சிரேஷ்ட பாடசாலைகளையும் யாழ் குடாநாட்டில் நடத்தும் நிறுவியது.

2. வேம்படி மகளிர்பாடசாலை, யாழ் மத்திய கல்லூரி என்பன முக்கியமானவையாகும். 1960 ம் ஆண்டு சகல பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்றது. இந்தப் பணியோடு மருத்துவப் பணியும், அநாதைச் சிறுவரை ஆதரிக்கும் பணியும், வயோதிபரை ஆதரிக்கும் பணியும் செய்யப்பட்டு வந்தது.

3. தற்போதைய சூழலில் பாலர் பாடசாலைகளை திருச்சபை பல இடங்களில் நடாத்தி வருகின்றது. யாழ் சேகரம் 8 பாலர் பாடசாலைகளை நடத்து கின்றது.

4. பாலர் பாடசாலை திட்டத்தோடு சத்துணவுத் திட்டமும் பல கிராமங்களில் பாடசாலை ஆரம்பிக்கும் பிள்ளைகளுக்கு நடத்துகின்றது. இதற்றோடு பகல் பராமரிப்பு நிலையங்களும், அநாதை இல்லங்களும், தையல் பயிற்சி நிலையங்களும், எமது சேகரத்தினால் நடாத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. துன்பக் காலங்களில் நிவாரண அபிவிருத்திப் பணியில் அதிக அக்கறையோடு ஈடுபட்டு வருகின்றோம். அவையாவன

அ. இடம் பெயர்ந்தோர் இல்லாமல் பாதிப்புற்றோர், விதவைகளுக்கு உலர் உணவு வழங்கி வருகின்றோம்.

ஆ. சிறு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தல், குடிசைகள் அமைத்தல், திருத்துதல்.

இ. பாதிப்புற்றோருக்கான ஆலோசனைப் பணி

ஈ. முகாம்களைப் பராமரித்தல்

உ. விதவைகள் புனர்வாழ்வு

ஊ. அநாதைச் சிறுவர் கல்வி வசதி

7. மேலும் மெதடிஸ் திருச்சபை எமது மக்கள் எதிர் கொள்ளும் சாவைத் தாமும் எதிர் கொண்டு தனது பங்களிப்பை எத்துறையிலும் முடியுமானவரை கொடுக்கத் தன்னை அர்ப்பணித்துள்ளது.

8. எமது பணி தேவைக்கும், நாம் கொண்ட தொடர்பிற்கும் சாட்சி பகிரும் அழைக்கும் ஏற்றதாக மாறுபடுகின்றது. எம் பணியாக இடத்தாலும் பணியின் தன்மையாலும் வரையறுத்துக் கூறுவது கஷ்டமான காரியம்.

9. முக்கியமாக எமது நாட்டில் இருக்கும் நெருக்கடி நிலைக்கு ஒரு சமாதான தீர்வு காண மெதடிஸ் திருச்சபை தன்னைப் பூரணமாக அர்ப்பணித்துள்ளது.

1987ம் ஆண்டு யுத்தம் தொடங்கியதால் அகதிகளாக வாழ்ந்தவர்களுக்கு உடன் நிவாரணமாக உணவு, உடை, மருத்துவ வசதிகள் கொடுத்து யாழ் புகையிரத நிலையத்தில் இருந்த 84 குடும்பங்களைப் பராமரித்தோம், 96 குடும்பங்களைச் சேர்ந்த தொழிலை இழந்த மேசன், தச்சுத் தொழிலாளர் நாளாந்த கூலி செய்பவர்களுக்கு தொடர்ச்சியாக நிவாரணம் வழங்கப்பட்டது. மந்திகை ஆஸ்பத்திரியில் உணவுத் தட்டுப்பாடு இருந்த போதே உணவு அளிக்கப்பட்டது.
ஒக்டோபரில் இந்திய அமைதி காக்கும் படையுடன் ஏற்பட்ட யுத்தத்தில் 4293 குடும்பங்கள் யாழ்ப்பாணத்திலும், யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்களைச்சேர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் கொடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம சேவையாளர் மூலம் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களது விபரம் பெறப்பட்டு உரும்பிராயில் 2400 குடும்பங்களும், கொக்குவில் தலைக்கோட்டைப் பகுதியில் 1840 குடும்பத்திற்கும் நிவாரணம் கொடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவில் 178 பேர்கள் இறந்து போனதால் அவர்களது குடும்பங்களுக்கு தொடர்ச்சியாக நிவாரணம் கொடுக்கப்பட்டது. வைத்தியசாலையில் இருந்த நோயாளிகளைக் கண்டு அவர்களது என்ன தேவைகளைப் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதை முறையில் அறிந்து அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, பணவசதி என்பன வழங்கப்பட்டது. புனர்வாழ்வைப் பொறுத்தவரை பெரிய அளவுத் திட்டமாக இல்லாமல் கோழி வளர்ப்பு, சிறிய கடைகள் போடவும், கயிறு திரித்தல் போன்றன செய்யப்பட்டது.

1988 காலப் பகுதியில் பதியப்பட்ட விதவைகளுக்கும், அநாதைகளுக்கும் மொத்தமாக 1079 குடும்பத்திற்கு தொடர்ச்சியாக ஆறு மாதங்களிற்கு நிவாரணம் வழங்கப்பட்டது. இந்தக் காலப் பகுதியில் 400 விதவைகளுக்கு புனர்வாழ்வு கொடுக்கப் பட்டது. புனர்வாழ்வின் தையல் பயிற்சி, பூச்செண்டு செய்தல், சிறு வியாபாரம், ஆடு, மாடு வளர்த்தல் போன்றவைகளும். 60 அநாதைப் பிள்ளைகளைச் சேர்த்து அவர்களில் 30 பெண்பிள்ளைகளை யாழ்ப்பாணத்தில் ஒரு அநாதை இல்லத்திலும், 30 ஆண்பிள்ளைகளை வடமராட்சியில் அவர்களுக்கும் ஓர் அநாதை இல்லம் அமைத்து அவர்களுக்காக கல்வி வசதி, உணவு உடை போன்றன கொடுத்து பராமரித்து வருகிறோம். முள்ளியில் இருக்கின்ற தச்சுத் தொழிலாளர்களை ஒன்று சேர்த்து முள்ளி தச்சுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காகப் 15,000ரூபா செலவழிக்கப்பட்டது. அத்தோடு அப்பகுதியில் ஒரு சிறுவர் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது.

30 பிள்ளைகள் வண்ணார்பண்ணையிலும், 30 பிள்ளைகள் எல்லைப் பிட்டியிலும் ஆக இவர்களுக்கு சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்குக் கொடுத்து வருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989 காலப் பகுதியில் 300 விதவைகளிற்குப் புனர்வாழ்வு வழங்கப்பட்டது. இதில் சிறு வியாபாரம், தையல், விவசாயம், ஆடு, மாடு வளர்ப்பு கோழி வளர்ப்புப் போன்றன செய்து கொடுக்கப்பட்டது. இலவசமாக வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுப்பதாக தையல் வகுப்புக்கள் செயற்படுத்தப்படுகின்றது. வண்ணார்பண்ணையில் உள்ள மெதடிஸ் கிறிஸ்தவ சாலையில் அதோடு நச்சுத் தொழில் பயிற்சி நிலையம் முள்ளி கிராமத்தில் நடாத்தப்படுகிறது. அதோடு மீளவும் பின் தங்கிய கிராமங்களில் முள்ளி, தொல்புரம், இரண்டையும் எடுத்து அவற்றை அபிவிருத்தி செய்தல் ஆகியன நடைபெற்று வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறவழிப் போராட்டக் குழு

இது உலகப் போர் எதிர்ப்பாளர்களின் இலங்கையின் பிரதிநிதியாகும். அத்துடன் சர்வதேச உலக புதிய சமாதானத்திற்கான குழுவில் அங்கத்துவ நாடுகளிடையேயான சர்வதேச சம்மேளனத்தின் ஒரு உறுப்பினர். இவை தவிர எ.ஜே முஸ்தி ஞாபகார்த்த நம்பிக்கை நிதியம் சமாதானத்திற்கான ஜூலையம் ஐ.பி ஆகியவற்றிலும் அங்கத்துவம் வகிக்கின்றது.

இது ஒரு சமூக நம்பிக்கையான அரச சார்பற்ற நிறுவனமாகும். இதன் முக்கிய நோக்கம் சமுதாயத்தில் ஒரு மாற்றத்தை அஹிம்சையினாலும், சமாதானத்தினாலும் ஏற்படுத்துவதாகும். இது 1979ம் ஆண்டு மாசி மாதம் 25ம் திகதி உருவாக்கப்பட்டது. இது காந்திய சேவை அறநெறிகளின் நிமித்தம் அஹிம்சை ரீதியான பயிற்சி செயல்முறையின் பின்னர் தந்தை செல்வா ஞாபகார்த்த நிலைய நிதியால் உருவாக்கப்பட்டது.

இதில் பங்கு கொண்ட ஆண்களும், பெண்களும் கூட்டாக வேலை செய்வதன் மூலம் தமிழ் சமுதாயத்தில் சமூக மாற்றத்தை ஏற்படுத்தி சக்தியும் பூண்டுள்ளது. இது ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இதன் மூலம் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு உதவியுள்ளது. இந்நிறுவனம் கிராமங்களில்அடிமட்டங்களில் அபிவிருத்திய மேற்கொள்வதற்கு வேலைத் திட்டங்களை நடாத்தி வருகின்றது. இச்செயல்முறைகள் யாவும் சமுதாயத்தில் அடிப்படைச் சமாதான மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதே ஆகும்.

இந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் மனிதாபிமான சேவைகள் சகல தரப்பு மக்களிலும் வரவேற்கப் படுவதுடன் பாராட்டப்பட்டும் வருகின்றது. இந்நிறுவனத்தின் பெயர் எல்லா வீடுகளிலும் மக்களின் இதயங்களிலும் இடம்பெற்றுள்ளது. இந்நிறுவனம் நல்ல அர்ப்பணித்த சேவையை சமுதாயத்திற்கு வழங்கியுள்ளது. இந்நிறுவனத்தின் கடந்த கால சாதனைகளே அதன் அடிக்கட்டுக்கள் ஆகும். அது தொடர்ந்தும் தனது அஹிம்சா ரீதியான சேவையை மக்களுக்கு வழங்க உத்தேசித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவனத்தின் குறிக்கோள்கள்

நிறுவனத்தின் அடிப்படைக் குறிக்கோள் ஓர் புதிய சமுதாயத்தை அகிம்சையின் மூலமும், சமாதானத்தின் மூலமும் கட்டி எழுப்புவதே ஆகும். இது மனித குலத்தைப் பற்றி கரிசனை கொண்டுள்ளது.

1. சமூகத்தில் காணப்படும் அநீதியான அமைப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்துதல்.
2. மக்களை ஒன்றுதிரட்டி அபிவிருத்திக்கு வழிகாட்டுவதுடன் அவர்கள் பிரச்சனைகளை அவர்களே தீர்ப்பதற்கு வழிகாட்டுதல்.
3. சமாதானம், சகோதரத்துவம் ஒற்றுமை என்பவற்றின் ஊடாக சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஊக்குவித்தல்.
4. புதிய முறையான வாழ்க்கை முறைகளை ஊக்குவித்தல்.
5. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் வேண்டிய திட்டங்களை மேற்கொள்ளுதல்.
6. ஏனைய உள்ளூர் நிறுவனங்களுடன் சேர்ந்து தன்னிச்சையான சேவைகளைச் செய்தல்.

## செயல்த் திட்டங்கள்

### விதவைகள் புனர்வாழ்வுத் திட்டம்

1989ம் ஆண்டில் அறவழிப் போராட்டக்குழுவின் விதவைகள் புனர்வாழ்வுத் திட்டம் பாரிய வெற்றியை அளித்தது. 1990 இல் இந்நிறுவனம் கடந்த கால சம்பவங்களால் கணவனை இழந்த 134 பெண்களுக்கு உதவியை வழங்கியது. இந்த உதவிகள் அவர்களின் வாழ்க்கைக்கு ஏற்றமாதிரிப் பல்வேறு வகைகளில் வழங்கப்பட்டது. 114 பிள்ளைகள் பராமரிப்புத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அறவழிப் போராட்டக்குழு தேசிய சேமிப்பு வங்கியில் ஆரம்பித்த இத் திட்டத்தில் சிறுவர்களின் பெயரில் பணத்தை முதலீடு செய்தது. இச்சிறுவர்கள் பராயமடைந்த பின்னர் பணத்தை மாற்றிப் பெற்றுக் கொள்ளலாம். காலப் போக்கில் இம்முதலீடு வளர்ந்து பிற்காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் பாரிய செலவுகளைச் சமாளிக்க உதவும் இத்திட்டத்திற்கான நிதி சுவிஸ்லாந்தைச் சேர்ந்த இணைப்புக்கான குழுவினால் நிதியீட்டம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலர் பாடசாலைத் திட்டம்

பாலர் பாடசாலைத் திட்டம் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடைபெறுகின்றன. பல சிறுவர்கள் இத்திட்டத்தினால் நன்மை அடைந்து வருகின்றார்கள். இது அறவழிப் போராட்டக் குழுவின் மிகச் சிறந்த திட்டங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இதன் மூலம் பாலர் வகுப்பில் சிறந்த மாணவர்களை உருவாக்கக் கூடியதாக உள்ளது. இத்திட்டம் நெதர்லாந்தில் உள்ள                னால் நிதியிடப்பட்டது.

## பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சித் திட்டம்

அறவழிப் போராட்டக்குழு பாலர் பாடசாலைகளுக்கான ஆசிரியர்களையும் பயிற்றுவிக்கின்றனர். பெண்களை உள்ளடக்கிய மூன்றாம் தொகுதி பயிலுனர்களுக்கான பயிற்சி 1989ம் ஆண்டு ஆரம்பித்தது. இப்பயிற்சி கைதடியில் உள்ள நவீல் பாடசாலையில் நடைபெற்றது. இப்பயிற்சித் திட்டத்தில் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த 70 பெண்கள் கலந்து கொண்டனர். இத்திட்டம் டி.ஆர்.ஆர்.ஓ ஊடாக நோராட் ஸ்தாபனத்தால் நிதியிடப்பட்டது.

## காந்தி நினைவு தின விழா

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி பாடசாலையில் அறவழிப் போராட்டக் குழுவினால் காந்தி நினைவு தின விழாக்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இது தவிர சரஸ்வதி மகா வித்தியாலயம், கைதடி, நுணாவில் அரசாங்க பாடசாலைகளிலும் நடைபெற்றன. இந்நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்கள் விழாக்களில் பங்குபற்றினார்கள். இதன்மூலம் அறவழிப்போராட்டக்குழு காந்தியின் சொற்களை இந்நிறுவனங்களில் மாணவர்களுக்கு வழங்கக் கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>அகதிகளுக்கான உதவிகள்</u>

வடமராட்சியில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்து பிற பகுதிகளில் தங்கி இருந்தனர். இதில் 85 குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக்குழு உலர் உணவுப் பொருட்களையும், ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கியது. இக்குடும்பங்கள் வேலணை, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் தங்கி இருந்தனர்.

<u>சமையல் பாத்திரங்கள் விநியோகம்</u>

இந்தியப் படையினரால் சேதம் விளைவிக்கப்பட்ட 14 வீட்டு உரிமையாளர்களுக்கு இவ்வசதி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் 900 ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டது. ரி.ஆர்.ஆர்.ஓ இதற்குத் தேவையான நிதியை அறவழிப் போராட்டக்குழுவிற்கு வழங்கியது.

<u>மருத்துவ சேவைத் திட்டம்</u>

பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்கள் தமது நோய்களுக்கு வைத்திய சாலைகளுக்குச் சென்று மருந்து எடுப்பதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இதைக் கவனத்திற் கொண்டு அறவழிப் போராட்டக் குழு புதிய சிறந்த வைத்தியர்களுடன் சேர்ந்து மருத்துவ சேவையை வழங்கியது. இந்த வைத்தியர்கள் ஐந்நூறுக்கு மேற்பட்ட மக்களுக்கு சேவையை வழங்கினர்.

<u>சிறுவர்களுக்கான புலமைப் பரிசில் உதவி</u>

தமது தந்தையை இழந்த பாடசாலை செல்லும் சிறுவர்கள் 1987முதல் அறவழிப் போராட்டக் குழுவினால் தத்து எடுக்கப்பட்டனர். இவர்களுக்கு இரு நிறுவனத்தால் 1989ம் ஆண்டு இரு தடவைகள் கல்வி சம்பந்தமான உபகரணங்கள் வழங்கப்பட்டன. டென்மார்க்கைச் சேர்ந்த சர்வதேசப் போர் எதிர்ப்பாளர்களும், சர்வதேச ஏ.எம்.ஓ நிறுவனமும் நிதி அளித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலர் பாடசாலையும், பொது நூலகத்தை புனருத்தாரணம் செய்தலும்

தென்மராட்சிப் பகுதியில் அமைந்துள்ள பாலர் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன. இத்துடன் பொது நூலகத்திற்கு தளபாடங்களும், புத்தகங்களும் வழங்கப்பட்டன. இத்திட்டம் போரூட் நிறுவனத்தினால் நிதியிடப்பட்டது.

## வீட்டுத் தோட்ட மரக்கறி விதைகள் விநியோகம்

அறவழிப் போராட்டக் குழு மரக்கறி விதைகளை அறவழிப் போராட்டக் குழுவின் அங்கத்தவர் முன்னிலையிலும் வழங்கியது. இதன் முக்கிய நோக்கம் வீட்டுத் தோட்டச் செய்கையை விருத்தி செய்வதாகும். விதைகள் சுவிட்சலாந்தைச் சேர்ந்த              ஆல் அளிக்கப்பட்டது.

## சிறுவர்களுக்கான மாதிரி நூலகங்களை அமைத்தல்

அறவழிப் போராட்டக்குழு சிறுவர்களுக்கான நூலகங்களை அமைத்துக் கொடுத்தது. இதன் முக்கிய நோக்கம் சிறுவர்களுக்கிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தல் ஆகும். மாதிரி நூல் நிலையங்கள் கண்டாவளை, கைதடி, மூளாய் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டது. இத்திட்டம் அமெரிக்காவைச் சேர்ந்த              நிலைய நிறுவனத்தால் நிதியிடப்பட்டது. இது 1990ம் ஆண்டு மூன்று நூல் நிலையங்களை நிறுவியது.

## சமூக அபிவிருத்தித் திட்டம்

13இற்கும் மேற்பட்ட பல்வேறு திட்டங்கள் சில கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டது. அறவழிப் போராட்டக்குழு இதற்கான நிதியையும் ஆலோசனையையும் வழங்கி வருகிறது. கிராமப் பெண்கள் இத்திட்டத்தில் பங்குபற்றுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிய கைவினை திட்டங்கள்

அறவழிப் போராட்டக் குழுவினால் சில குழுக்களுக்கு நிதி வசதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி அமெரிக்காவைச் சேர்ந்த ரொப் நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் மக்களுக்கு சிறிய கைவினை திட்டங்களை அறிமுகப்படுத்தி அதன் மூலம் பெறப்படும் வருமானத்தில் அவர்களை வாழ வைப்பதாகும். இத்திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் குழுக்கள் பனை ஓலையால் ஆன பொருட்கள், அவை பாய், கூடை, கடகம், பெட்டிகள், கடதாசிப் பைகள், பைகளில் அடைக்கப்பட்ட கடலை, மிளகாய்த்தூள், கோப்பித் தூள் என்பவற்றைத் தயாரிக்கிறார்கள். அறவழிப் போராட்டக்குழு இப்பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு உதவுகிறது.

## பனம்பூ ஏற்றுமதி

பனை ஓலையினால் செய்யப்பட்ட அழகான மலர்கள் சுவிஸ்லாந்து, நெதர்லாந்து, பின்லாந்து ஆகிய தேசங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டது. அறவழிப் போராட்டக் குழுவின் நண்பர்கள் இந்நாடுகளில் இம்மலர்களை விற்பனை செய்து நிறுவனத்தின் செயற்பாட்டுக்கான நிதியைத் திரட்டினார்கள். இலங்கையிலேயே அறவழிப் போராட்டக்குழு ஒன்றுதான் பனம் பூ ஏற்றுமதியையும் விற்பனையையும் ஒழுங்குபடுத்தியது.

## பெண்களுக்கான கருத்தரங்கு

பெண்களுக்கான அபிவிருத்தி நிலையத்துடன் சேர்ந்து ஒரு நாள் கருத்தரங்குகள் பாடசாலைகளில் ஒழுங்கு செய்யப்படுகின்றது. இக்கருத்தரங்குகளிலே பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பல பெண்கள் கலந்து கொள்கின்றனர். இதில் பெண்கள் சமுதாயத்தை பாதித்திடும் பல்வேறு பிரச்சனைகள் பற்றி விரிவாக ஆராயப்படுகின்றன.

## பெண்களுக்கான தையல் பயிற்சி

சரசாலை வாழ் பெண்களுக்கான ஓர் தையல் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கால அளவு ஆறு மாதங்கள் ஆகும். இதில் 30 பெண்கள் கலந்து கொண்டனர். இதில் பெண்களுக்கு, வெட்டுதல், தைத்தல் என்பன பயிற்றுவிக்கப்பட்டன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக மாற்றத்திற்கும், சிறப்பான வாழ்விற்குமான பயிற்சி

இத்திட்டமானது அறவழிப் போராட்டக்குழுவின் தலைமை அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கால அளவு 130 மணித்தியாலங்கள். இதில் 60 பெண்களும், ஆண்களும் கலந்து கொண்டனர். இதற்கான நிதியை சுவிஸ்லாந் இணக்கமன்று வழங்கியது.

## நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள்

தென்மராட்சிப் பிரிவில் அகதி முகாம் பராமரிப்பு

நிவாரணம், மீளக் குடியமர்த்தல் நிகழ்ச்சிகள்.

ஊர்காவற்றுறை இடம் பெயர்ந்தோர் குழந்தைகளுக்கு புதிய கல்வித் தேவைகளை வழங்கியமை

பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவி

யாழ் கிளிநொச்சி மாவட்டங்களில் 52 பாலர் பாடசாலைகளை நடாத்துதல்.

அகதி முகாம்களுக்குள் வதியும், குடும்பங்களுக்கு சிறு அளவிலான வியாபாரத் திட்டங்களை அமுலாக்கியமை.

20 கிராமங்களில் விலங்கு வேளாண்மைத் திட்டங்கள் அமுலாக்கம்.

10 கிராமங்களில் சுயதொழில் வாய்ப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்.

யு.எஸ்.எயிட் தென்மராட்சியில் விவசாயத்திட்டங்கள் அமுலாக்கம்.

சிறுவர் பல்வி உளவிப் பயிற்சித் திட்டம்

1255 அகதி முகாம்களில் வாழ்பவர்களுக்கு பால் வழங்குதல்.

10 கிராமங்களில் சத்துட் உணவுத் திட்டம்

யாழ் மாவட்டத்தில் உள்ள 40 சிறார்களுக்கான பராமரிப்பு ஏற்பாடு.

யாழ் மாவட்டத்தில் தாய் தந்தையற்ற சிறார்களுக்கு கல்வி நிதியுதவி.

பலாலியில் இருந்து இடம் பெயர்ந்த அகதிகளுக்கு மந்துவில் 14 குடிக்கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

பொது நலகம் கைதடி, நுணாவில் பகுதியில் சிறுவர் மாதிரி நலகம் வடமராட்சியில் இருந்து இடம் பெயர்ந்தோருக்கான சுமார் 1450 குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம்.

பசளைப்பயறு, கௌபி, உழுந்து போன்ற பயிர்ச் செய்கைத் திட்டம்.

வெளியீடு/பிரசுரங்கள்

1. செய்தி நாள் — தமிழ் மாத இதழ்
2. [illegible] 1/4 வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரெட்பானா

சமுதாய அடிநிலை மட்டத்தில் உள்ள குழந்தைகளின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பே இதுவாகும். இது 1946ம் ஆண்டு நோர்வேயில் உள்ள ஒஸ்லோவில் ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கை எத்தியோப்பியா உட்பட ஜேர்மனி, கௌதமாலா, தாய்லாந்து, கென்யா ஆகிய ஏழு நாடுகளில் வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டுள்ளது. அத்துடன் உலகம் முழுவதும் மிக நல வேலையில் ஈடுபட்டுள்ள பல பிற நிறுவனங்களுக்கும் கூட உதவுகின்றது.

இது பிரதேச அரசியல் சார்பற்ற ஒரு நிறுவனமாகும். ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட சிறுவர் உரிமைகளுக்கூடாக இது செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. நோர்வே உட்பட 20 நாடுகளில் குழந்தைகளுக்கான செயற்திட்டங்கள் நடைபெறுகின்றன. யாழ்ப்பாணத்தில் 1974ம் ஆண்டு காரை-நகரில் சுகாதார சிகிச்சை நிலையத்துடன் இது ஆரம்பிக்கப்பட்டது. பின்பு இது போசாக்கு புனர்வாழ்வு நிலையமாக மாறியது. இது 1978ம் ஆண்டில் இலங்கையில் பல பாகங்களிலும் தனது செயற்திட்டங்களை விரிவுபடுத்தியது.

## நிறுவனத்தின் குறிக்கோள்கள்

1. உதவி தேவைப்படும் குழந்தைகளின் பொருட்டு தேசிய, சர்வதேச வேலைகளில் பங்குபற்றுதல்.
2. உலக மக்களுக்கிடையில் சிறந்த புரிந்துணர்வையும், நட்புறவையும், ஏற்படுத்த அதற்காகப் பங்காற்றுதல்.
3. குழந்தைகளின் வாழ்க்கை நிலைமைகளைப்பற்றி சிறந்த அடிநிலை அமைப்பின் சகல மட்டங்களிலும் கருத்துரையாடல்கள் முன்னுரைகள் மேற்கொள்வதன் மூலம் பெறுவதற்கு முயற்சி செய்தல்.
4. இந்த நோக்கங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைப்பற்றி தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலுமுள்ள பூரணமான அபிப்பிராயங்களைப் பெறுவதற்கு முயற்சி செய்தல்.
5. தேசிய சர்வதேச பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான கருத்துரைகளை வழங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்குச் சனத்தொகை

சமுதாயத்தின் மிக வறிய பிரிவுகளிலுள்ள குழந்தைகளுக்கு உதவி அளிப்பதையே நெட்பானா முதன்மை நோக்கமாகக் கொண்டிருப்பதால் இத்தகைமையாக பின்வரும் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இலங்கையில் உள்ள நெட்பானாவின் இலக்குச் சனத் தொகையின் முக்கிய கருவாக அமைவர்.

1. காணியற்றவர்களும், தொழில் அற்றவர்களும், விவசாயத் தொழிலாளர்களும்.
2. நகரப் புறங்களில் உள்ள சேரி வாசிகள்.
3. இயற்கையான இடர்களினாலும், மனிதனால் ஏற்படுத்தப்பட்ட இடர்களினாலும் பாதிக்கப்பட்டோர்.
4. உதவிப்பணம் பெறும் கமக்காரர்.

## தொழிற்படும் முறை

திட்டச் செயற்படுத்தல் அமைச்சின் ஊடாக இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமாக இணைந்து நெட்பானாவானது செயற்படுகின்றது. அதன் நிகழ்ச்சித் திட்டம் நகர அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி, சுகாதாரக் கல்வி மற்றும் இலங்கையில் உள்ள குழந்தைகளின் நலனுக்கு நன்மை பயக்கும் பிற துறைகள் தொடர்பான பல கருத்திட்டங்களை உள்ளடக்குகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டம் தனது தலைவராகவும் தேசியப் பிரதிநிதி ஒருவரையும் 200 க்கும் மேற்பட்ட பணியாளர்களையும் கொண்டுள்ளது.

## நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

இந்நிறுவனமானது 15 வருடங்களாகச் செயற்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது. நிறுவனம் தான் பெற்றுக் கொண்ட அனுபவத்தினூடாக செயற்திட்ட அணுகு முறைகளை காலப் போக்கில் மாற்றி வந்துள்ளது. ஒரு சமுதாயத்திற்கு ஒரு திட்டத்தின் உதவி அளிப்பதிலிருந்து விரிவடைந்து நாட்டின் பல பாகங்களிலும் விரிவடைந்த நிவாரண புனர் வாழ்வு, மீள்குடியேற்றம், குழந்தைகள் நலன் பேணல் என்பவற்றின் மூலம் சமுதாய முன்னேற்றத்திற்கு உதவியளிக்கின்றது. 1983 ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்டு கொழும்பு அகதிகள் முகாம்கள் தங்கியிருந்த மலைநாட்டு மக்களுக்கு நிறுவனம் உதவியளித்துள்ளது. அரசின் அழைப்பின் பேரில் முகாம்களில் தங்கியிருந்த அகதி- களை வடபகுதிக்கு கொண்டுவந்து கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## REDD BARNA செயற்பாடுகள் - 1986




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைகள் பயிற்சித் திட்டம்

ஒரு மனிதன் குழந்தைப்பருவம் மிகவும் முக்கியமானதாகும். குழந்தை தனது முதல் ஐந்து வருட காலத்திலும் நல்ல சூழ்நிலையில் வளர்க்கப்படல் வேண்டும். குழந்தையின் அடிப்படையான உடல், உள, அறிவு வளர்ச்சிக்கு குழந்தைப் பருவத்திலே சிறந்த சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும். சரியான உற்சாகத்தை குழந்தையின் வளர்ச்சிக் காலத்தில் கொடுப்பதன் மூலம் அக்குழந்தை எல்லாவற்றையும் சரியாக நிர்ணயிக்கின்ற திறமையுள்ள ஒரு பூரணமான ஆளாக, மனிதனாக வளர முடியும். என்பதை இந்நிறுவனம் அறிந்து கொண்டது. இதற்காகப் பல பயிற்சித் திட்டங்களை வழங்குகின்றது. இதற்கான இலவச கல்வி அவசியம் என்பதை நிறுவனம் அறிந்து கொண்டது. இதற்காகப் பல பயிற்சித் திட்டங்களில் தான் தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றது. ஆனால் தற்போதைய கஷ்டமான சூழ்நிலையால் செயற்றிட்ட வேலைகள் யாவும் தடைப்பட்டுள்ளன.

## ஆரம்பப் பாடசாலைகள்

குழந்தைகள் இளமையில் சிறந்த கல்வியைப் பெறுவதற்காக பாலர் பாடசாலைகள் நடாத்தப்படுகின்றன. இதற்காக நாடு முழுவதும் 1989இல் 130 பாலர் பாடசாலைகள் நடாத்தப்பட்டது. இதில் 150 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு சிறந்த கல்வியை வழங்க வேண்டும் என்பதற்காக ஆசிரியர்களுக்கும் சிறந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

## சுகாதாரம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க நோய்கள் வருமுன் காக்கப்படுகின்றன. இதற்காக தாய்மார்களுக்கான உடல் நலம் போன்ற சம்பந்தமான கருத்தரங்குகள் நடாத்தப்படுகின்றது. இது ஒரு பயன் தரும் திட்டமாகும். இதற்காக இந்நிறுவனம் பல சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்துள்ளது. இவர்கள் சுகாதாரம் சம்பந்தமான கருத்தரங்குகளை தாய்மார்களுக்கு வழங்குவர். இதற்காக தமிழ், சிங்கள ஆங்கில மொழியில் திரைப்படங்கள் தயாரித்து தாய்மார்களுக்குக் காட்டப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமியக் கடன் திட்டம்

வறுமையில் வாழும் கிராம மக்களின் எளிமை கருதி நிறுவனத்தினால் ஒரு கடன் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இதில் பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்கப் படுகின்றது. பெண்கள் இத்திட்டத்தின் கீழ் ஒரு தொகைப் பணத்தினைக் கடனாகப் பெற்று வருவாய் தரக்கூடிய சுயதொழில் ஒன்றை ஆரம்பித்து அதிலிருந்து வருவாயைப் பெற்று தம் குடும்ப வருமானத்தை உயர்த்துவதன் மூலமாக வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ளப்படுகின்றது எனக் கூறப்படும்.

## விதவைகள் புனர்வாழ்வுத் திட்டம்

இது யுத்தத்தினால், இராணுவ நடவடிக்கைகளினால், வன்செயல்களினால் கணவனை இழந்து விதவையாக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத் திட்டம் ஆகும். கணவனை இழந்து குடும்பத்தினைக் கொண்டு நடாத்துவதற்கு மிகவும் கஷ்டப்படும் குடும்பப் பெண்கள் வருமானத்தைத் தேடிக் கொள்வதற்கு வழிகாட்டப்படுகின்றது. இவர்களுக்குப் பொருளாதார உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 450க்கும் மேற்பட்ட விதவைகள் நன்மை அடைந்திருக் கின்றனர்.

## பாடசாலை புனரமைப்பு

இராணுவ நடவடிக்கையினால் பாதிப்படைந்துள்ள பாடசாலைகள் இத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படுகின்றன. 4 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. பாடசாலைத் தளபாடங்களும் தேவைக்கு பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்றன.

மற்றும் நிறுவனத்தினால் உணவுத்திட்டம் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உதவுதல், பூச்சி மருந்துத் திட்டம், நாடிய சேம சுகாதாரம் சம்பந்தமான திட்டம், நடமாடும் சுகாதார நிலையம் என்பனவும் நடைமுறைப்படுகின்றன.

1. <u>றெட்பானாவால் பராமரிக்கப்படும் முகாம்கள்.</u>

கோப்பாய் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 31 முகாம்களை யாழ்ப்பாணம் றெட்பானா பராமரித்து வருகின்றது.

2. <u>முகாம்களுக்கு விநியோகிக்கப்படும் கீர்சோறும் சத்துணவுகள்</u>

ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளிற்கும், கர்ப்பிணிகளுக்கும், சத்துக் குறைந்த தாய்மார்களுக்கும் "மல்ரிமிக்ஸ்" விநியோகிக்கப்பட்டது. புத்தூரில் உள்ள கோப்பாயில் பரீட்சார்த்த வேலைத்திட்டம் ஒன்று தொடர்கிறது.

3. <u>உடைகள்</u>

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சகல சேமநல முகாம்களில் உள்ளவர்களுக்கும் சேலைகள், சட்டைத் துணிகள், சாரங்கள் என்பன விநியோகிக்கப்பட்டன.

4. <u>சமூக சேவை</u>

கோப்பாய் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள முகாம்களுக்கு பத்திரிகை விநியோகம் முகாம்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முகாம்களில் பாடசாலை செல்லாத குழந்தைகட்கான பள்ளிகள்

5. <u>சுகாதாரம்</u>

சேமநல முகாம்களுக்கு றெட்பானா உணவு, கொல்லி மருந்துகளை விநியோகித்தது. இதனூடாகவே கர்ப்பிணித் தாய்மாருக்கு "ரெப்றோல்" உம் போசாக்கின்மையால் வாடும் குழந்தைகட்கு பல்வயிற்சத்து மாத்திரைகளும் வழங்கப்பட்டன.

6. <u>பல்வகை உதவிகள்</u>

கோப்பாய் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள சகல முகாம்களுக்கும் பாய்களும் படுக்கை விரிப்புகளும் வழங்கப்பட்டன. தாய்மாருக்கும் வயது வந்த பெண்களுக்கும் சுதுமாப் போன்றன விநியோகிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. <u>போர்க் கைம்பெண்களுக்கும் வேறு குழுக்களுக்கும்</u>

கோப்பாய், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 132 கைம்பெண்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

போர்க்கால கைம்பெண்களுக்கும் அவர்களின்பிள்ளைகளுக்கும் சீருடைக்கான துணிகள், சட்டைத் துணிகள், பயிற்சிப் புத்தகங்கள் எழுதுபொருட்கள் என்பன வழங்கப்பட்டன.

கோப்பாய், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள போர்க் கைம்பெண்கள் தமது வீடுகளைக் கட்டிக் கொள்வதற்காக பண உதவி வழங்கப்பட்டது.

8. <u>விவசாயம்</u>

கோப்பாய், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 500 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டது.

9. <u>இளைஞர் திட்டங்கள்</u>

கோப்பாய், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 14 இளைஞர்கள் குழுக்கள் மன்றங்கள் இயங்குகின்றன.

10. <u>கண் முகாம்</u>

பாடசாலைப் பிள்ளைகளுக்கான கண்முகாம் நடாத்தப்படுகின்றது.

11. <u>கல்வி</u>

கோப்பாய் நமசிவாய வித்தியாலய கூரை சரிபார்க்கப்பட்டது.
கோப்பாய், நல்லூர்உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள முகாம்களில் சீருடைகளும் எழுதுபகரணங்களும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிகள் புனர் வாழ்வு நிதியம் - 1983

இந்நிதியமானது 1983ம் ஆண்டு ஆவணி மாதம் 5ம் திகதி அப்போதைய யாழ் அரச அதிபராக இருந்த திரு.தேவநேசன் நேசையா அவர்களினால் உருவாக்கப்பட்டது. இது ஒரு தன்னிச்சையான நிதியமாகும். இம்மாவட்டத்தின் பொதுமக்கள் இந்நிதியத்தை நிர்வகிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதன் முக்கிய நோக்கம் 1983ம் ஆண்டு கலவரத்தின் பின் பல்வேறு இடங்களில் இருந்து யாழ் நகருக்கு வந்த அகதிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதே ஆகும்.

இந்நிதியத்தின் இயக்கத்திற்கு தேவையான பணம் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் கிடைக்கப்பெற்றன. இவை தவிர பொருட்களாகவும், நன்கொடைகளாகவும் மேற்கொள்ளப்பட்டன. எனினும் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு அரசினாலும், வெளிநாட்டு தூதுவராலயங்களினாலும் மேற்கொள்ளப்பட்டன.

## நிதியத்தின் செயல்பாடுகள்

இந்நிதியத்தின் செயல்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

(1) குறுங்கால, நீண்டகால புனர்வாழ்வு நடவடிக்கைகள்

(2) உடனடி நிவாரண நடவடிக்கையாக உணவு உடுதுணி தற்காலிக தங்குமிட வசதிகள் என்பன வழங்குதல்.

(3) சில சந்தர்ப்பங்களில் அத்தியாவசிய தேவை கருதி இவை ஒரு தொகைப்பணமாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதியத்தின் குறிக்கோள்கள்

(1) யாழ் மவாட்டத்திற்கு இடம்பெயர்ந்த அகதிகள் பற்றிய கணக்கெடுப்பு அவர்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய மதிப்பீடும், அவற்றின் தன்மையும், அவர்கள் பிரச்சனைகளை விளங்கிக்கொள்ளுதல், அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளும் வழங்குதல்.

(2) அகதிகளுக்குத் தேவையான தற்காலிக உதவிகளை உடனையாக வழங்குதல்.

(3) அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் சேர்ந்து தேவையான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்-கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், தனியார்துறை ஊழியர்கள், சுயதொழிலாளர்கள் ஆகியோருக்கு தங்குமிட வசதிகளை வழங்குதல்.

(4) வீடமைப்பு, விவசாயம், சிறிய நடுத்தரகைத்தொழில், மீன்பிடி, சிறிய வியாபாரிக்குக்கான கடைத்தொகுதிகள், கைவினைப்பயிற்சிகள் என்பவற்றுக்கான திட்டங்களை வகுத்தல்.

(5) வளங்களை நிவாரண உதவி கருதியும், புனர்வாழ்வு வேலை கருதியும் நகர்த்தல்

## நிதியத்தின் செயல்பாடுகள்

### (1) அகதிகள் தொகை பற்றிய புள்ளி விபரங்கள் சேகரித்தல்

இதன் முதல்படியாக நிர்வாகசபை 20,000 பத்திரங்களை அச்சிட்டு அகதிகளுக்கு விநியோகித்தது. இதில் அகதிகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விபரங்கள் விரிவாக கேட்கப்பட்டிருந்தன. பத்திரிகையில் விளம்பரப்படுத்தியதுடன் மாணவர்களுக் கூடாகவும், அரச சார்பற்ற நிறுவனங்களுக் கூடாகவும் நிதியத்தினாலும் நேரடியாக பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டன. இதற்கு மக்களிடையே பூரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவு இருந்தன. அகதிகள் குடும்பங்களிடமிருந்து 11,000 பூரணப்படுத்தப்பட்ட பத்திரங்கள் திருப்பி பெறப்பட்டன. இப் பத்திரங்கள் நிர்வாக உறுப்பினர்கள் இவரால் பூரணமாகப் பரிசீலிக்கப்பட்டு இழப்பின் அளவு, இழப்பின் தன்மை, தேவைப்படும் உதவியின் அளவு, காயங்களின் வகை, உயிரிழப்பு என்பவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டன. திரட்டப்பட்ட தகவல்களிலிருந்து திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள பல்வேறு நிதி உதவு ஸ்தாபனங்களுக்கு அனுப்பப்பட்டன.

(2) வழங்கப்பட்ட உடனடி நிவாரண உதவிகள்
---

இந்நிதியம் உடனடி நிவாரண உதவிகளுக்கு "OXPAM" நிறுவனத்திடமிருந்து நிதியினைப்பெற்றுக் கொண்டது. "OXPAM" 540,000/- ரூபாவினை அகதிகளுக்காக வழங்கியது. பின்னர் 138,465/- ரூபா மேலதிகமாக சேர்க்கப்பட்டது. நிதியத்தினால் உடுதுணிகள் வழங்கப்பட்டன. இவை தவிர முகாம்களுக்கு வெளியே வசித்த 2200 குடும்பங்களுக்கு தனிப்பார்சல்கள் வழங்கப்பட்டன. துணிகள் கொள்வனவு செய்யப்பட்டு சேவையாளர்களின் உதவியுடன் பொதியிடப் -பட்டன. பார்சல்கள் இருவகைப்படும். குடும்பப்பார்சல் 350/- ரூபா பெறுமதியுள்ளது. இந் நிதியத்தினால் பெறப்பட்ட பத்திரங்களில் இருந்து மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களை தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இவை தவிர நிதியத்தித் திட்டமிடல் அமைச்சு அமைச்சால் வழங்கப்பட்ட கம்பளிகள், பாதணிகள், நகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பால்மா என்பவையும் அகதிகளுக்கு வழங்கப்பட்டன. செஞ்சிலுவைச்சங்கம், மற்றும் நிறுவனங்களினாலும் உதவிகள் வழங்கப் பட்டன. வழங்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வழங்கப்படாமலிருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான நடவடிக்கைகளை நிதியம் எடுத்தது. இந்த வகையான உதவிகள் நண்பர்கள், உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்த அகதிகளுக்கு வழங்கப்பட்டன. முகாமில் தங்கியிருந்த அகதிகளுக்கு அரசாங்கமும் வேறு சில அரசசார்பற்ற நிறுவனங்களும் உதவிகளை வழங்கின. இவை துணிகள் உணவுகள் என்றரீதியில் வழங்கப்பட்டன.

நிதியம் பெரும்பாலும் முகாம்களுக்கு வெளியே தங்கியிருந்த அகதிகளுக்கே உதவிகளை வழங்கியது. அகதிகளுக்கு துணிகள் வழங்கு வதற்கு மொத்தமாக 729,465/- ரூபா செலவிடப்பட்டது. இவை தவிர நிதியத்திற்கு சிங்கப்பூர் லயன்ஸ் கிளப்பினால் வழங்கப்பட்ட பாவிக்கப்பட்ட துணிகள் கைதடி, குருநகர், கிளிநொச்சி ஆகிய முகாம்களில் வாழ்ந்த அகதிகளுக்கு வழங்கப்பட்டன.

(3) பாடசாலைகளுக்கான உதவி

இது பாடசாலைகளுக்கான மேசைகள், கதிரைகள், மாணவர்களுக் கான சீருடைகள், மற்றும் பாடசாலைக்கு தேவையான பொருட்களையும் உள்ளடக்குகின்றன. யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளுக்கு ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேசைகள், கதிரைகள் அப்பியாசக்கொப்பிகள் என்பன வழங்கப்பட்டன. நிதியம் கிளிநொச்சி -யில் முகாமில் வசித்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கியிருந்தது.

(4) அகதிகள் நலன்புரிநிலையங்களுக்கான உதவி

சடுதியாக ஏற்பட்ட அகதிகள் வருகை அகதிகள் முகாம்களை உருவாக்க வழிகோரியது. அத்துடன் சமைத்தல், நீர்வசதி, சுகாதார வசதிகள் என்பவற்றுக்கும் தேவைகூடியது. குருநகர், மாதகல், கைதடி என்பவற்றிலுள்ள அகதிமுகாம்களுக்கு கிணறுகளை அமைக்கவும், தற்காலிக சமையல் அறைகள், மலசலகூடங்கள் என்பவற்றை அமைப்பதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியம் நிதியஉதவிகளை வழங்கியது. மேற்கூறிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு நிதியத்தினால் பணஉதவியும் வழங்கப் பட்டது. இதைத்தவிர வட்டுக்கோட்டை வயல் கழகத்திற்கு 45,000/- ரூபா அகதிகளுக்கான சனசமூக நிலைய மண்டபம் அமைப்பதற்கு வழங்கப்பட்டது.

## (5) மரண உதவிப்பணமும், ஊனமுற்றோருக்கான உதவியும்

வரையறுக்கப்பட்ட நிதி வளங்கள் காரணமாக நிதியத்தினால் இனக்கலவரத்தினால் இறந்தவரின் அடுத்த உறவினருக்கு 1000/- ரூபாவும், ஊனமுற்றோருக்கு 500/- ரூபாவும் வழங்கப்பட்டது. மொத்தமாக 160 குடும்பங்கள் மரண உதவிப்பணத்தைப்பெற்றுக் கொண்டது. இதைவிட இக்குடும்பங்களுக்கு துணிகள், பால்மா போன்ற 500/- ரூபா பெறுமதியான பொருட்களும் வழங்கப்பட்டன. 160,000/- ரூபா காசாக வழங்கப்பட்டது. 22 நபர்களுக்கு தலா 500/- ரூபாப்படி ஊனமுற்றோருக்கான சகாயநிதி வழங்கப் பட்டது. இவர்களுக்கும் துணிகள், பால்மா அடங்கிய பார்சல் வழங்கப் பட்டன. மொத்தமாக 11,000/- ரூபா காசாக வழங்கப்பட்டது.

## (6) இடம்பெயர்ந்த ஊழியர்களுக்கான உதவிகள்

நிர்வாகத்துடன் சம்மந்தப்பட்ட அரச திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் என்பவற்றுடன் தொடர்பு கொண்டு இடம்பெயர்ந்த ஊழியர்களுக்கு இடமாற்றம், சம்பளத்துடன் கூடிய விடுமுறை, மூன்று மாதச்சம்பள முற்பணம் என்பவற்றை அரசாங்கம் வழங்குவதற்கு நிதியம் உதவி வழங்கியது. நிதியம் அரசிற்கு, அரசாங்க மற்றும் ஊழியர்கள் தொடர்பான குடியமர்வு சம்மந்தமாக ஓர் செயல்திட்டத்தை முன் வைத்தது. இதன்படி அரசாங்கம் ஊழியர்களுக்கு வட்டியில்லா கடன்களை வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவிகள்

நிதியம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் சேர்ந்து இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சனையை கவனத்தில் கொண்டது. எனினும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து திருப்திகரமான பதில்கள் கிடைக்கவில்லை. சில மாணவர்கள் தென்பகுதிப்பல்கலைக்கழகங்களில் பாதுகாப்பு இன்மையால், தமது கல்வியைத் தொடரத்தயங்கினர். நிதியம் இந்திய பல்கலைக்கழகங்களுடன் தொடர்பு கொண்டு வெளி நாட்டில் கல்வியைத்தொடர விரும்பிய மாணவர்களுக்கு உதவி செய்தது. இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. 65 மருத்துவ பொறியியல் மாணவர்கள் இந்தியாவில் உள்ள பல்வேறு கல்லூரிகளில் அனுமதியைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றப்பதிவுகள் ஓர் நோக்கு 1983-1986

(1) 1983ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து அகதிகள் குடும்பங்கள்

11000 குடும்பங்கள் முகாம்களுக்கு வெளியே

5000 குடும்பங்கள் முகாம்களில்

மொத்தம் 55000 ஆட்கள்

(2) உடனடி நிவாரண உதவியாக உடைகள் பாடசாலை உபகரணங்கள் என்பன 2200 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

செலவு 782,890/- ரூபா

(3) புனரமைப்புத்திட்டங்கள்

இயக்கச்சியில் வீட்டுத்திட்டம் 71 குடும்பங்கள் செலவு 685,000/-ரூ

தையல் பயிற்சி 60 நபர்கள் செலவு 300,000/- ரூபா

ஒட்டுவேலைப்பயிற்சி 30 நபர்கள் செலவு 175,000/- ரூபா

(4) சுயவேலைவாய்ப்புத்திட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| வியாபாரத்திட்டங்கள் | 215 குடும்பங்கள் | செலவு | 1,641,800/-ரூ |
| கோழிவளர்ப்பு | 200 குடும்பங்கள் | செலவு | 654,750/-ரூ |
| விலங்கு வளர்ப்பு | 79 குடும்பங்கள் | செலவு | 226,250/-ரூ |
| விவசாயதிட்ட உதவிகள் | 6 குடும்பங்கள் | செலவு | 37,650/-ரூ |
| தனிப்பட்ட வியாபார உதவி | 10 குடும்பங்கள் | செலவு | 30,600/-ரூ |

(5) அகதிகளுக்கான உதவு தொகைகள்

| | | |
|---|---|---|
| யாழ் மாவட்டம் | செலவு | 498,300/- ரூபா |
| மன்னார் மாவட்டம் | செலவு | 37,714/- ரூபா |
| முல்லை மாவட்டம் | செலவு | 129,848/- ரூபா |
| திருமலை மாவட்டம் | செலவு | 31,825/- ரூபா |
| கிளிநொச்சி மாவட்டம் | செலவு | 14,884/- ரூபா |
| வவுனியா மாவட்டம் | செலவு | 36,918/- ரூபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) 01.04.89ல் இருந்து 31.03.90 வரை நிறுவனம் 371 குடும்பங்களுக்கு உதவி வழங்கியது. இவை வருமாறு,

| | | |
|---|---|---|
| தையல் இயந்திரம் | 110 | குடும்பங்கள் |
| பசுமாடு | 44 | " |
| கோழிப்பண்ணை | 45 | " |
| மீன்பிடி வலை | 74 | " |
| வண்டில் மாடு | 06 | " |
| நீர் இறைக்கும் இயந்திரம் | 08 | " |
| சிறுகடைகள் | 84 | " |

1989/90 நிதியாண்டில் செய்யப்பட்ட உதவிகள்

---

(1) யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கஷ்டப்படும் மாணவர்களுக்கு அவர்கள் படிப்பைத் தொடர்வதற்காக உதவியளிக்கப்பட்டது.

(2) கைதடி கண் புனர்வாழ்வு நிலையத்தின் ஒரு கட்டடத்திற்கு ஓடுகள் போடுவதற்காக உதவியளிக்கப்பட்டது.

(3) உரும்பிராய் ஞானசம்பந்தர் இல்லத்திற்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன.

(4) பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு தமிழ் ஆங்கில தட்டெழுத்துப்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

(5) ஜெயப்பூர் செயற்கைக்கால் திட்டத்திற்கு உதவி வழங்கப்பட்டது.

(6) பரமானந்தா முதியோர் இல்லத்திற்கும், ஆச்சிரமத்திற்கும் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியளித்த நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள்

World Council of Churches, Geneva, Switzerland

Royal Norwegian Embassy Development Corporation (NORAD)

Colombo

NOVIS, Holland

Dutch Interchurch Aid, Nederland

Christian Aid, London (UK)

Canadian High Commission, Colombo

Australian High Commission, Colombo'.

DIAKONISCHES Werk, Federal Repulic of Germany.

Tamil Society of NT Darwin, Australia.

Tamil Association of W.A (Inc), Australia

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகள் புனர் வாழ்வு நிதியம் 83 - 1991 இற்கான செயற்பாடுகள்

| விடயங்களின் விபரங்கள் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | பயன்பெறுவோரின் மொத்த எண்ணிக்கை | மொத்த செலவும் ரூபா |
|---|---|---|---|
| 1. பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கல்வி உதவிகள் | | | |
| அ) யாழ்ப்பாணம் பற்றீசியன் கல்வி நிலையத்திலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரியிலும் தொழில் துறைப் பயிற்சிகள் | யாழ்ப்பாணம் நல்லூர் சங்கானை கோப்பாய் உடுவில் | 18 | 19,860.00 |
| ஆ) யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு | கீழ்மாகாணம் | 10 | 12,500.00 |
| இ) நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்திலும், செங்குந்தாள் இந்துக்கல்லூரியிலும் கட்டிட திருத்த வேலைகள் | நல்லூர் | | 20,000.00 |
| ஈ) சமையல் கைப்பணிகள், உடை தயாரித்தல் என்பவற்றில் பயிற்சி பெறுவதற்கு | நல்லூர் யாழ்ப்பாணம் | 03 | 9,496.00 |
| உ) இடம்பெயர்ந்த பிள்ளைகளுக்கான எழுதுகருவிகள் ஆகியன | ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் நல்லூர் | | 45,052.00 |
| | | | 106,908.00 |

| | | | |
|---|---|---|---|
| 2. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சுயதொழில்வாய்ப்பு உதவி | | | |
| அ) விதவைப்பெண் தையல் இயந்திரங்கள் | யாழ்ப்பாணம் கோப்பாய் நல்லூர் | 17 | 142,650.00 |
| ஆ) கால் நடை வளர்ப்பு | சாவகச்சேரி | 100 | 115,000.00 |
| இ) சிறியளவிலான வியாபார உதவிகள் | மருதங்கேணி பருத்தித்துறை | 110 | 115,000.00 |
| ஈ) சிறியளவிலான வர்த்தகம் | யாழ்ப்பாணம் கோப்பாய் நல்லூர் | 23 | 24,900.00 |
| உ) கயிற்றுத் தொழிற்சாலை | நல்லூர் | | 5,000.00 |
| 3. ஜெய்ப்பூர் பாதவேலை | வட கிழக்கு மாகாணங்கள் | 07 | 100,515.00 |
| 4. நிவாரண உதவிகள் | நல்லூர் கோப்பாய் | 80 முகாம்கள் | 523,879.00 |
| | | | 926,944.00 |

மொத்தத்தொகை ரூபா 1,083,852.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்

இது பிரித்தானிய நாட்டின் செஞ்சிலுவைச்சங்கத்தின் மத்திய கிளையாக இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. 1949ம் ஆண்டில் இது இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கமென பெயர் பெற்றது. இது சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1952ம் ஆண்டு சங்க மகாநாட்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் தலைமை அலுவலகம் கொழும்பில் அமைந்துள்ளது. இதன் கிளைகள் கண்டி, குருநாகல், யாழ்ப்பாணம், மாத்தறை, திருகோணமலை போன்ற இடங்களில் உள்ளன. இச்சங்கத்தின் அபிவிருத்தித்திட்டத்திற்கு இலங்கை மாவட்டங்கள் தோறும் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சங்கத்தின் உயர் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் வருடம்தோறும் கூடும் பொதுச்சங்கத்திற்கே உண்டு. ஒவ்வொரு பிரிவுகளிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டாக 25 அங்கத்தவர்களைக் கொண்ட ஆலோசனை சபையொன்றை இந்த பொதுச்சங்கம் நியமிக்கும். சங்கத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வது இதன் கடமையாகும். மேலும் பொதுச்சபையானது கூடவேண்டிய காலவரையறைக்குள் ஏற்படும் முக்கியமான காரணங்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இச்சபையையே சாரும். இவ்வாலோசனை சபையானது நிதிக்குழுவை நியமிப்பதுடன் அந்நிதிக்குழுவின் தலைவராகவும், கணாதிகாரியாகவும் தானே செயல்படும்.

இலங்கை செஞ்சிலுவைச்சங்கமானது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும். இது நிவாரண நடவடிக்கைகள் பொருட்டும், மற்றைய நடவடிக்கைகளின் பொருட்டும் தாம் பெறும் வருமானங்களின் மூலம் செலவுகளை மேற்கொள்வதுடன் பொதுமக்களிடமிருந்தும், மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் தேசிய செஞ்சிலுவை, செம்பிறைச்சங்கங்கள் என்பவற்றிலிருந்தும் பணத்தைப்பெற்று செலவுகளை மேற்கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சிலுவைச்சங்கத்தின் சர்வதேசக்குழு I.C.R.C

1863 ஆம் ஆண்டு ஜெனிவாவில் ஆரம்பிக்கப்பட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழுவானது தனித்துவமானதும் சுயாதீனமுடையதும் மனிதாபிமானமும் படைத்ததுமான ஓர் நிறுவனமாகும். சர்வதேசரீதியிலான அல்லது தேசியரீதியிலான யுத்தங்களின் போதும், மற்றைய உள்நாட்டுக் குழப்பங்களின் போதும் பாதிக்கப்படுபவர்களுக்கு பாதுகாப்பும் உதவியும் வழங்கப்படுகின்றதா என்பதை இது கண்காணிக்கும்.

இச்சர்வதேசக்குழு இவ்வியக்கத்தின் அடிப்படைக் கொள்கையினை முன்னோக்கி எடுத்துச் செல்வதுடன் அவை சம்பந்தமான அறிவினை மற்றவர்களுக்கும் வழங்கும். மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்படும் தேசிய சங்கத்தி-னையும் இது ஏற்றுக் கொள்ளும்.

செஞ்சிலுவைச்சங்கத்தின் சர்வதேசக்குழுவானது 1949 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட நான்கு ஜெனிவா உடன்படிக்கையினையும், 1977 இல் ஏற்படுத்தப்பட்ட மேலதிக உபசார ஒழுங்குவிதிகளின் செயல்பாட்டினையும் வளர்க்கும். மேலும் சர்வதேச உடன்படிக்கையின் கீழ் தமக்களிக்கும் கடமையினை இவை பொறுப்பேற்று அவற்றை நடைமுறைப்படுத்தும். மேலும்யுத்த காலங்களில் உபயோகிப்படுத்தக்கூடிய சர்வதேசரீதியிலான உரிமைச்சட்டங்கள் தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்வதற்கும், அவற்றைப்பரவச் செய்வதற்கும் மேலும் இச்சட்டத்தினை விருத்தி செய்வதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை இக்குழு எடுக்கும்.

ஜெனிவா ஒப்பந்தத்தின்படி விபத்திற்கு உள்ளாகியவர்களை தேடும் மத்திய நிறுவனமானது செயல்படுகின்றதா என்பதையும் குழு கண்காணிக்கும். செஞ்சிலுவை இயக்கத்தின் சர்வதேசக்குழுவானது ஓர் மனிதாபிமான நிறுவனம் என்ற வகையில் தமக்குரிய கடமைகள் தொடர்பாக முதலிடம் அளித்தும் நடுநிலைமை வகித்தும் செயல்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குழுவானது 25 சுவிஸ்லாந்து இனத்தவர்களை தமது அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. இதுவே ஆகக்கூடிய அங்கத்தவர் தொகையாகும். இக்குழுவிற்குத் தேவையான பணம் அரசாங்கத்திலிருந்தும் மற்றும் தேசிய ரீதியான சங்கங்களினாலும் தன்னிச்சையாக வழங்கப்படுகின்றன. இதன் தலைமை அலுவலகம் சுவிஸ்லாந்து நாட்டின் ஜெனிவா தலைநகரத்தில் அமைந்துள்ளது.

## செஞ்சிலுவை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள்

### மனிதாபிமானம்

போர்க்களத்தில் காயப்பட்டவர்களுக்கு எவ்வித வேறுபாடுமின்றி உதவும் பொருட்டு தோன்றிய செஞ்சிலுவைச்சங்கமானது சர்வதேச அடிப்படையிலும், தேசிய அடிப்படையிலும் செயல்படுவதுடன் உலகில் எப்பகுதியிலாவது மனித இனமானது அனுபவிக்கும் வேதனைகளைத்தடுப்பதற்கும், குறைப்பதற்கும் முயற்சி எடுக்கும். வாழ்க்கை, சுகாதாரம் என்பவற்றைப் பேணி அவர்களைக் கௌரவமாக வாழ வைப்பதே இதன் குறிக்கோளாகும். மனிதர்களுக்கிடையே நட்புறவையும், கூட்டுமனப்பான்மையையும், சகோதரத்துவத்தையும், நிலையான சமாதானத்தையும் ஏற்படுத்துவதில் இவ்வியக்கம் பெரும்பங்கினை வகிக்கின்றது.

### பாரபட்சமின்மை

செஞ்சிலுவைச்சங்கமானது இன மத மொழி அரசியல் வேறுபாடுகள் இன்றி செயல்படுகின்றது. மனிதன் தேவைகளை உணர்ந்து அவர்களின் துயர் அகற்ற முற்படும். இவ்வமைப்பானது யார் யாருக்கு இதன் உதவிகள் முக்கியமாகத் தேவைப்படுகின்றதோ அவர்களின் தேவைகளை பிரதானமாகக் கருத்தில் கொண்டு அதற்கிணங்க செயல்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுநிலைமை

யாவரினதும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகும் வகையில் செயல்படும் இச்செஞ்சிலுவைச்சங்கமானது யுத்தத்தின் போது எச்சார்பினையும் சாராது நடுநிலைமை வகித்து செயல்படுவதுடன் இன மத மொழி அரசியல் அடிப்படையிலான வாத விவாதங்களிலும் பங்குபற்றாது.

## தனித்துவம்

செஞ்சிலுவைச்சங்கமானது தனித்துவம் வாய்ந்ததாகும். தேசிய அடிப்படையில் செயல்படும் சங்கங்கள் தத்தமது நாடுகளில் மனிதாபிமான சேவைகளில் ஈடுபடுகையில் மற்றைய இயக்கங்களுடன் நட்புறவுடன் செயல்பட வேண்டுமென்பதுடன் அவ்வாறு செயல்படுகையில் தத்தமது நாடுகளின் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படுவதுடன் எந்நேரத்திலும் செஞ்சிலுவைச் சங்கத்தின் கொள்கைகளுடன் இணைந்து செயல்படக்கூடிய வகையில் அவை தமது தனித்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## தொண்டர் சேவை

செஞ்சிலுவைச்சங்கமானது தன்னிச்சையாக உதவிகளைவழங்குவதுடன் துளி இலாப நோக்கம் இல்லாது செயல்படுகின்றது.

## ஒற்றுமை

ஒரு நாட்டில் ஒரு செஞ்சிலுவைச்சங்கம் மாத்திரமே இருக்க முடியும். அதில் யாரும் சேரலாம். அது தமது நாட்டெல்லைக்குள் இருக்கும் மனித இனத்தின் நன்மைக்காக செயல்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபஞ்சத்தன்மை

செஞ்சிலுவைச்சங்கமானது உலகளாவிய ஓர் நிறுவனமாகும். சகல தங்கங்களுக்கும் அதில் சமஅந்தஸ்து உண்டு. ஒவ்வொருவருக்கும் உதவிபுரிவதில் அவை சமமான பொறுப்பினையும், கடமையினையும் கொண்டதாகவே விளங்கும்.

## இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்

### செஞ்சிலுவைச்சங்கத்தினால் வழங்கப்படும் சேவைகள்

1. முதலுதவி சம்பந்தமான பயிற்சிகளும் சேவைகளும்
2. முதலுதவி சுகாதாரத்தைப்பேணல் - வீட்டு வைத்தியம்
3. நிவாரண உதவிகள்
4. விபத்தின்போது உதவுவதற்கு தயாராயிருத்தல்
5. இரத்ததானம் செய்வோரைச்சேர்க்கக் கொள்ளல்
6. நோயாளர் வண்டிச் சேவை
7. விலத்தக்குள்ளாகியவர்களை தேடுதலும், தபால் சேவையும்
8. இளைஞர் விவசாயங்கள்
9. போசாக்குணவு வழங்கல்
10. சமூக அபிவிருத்தி திட்டச்சிக்கிட்டங்கள்

## செய்திப்பரிமாற்றல் சேவை

இதுவரை காலமும் சங்கம் பழக்கப்படாத ஓர் புதிய சேவையைப் போர்க்காலம் செஞ்சிலுவைச்சங்கம் மீள திறந்தது. வெளிமாவட்டங்களில் உள்ளவர்களுக்கும், வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கும் இங்குள்ளவர்கள் பற்றிய தகவல்களையும், இங்குள்ளவர்கள் வெளிமாவட்டங்களில் குறிப்பாக தென்தமிழ் ஈழத்தில் உள்ளவர்களைப்பற்றியும் அறிய செஞ்சிலுவைச்சங்கத்திற்கு பெருமளவில் வருகை தந்தார்கள். அரச தொடர்பு சேவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றாகத்தடைப்பட்ட காலகட்டத்தில் இப்பணியை சங்கம் மேற்கொண்டது. கடந்த வருடம் 1600 செய்திகள் பரிமாறப்பட்டன. அத்துடன் செயலிழந்த அஞ்சல்நிலையங்கள் செயல்படும் வரை அஞ்சல் சேவை மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பணியையும் மேற்கொண்டவர்கள் சங்கத்தின் இளைஞர்களே. பொம்மர் குண்டுவீச்சுக்கும், ஷெல்லடிக்கும் மத்தியிலும் அவர்கள் தூர இடத்திற்கு சைக்கிளில் செய்திகளை எடுத்துச் சென்றார்கள். அவர்களின் தன்னலமற்ற சேவையை சமூகம் மதித்துப் போற்றியது.

## மூன்று சில்லு மிதிவண்டிச்சேவை

யாழ் - ஜெயப்பூர் செயற்கைக்கால் பட்டறையுடன் இணைந்து இச்சேவை ஆரம்பிக்கப்பட்டது: ஆரம்ப முயற்சியாக இரண்டு வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்டுள்ள போக்குவரத்து சாதன சீர்குலைவுக்கு ஈடுசெய்யும் முயற்சியாகும். தேவையைப் பொறுத்துச்சேவை விஸ்தரிக்கப்படும்.

## புனர்வாழ்வுத்திட்டங்கள்

விதவைகள், அனாதைகள் ஆகியோருக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக 1989ம் ஆண்டு பனம் பொருட்களில் இருந்தும் வாழைநாரில் இருந்தும் செய்யக்கூடிய கைப்பணி வேலைகளில் பயிற்சி கொடுக்கும் திட்டம் ஆரம்பிக் கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் புலோலி, எழுவைதீவு, காரைநகர் வரணி, முல்லைத்தீவு, யோகபுரம், உயிலங்குளம் ஆகிய இடங்களில் பனம் பொருள் கைப்பணிப்பயிற்சியும், மயிலங்கேணி, நல்லூர், புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்களில் வாழைநார் கைப்பணிப்பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டு நிறைவு கண்டுள்ளது. பயிலுனருக்கு பயிலும் காலத்தில் நாள் ஒன்றுக்கு 20ரூபா படியும் மேலும் ஊக்குவிப்புப்பணமும் வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்திரேலியா நாட்டு உயர்ஸ்தானிகள் வழங்கிய 150,000/- ரூபா நன்கொடையைக் கொண்டு அனாதைகளுக்கும், இளம்விதவைகளுக்கும் தட்டச்சு பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது. கண்பார்வை இழந்தவர்களுக்கு தெல்லிப்பளையில் அமைந்துள்ள வாழ்வகத்துக்கு ஓர் கட்டடம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் சர்வதேச செஞ்சிலுவைச் செயற்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வரட்சி நிவாரணம்
-------------

குடிநீர்ப்பிரச்சனையை எதிர்நோக்கும் வாகரவத்தை, நெடுந்தீவு வேலணை ஆகிய இடங்களுக்கு பவுசர் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று சங்கத்தால் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1990ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப்பின் இத்திட்டத்தை பூரணமாக அமுல் செய்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

நிவாரணப்பணிகள்
-------------

இப்பணிக்காக 1990ம் ஆண்டு லக் 8675000 ரூபாவை ஒதுக்கியது. 1990ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து இந்த ஒதுக்கீட்டிலிருந்து பணம் பெறுவதை அது இடைநிறுத்தியது. அதற்கும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க செயற்குழுவிற்கு மிடையிலான உடன்பாட்டின்படி சர்வதேச செஞ்சிலுவை சங்கச் செயற்குழு பொறுப்பேற்றது. சங்கம் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து அகதி முகாம்களுக்கு உலர் உணவு வகைகளை வழங்கியது. 5வயதுக் குட்பட்ட குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு 1941 போத்தல் மரக்கறி எண்ணை வழங்கப்பட்டது. நெடுந்தீவுப்பகுதிக்கு 200 ஜீவாகார சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டது. இறப்பு அல்லது அங்கவீனப்படுத்தப்பட்ட அங்கத்தவ -ரைக் கொண்ட குடும்பங்கள் 1424 க்கு உடுபுடவைப்பொதிகள் வழங்கப் பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகள்

------

1. நோயாளரைக் கொண்டு செல்லும் சேவைகள் - 1246 தடவைகள்
2. முதலுதவி சேவை - 3819 பேர்
3. ஆரம்ப சுகாதார கவனிப்பு -222,872 பேர்
4. நிவாரணம் -387,676 "
5. தங்குமிடத்திட்டங்கள் - 807 குடிசைகள்
6. போக்குவரத்துச் சேவை - 71 தடவைகள்
7. கடன் திட்டம் - 50 குடும்பங்கள்
8. இரத்ததானம் - 176 பேர்
9. பாடசாலைகளுக்கு மின்னியந்திரம் - 04
10. நடமாடும் வைத்திய சேவை - 150 தடவைகள்

15999 நோயாளிகள்

11. வைத்தியசாலைப்பராமரிப்புச் சேவைகளும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தைப்படுத்தல் சேவையும்

பயிற்சி

----

தட்டச்சு (தமிழ் -375) சுருக்கெழுத்து (தமிழ்) 150

தட்டச்சு (ஆங்கிலம்)260 சுருக்கெழுத்து ஆங்கிலம் 150

முதலுதவி 900 தாதிமார் உதவியாளர் 145

ஆரம்ப சுகாதாரக்கவனிப்பு 510

சமூக நலன்புரி சமூகசேவைகள் 23

ஆங்கிலவகுப்பு 150

பத்திரிகைத்துறை 28

ஆபத்துக்களின் போது ஆயத்தம் 140

புள்ளி விபர சேகரிப்பு 06

கட்டுறுதிப்பயிற்சி 30

மீள்பிடி பயிற்றுவோர் 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலுதவிப் பயிற்சி முடித்தோருக்கு செஞ்சிலுவை சங்கத்தில் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.



செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் கொடி தினம் மூலம் நிதி சேகரிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பயிற்சியும் உற்பத்தியும் | பயிற்சியாளரின் எண்ணிக்கை | உற்பத்தியின் மொத்தப் பெறுமதி |
|---|---|---|
| சேனைக்கருத்திட்டம் | 320 | 5,132,000.00 |
| வாழைத்தும்பு | 1500 | 1,834,000.00 |
| பனம்பொருட்கள் | 80 | 72,000.00 |
| தெங்குப்பொருட்கள் | 30 | 24,550.00 |
| இரும்புருக்கு வேலை | 20 | 12,750.00 |
| தேன் உற்பத்தி | 10 | 11,000.00 |
| பப்படம் | 30 | 38,000.00 |
| தேங்காய் நெய் உற்பத்தி | 10 | 13,575.00 |
| தச்சவேலை | 05 | 7,000.00 |
| வீட்டுத்தோட்டம் | 100 | 22,750.00 |
| உலர்காய்கறி உற்பத்தி | 500 | 44,200.00 |
| வடை, வடகம் | 30 | 15,250.00 |
| ஆடை உற்பத்தி | 75 | 31,500.00 |
| தோல் உற்பத்தி | 06 | 7,900.00 |
| பிரம்புற்பத்தி | 30 | 24,200.00 |
| | 2746 | 8,290,675.00 |

இவற்றைவிட இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாண கிளையின் இரண்டுப்பிரசாரங்களும் 71 கருத்தரங்குகளும் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வோதயம்

சமூகத்திலுள்ள எல்லோரையும், எல்லாவற்றையும் விழிப்படையச் செய்தல் என்பதே "சர்வோதயம்" என்ற பதத்தின் நேரடிக் கருத்தாகும். எல்லோரையும் விழிப்படையச் செய்வதற்கு அல்லது எல்லோரையும் விடுதலை பெறச்செய்வதற்கு யாவரினதும் நற்பண்புகளைத்திரட்டி பயன்படுத்தல் என்பதை அது சுட்டிக்காட்டுகின்றது. மனித இனத்தின் ஒற்றுமைத்தன்மையை சர்வோதய இயக்கம் ஏற்றுக் கொள்கின்றது. எனவே மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட சாதி நிற மதரீதித்தடைகளைத் தாண்டித்தனது இலட்சியங்களை அடைந்திட அது முயலுகின்றது.

உண்மை, அகிம்சை, சுயநலமின்மை, ஆகிய கொள்கைகளையே சர்வோதயம் தன் அடிப்படைத்தத்துவமாகக் கொண்டுள்ளது. புத்தபகவானின் போதனைகளிலிருந்தும், மகாத்மா காந்தியின் அகிம்சைப் போராட்டங்களிலிருந்தும் ஆச்சாரிய விநோபா பாவேயின் வாழ்க்கையிலிருந்தும் இலங்கையின் சர்வோதய தத்துவம் தன் வளர்ச்சியைப் பெற்றது.

## சர்வோதய இயக்கத்தின் நோக்கங்கள்

தனிமனிதனை அவனின் மனதில் இடம்பெறும் பேராசை, வெறுப்பு, அறியாமை போன்ற தீயசக்திகளிலிருந்தும் மனதிற்கு வெளியே காணப்படு பலவும், அவனை அடிமைப்படுத்தவல்லவுமாகிய பல்வேறு அடக்கு முறைச்சக்திகளிலிருந்தும் விடுவித்தல்.

கிராமிய நகர சமுதாயங்களை அவற்றுக்குள்ளே காணப்படும் வறுமை, நோய், அறியாமை, மற்றையோரில் தங்கியிருக்கும் தன்மை ஆகியவற்றிலிருந்தும் வெளிசக்திகளால் மேற்கொள்ளப்படும் அநீதியல் பொருளாதார சுரண்டல்களிலிருந்தும் விடுவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வோதயத்தின் கொள்கைகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித குடும்பத்தை அவநம்பிக்கை, பகைமை, வெறுப்பு, போர்களினால் சூழல் அசுத்தப்படுதல் போன்ற பல்வேறு தீங்குகளிலிருந்தும் விடுவித்தல்.
இந்த இலட்சியங்களை அடைவதற்காக இவ்வியக்கத்தின் உறுப்பினர்கள் தங்களின் தனி வாழ்க்கையிலும், கூட்டுவாழ்க்கையிலும் எமது பாரம்பரிய நற்பண்புகளான எட்டு நற்பண்புகளையும் கடைப்பிடித்து ஒழுக முயற்சி செய்வார்கள். அந்த எட்டு நற்பண்புகளை அன்பு, கருணை, தியாக சேவையில் இன்பம், சமத்துவ மனோநிலை, தானம், இனியபேச்சு, நற்பணி, இறைவன் சந்நிதியில் எல்லோரும் சமம், பொறுமை என்னும் கொள்கைகள் இவ்வியக்கத்தின் திட்டங்கள் எல்லாம் இந்த எட்டு தத்துவங்களிலிருந்தே பேருணர்வையும், பெரும் ஊக்கசக்தியையும் பெறுகின்றன.

## கொள்கைகள்

ஒவ்வொருவரும் எல்லோருக்கும், எல்லோரும் ஒவ்வொருவருக்கும் என எல்லா மனிதவளங்களையும், மூலவளங்களையும் ஒன்று சேர்த்து தனிமனிதனும் எல்லோரும் பயனடைந்து எல்லாவகையாலும் வளர்ச்சி அடைதல். சர்வோதயத்தின் கொள்கையாகும். உணவு, உடை, வீடு, நீர், சுற்றாடல், பாதைகள், சுகாதாரம், கல்வி, ஆத்மீக கலாச்சாரத்தேவைகள், எரிபொருள், ஆகிய பத்து அடிப்படை மனித தேவைகளை அடைவிப்பதற்கு ஒரு குறிக்கோள் நோக்குடன் ஏற்படுத்தப்படும் அமைப்பு சர்வோதயகிராமமெனக் கொள்ளலாம்.

## சர்வோதய யாழ்ப்பாணக்கிளை

இலங்கை சர்வோதய இயக்கமானது 1986ம் ஆண்டு தை மாதம் 5ம் திகதி யாழ்ப்பாணத்தில் தனது கிளை நிறுவனத்தினை ஸ்தாபித்தது. இக்கிளையானது பின்வரும் செயற்திட்டங்களை மேற்கொள்கின்றது.
பாலர்பாடசாலைத்திட்டம், வாசிகசாலைத்திட்டம், நிவாரணப்புனர்வாழ்வுத் திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனைப் பூரண மனிதனாக்குதல், பின்தங்கிய கிராமங்களை வளர்ச்சியடையச் செய்தல், வறியோரின் அடிப்படைத்தேவைகளை ஆராய்ந்து பூர்த்தி செய்தல், கிராமங்கள் தோறும் சங்கங்கள் அமைத்தல், கிராமமோதய வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுதல் போன்ற சேவைகளைச் செய்து வருகின்றது. ஆனாலும் பாலர் பாடசாலைத்திட்டமே பூரணமாகச் செயல்படுத்தப்படுகின்றது.

## பாலர் பாடசாலைத்திட்டம்

பின்தங்கிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அங்குள்ள வறிய மாணவர்களின் ஆரம்பக்கல்வி மேற்கொள்வதற்காக பாலர்பாடசாலைகள் நடாத்தப்படுகின்றது. யாழ் மாவட்டத்தில் மாத்திரம் 175 க்கும் மேற்பட்ட பாலர் பாடசாலைகள் நடாத்தப்படுகின்றன. பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் போசாக்குக்காக பாடசாலை நாட்களில் போசாக்கு உணவுகளான பயறு, பால்மா, ஜீவாகாரம், இலைக்கஞ்சி ஆகியன வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் பாடசாலைகளில் விளையாட்டுப்போட்டிகள் நடாத்தப்படுகின்றன. இவைகிராம மட்டத்தில் நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்படும் மாணவர்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றுவர். இதில் வெற்றிபெறும் மாணவர்கள் பரிசுகளையும், சான்றிதழ்களையும் பெறுவர். ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் பாடசாலைரீதியாக கலைவிழாக்கள் நடாத்தப்படுகின்றன. சிறுவயதிலிருந்து மாணவர்களின் கலையார்வத்தை வளர்த்தலே இதன் நோக்கமாகும். தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் தேவைப்படும் போது மாணவர்களும், ஆசிரியர்களும் கிராமமக்களும் ஒன்றிணைந்த சிரமதானங்களை மேற்கொள்கின்றனர். காலத்துக்குக்காலம் குறித்த திகதியில் பெற்றோருக்கான கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. இதில் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி, கலை விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் சிரமதானங்கள் பற்றிப் பேசப்படுகின்றன. பாலர் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கட்கு காலத்துக்குக் காலம் பயிற்சிகளும், கருத்தரங்குகளும் ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளும் நடாத்தப்படுகின்றன.

நிறுவனத்தினால் யாழ் மாவட்டத்தில் நடாத்தப்படும் பாலர் பாடசாலைகள் பற்றிய விபரங்கள்

| இலக்கம் | உதவி அரச அதிபர் பிரிவு | பாடசாலை எண்ணிக்கை | ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | சங்கானை | 15 | 27 |
| 02 | நல்லூர் | 14 | 31 |
| 03 | யாழ்ப்பாணம் | 17 | 33 |
| 04 | தெல்லிப்பளை | 17 | 31 |
| 05 | கோப்பாய் | 21 | 35 |
| 06 | சாவகச்சேரி | 18 | 27 |
| 07 | உடுவில் | 111 | 19 |
| 08 | கரவெட்டி | 16 | 25 |
| 09 | கரணவாய் | 16 | 23 |
| 10 | பருத்தித்துறை | 05 | 28 |
| 11வட | வடமராட்சி கிழக்கு | 08 | 05 |
| | மொத்தம் | 167 | 284 |

| செயற்பாடுகள் | உ.அ.அ. பிரிவு எண்ணிக்கை | பயன்பெற்றோரின் எண்ணிக்கை | அளவு | பெறுமதி |
|---|---|---|---|---|
| 1. நிவாரணம் | | | | |
| 1.1 உலர் உணவு | 22 | 5270 குடும்பங்கள் | 47,445 கி.கி | 1,873,942.00 |
| 1.2 பாவனை | 08 | 21080 அங்கத்தவர் | 5290 பொதி | 264,500.00 |
| 1.3 புடவைகள் | 03 | 2621 குடும்பங்கள் | 2036 சாறம்-கள் | |
| | | | 539 படுக்கைவிரிப்பு-க்கள் | |
| | | | 836 பெனியன்கள் | |
| | | | 1483 நடுவண்டைத் துணிகள் | 483,185.00 |
| 1.4 உபகரணங்கள் | 01 | 200 | 200 தொகுதிகள் | 10,000.00 |
| 1.5 மருந்துகள் | | | | 868,000.00 |
| 2. சத்துணவு | | | | |
| 2.1 காம்ப் (முகாம்) | 05 | 2367 குடும்பங்கள் | | |
| | 55 முகாம் | 9380 உறுப்பினர் | 12,125 கி.கி | 748,257.00 |
| 2.2 பாடசாலைகள் குழந்தைகளுக்கான | 08 | 105 பாடசாலை 3345 பிள்ளைகள் | 3,327 கி.கி | 198,044.00 |
| 3. கிரமதானம் | 01 | | | 22,117.00 |
| 4. புனர்வாழ்வு | | | | |
| 4.1 தற்காலிக கொட்டில் | 01 | 200 | | 500,000.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 5. வருவாய்க்கு பூமி | | | |
| 5.1 விவசாய விலைகள் | 01 | 1298 | 500,000.00 |
| 5.2 விவசாயப்பணம் | 01 | 1298 | 327,125.00 |
| 6. கல்வி பயன்பாட்டுச் செயற்பாடுகள் | 06 | | 36,384.50 |
| 7. போக்குவரத்து | | | 200,000.00 |
| | | | 5,976,550.50 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ.இ)

எக்லன்டைன் ஜெப் என்ற அம்மையாரினால் 1919ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி சிறுவர் பாதுகாப்பு நிதியம் தொடங்கப்பட்டது. ஒக்ஸ்போட் பல்கலைக்கழக பட்டதாரியான இவர் ஆரம்பக் கல்வி ஆசிரியராகவும் பயிற்சி பெற்றிருந்தார். 1913ம் ஆண்டு மசிடோனியன் உதவி நிதியத்தின் சார்பில் போல்கன் தீவுகளில் உதவி செய்வதற்கென அங்கு சென்றிருந்தார். அங்கே சிறுவர்கள் படும் அவல நிலையை நேரில் பார்த்த இவர் மிகவும் கவலையடைந்தார். அந்த நாட்டு பஞ்சத்தினால் பீடிக்கப்பட்டு இருக்கும் ஆதரவு அற்ற சிறுவர்களின் நலன் கருதி கொண்டு ? புரிய தனது சீவிய காலம் முழுவதையும் அர்ப்பணித்தார்.
1914– 1918 ம் ஆண்டுகளில் நடந்த மகாயுத்தத்தில் அங்கு தொண்டர்கள் தொடர்ந்தும் சேவை செய்யக் கூடிய வகையில் இல்லாததினால் எக்லன்டைன் ஜெப் அம்மையார் இலண்டன் நகரத்திற்கு திரும்பினார். ஆதரவற்ற பல்லாயிரக் கணக்கான சிறுவர்களின் அவல நிலையை பொதுக் கவனத்திற்கு எடுத்துக் காட்டி அப்பேற்பட்ட சிறுவர்களுக்கு பணி செய்வதே தனது வாழ்நாள் தொண்டு என்று தீர்மானித்துக் கொண்டார்.

இந்த நிதியத்தின் செயற்பாடு உலகத்தின் 7 பிராந்தியங்களில் செயற்பட்டு வருகின்றது. அவை கரீபியன் தீவுகளும், இலத்தீன் அமெரிக்காவும், மத்திய கிழக்கும் வட ஆபிரிக்காவும் மேற்காபிரிக்கா, கிழக்கு ஆபிரிக்கா, தென்கிழக்கு ஆபிரிக்கா, தென்னாசியா, தென்கிழக்காசியாவுமாகும். ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டு செலவீனங்களில் கிட்டத்தட்ட 40% மான பங்கு ஆபிரிக்காவிலும், 34% மான பங்கு தென்னாசியா, தென்கிழக்காசியாவிலும் 13%மான பங்கு மத்திய கிழக்கு வடஆபிரிக்கா ஆகிய பிரதேசங்களிலும் 6 வீதமான பங்கு கரீபியன் தீவுகள் இலத்தீன் அமெரிக்காவிலும் செலவிடப்படுகின்றது. மிகுதிப்பணம் தலைமை அலுவலக நடவடிக்கைகளுக்கு செலவிடப்படுகின்றது.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள வேலைத் திட்டங்களை விட ஏனைய நாடுகளில் (84) இயங்கி வருகின்றது. நீண்ட காலமாக அபிவிருத்திக்குப் போதிய கவனம் கொடுக்காத போதிலும் அது அவசர காலங்களில் அளிக்கப்படும் உதவியைப் போலவே முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியதொன்றாகும். இதற்கை விரிந்த வேலைகளில் ஈடுபடும் மக்களின் மத்தியில் மனத் தைரியத்தையும், நம்பிக்கை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் உண்டாக்கும். அதே வேளையில் சமுதாயங்களுக்கும், குழந்தைகளுக்கும் அவர்களின் தலை நிலையில் இருந்த நிரந்தர முன்னேற்றப் பாதையில் செல்லவும் நிதியம் சந்தர்ப்பத்தை அளிக்கிறது.

## சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நோக்கங்கள்

சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஒரு தன்னார்வத் தொண்டர் நிறுவனமாகும். இது அரசியல் சார்பற்றது. தேசம், சாதி, சாதியம், சமயம் ஆகிய பேதங்களின்றி விலகி சிறுவர்களின் நீண்ட கால நலன் கருதி செயற்படுவதையும் அதே காலங்களில் உதவி செய்வதே தனது பணி என இந்நிதியம் கூறுகிறது. அமைப்பு விதி சங்க உறுப்புரைகளில் எழுதப்பட்டு இருக்கிறது. இவை 1923ம் ஆண்டு எக்லன்டைன் ஜெப் அம்மையாரினால் வரையப்பட்ட கொள்கையை தழுவி 1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் சில மாற்றங்களுடன் சிறுவரின் உரிமை பிரகடனமாகும். குழந்தைகளின் நலன் கருதி கொள்கைகளை உண்டு பண்ண தீர்மானங்கள் எடுக்கும் தாபனங்களையும், தனியார்களையும் இந்நிதியம் தனது நடைமுறை அனுபவங்களை ஆதாரம் வைத்து அவர்களுடன் இடைபடவும் செயல்படுகிறது.

## இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐக்கிய இராச்சியம்)

சமூக சேவைகள் அமைச்சுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திற்கமைய 1979ம் ஆண்டு சிறுவர் பாதுகாப்பு நிதியம் இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் இலங்கை சமூக சேவைகள் பாடசாலையுடன் சேர்ந்து ஒரு இணை செயற்பாட்டை நடத்துவதே நோக்கமாக இருந்தது. இச்செயல்திட்டத்தின்படி இந்நிதியத்தின் கடமை, பயிற்சி நிகழ்ச்சிகளைத் திட்டங்களின் தாக்கத்தை மேம்படுத்த செயற்பட்டு வருகிறது. இலங்கை அரசுடன் இணைந்து உள்நாட்டு தேவைகளுக்கு ஏற்ப பல செயற்திட்டங்களில் ஈடுபட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதியத்தினால் ஆற்றப்படும் கடமைகள்

சமூக அபிவிருத்தி நெறிகளை நடாத்துதல்

சிறுவர் பராமரிப்பு நெறிகளை நடாத்துதல்

ஆராய்ச்சிகளை செய்தல்

சிறுவர் நிலையங்களை தரமுயர்தல்

போஷாக்கு நிலையங்களை நடாத்துதல்

தின பராமரிப்புத் திட்டம்

ஆலோசனை அளிப்பதும் வழிகாட்டுவதும்

பராமரிப்பும் பாதுகாப்பும்

தொழில் வாய்ப்புக்களில் பயிற்சியளித்தல்

விபரீதங்களில் உதவுதல்

## சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ.இ)

எக்லன்டைன் ஜெப் என்ற அம்மையாரினால் 1919 ஆம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி சிறுவர் பாதுகாப்பு நிதியம் தாபிக்கப்பட்டது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் ஆரம்பக் கல்வி ஆசிரியையாகவும் பயிற்சி பெற்றிருந்தார். 1913ம் ஆண்டு மசிடோனியன் உதவி நிலையத்தின் சார்பில் பொல்கன் தீவுகளில் உதவி செய்வதற்காக அங்கு சென்றிருந்தனர். அங்கே சிறுவர்கள் படும் அவல நிலையை நேரில் பார்த்த இவ்வம்மையார் மிக கவலை கொண்டார். இன்று தொட்டு பசிபிணியால் பீடிக்கப்பட்டிருக்கும் ஆதரவு அற்ற சிறுவர்களின் நலம் கருதி தொண்டு புரிய தனது சீவியகாலம் முழுவதையும் அர்ப்பணித்தார். 1914 – 1918 ஆம் ஆண்டுகளில் நடந்த மகாயுத்தத்தின் போது அங்கு தொண்டர்கள் தொடர்ந்தும் சேவை செய்யக் கூடிய நிலையில் இல்லாததினால் எக்லன்டைன் ஜெப் அம்மையார் இலண்டன் நகரத்திற்கு திரும்பினார். ஆதரவற்ற பல்லாயிரக் கணக்கான சிறுவர்களின் அவல நிலையை பொது சனத்திற்கு எடுத்துக் காட்டி அப்பேற்பட்ட சிறுவர்களுக்கு பணிசெய்வதே தனது வாழ் நாள் தொண்டு என்று தீர்மானித்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிதியம் உலகத்தில் 7 பெரிய பிராந்தியங்களில் செயற்பட்டு வருகின்றது. அவை கரிபியன் தீவுகளும் இலத்தீன் அமெரிக்காவும், மத்திய கிழக்கும் வட ஆபிரிக்காவும், மேற்கு ஆபிரிக்கா, கிழக்கு ஆபிரிக்கா, தென்கிழக்கு ஆபிரிக்கா தென் ஆசியா, தென்கிழக்கு ஆசியா ஆகும். ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டு செலவினங்களில் கிட்டத்தட்ட 40 வீதமான பங்கு ஆபிரிக்காவிலும், 34 வீதமான பங்கு தென் ஆசியா, தென்கிழக்காசியாவிலும் 19 வீதமான பங்கு மத்திய கிழக்கு ஆசியாவிலும் வடஆபிரிக்கா பிரதேசங்களிலும் 6 வீதமான பங்கு கரிபியன் தீவுகள் இலத்தீன் அமெரிக்காவிலும் செலவிடப்படுகின்றது. மிகுதிப்பணம் தலைமை அலுவலக நடவடிக்கைகளுக்காக செலவிடப்படுகின்றது.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஐக்கிய இராஜதானியில் உள்ள வேலைத் திட்டங்களை விட ஏனைய 34 நாடுகளில் இயங்கி வருகின்றது. நீண்ட கால அபிவிருத்திக்கு போதிய கவனம் கொடுக்காத போதிலும் அது அவசர காலங்களில் அளிக்கப்படும் உதவியைப் போலவே முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியதொன்றாகும். இயற்கை விபரீத வேளைகளில் சமுதாயத்தினர்களுக்கும், குழந்தைகளுக்கும் அவர்களின் அவல நிலையில் இருந்து நிரந்தர முன்னேற்றப் பாதையில் செல்லவும் இந்நிதியம் சந்தர்ப்பத்தை அளிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் சிறுவர் பாதுகாப்பு நிதியம்

சிறுவர் பாதுகாப்பு நிதியமானது தனது வேலைத் திட்டத்தை 1985 ஜூலையில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தது. இதனுடைய முக்கியநோக்கம் சிறுவர் பாதுகாப்பும், சிறுவர் பராமரிப்பும் ஆகும். ஆனால் தற்போதைய நிலைமை காரணமாக நிதியமானது அகதிகளுக்கான நிவாரண புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிதியம் உலகத்தில் 7 பெரிய பிராந்தியங்களில் செயற்பட்டு வருகின்றது. அவை கரீபியன் தீவுகளும் இலத்தீன் அமெரிக்காவும், மத்திய கிழக்கு வட ஆபிரிக்காவும், மேற்கு ஆபிரிக்கா, கிழக்கு ஆபிரிக்கா, தென்கிழக்கு ஆபிரிக்கா தென் ஆசியா, தென்கிழக்கு ஆசியா ஆகும். ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டு செலவினங்களில் கிட்டத்தட்ட 40 வீதமான பங்கு ஆபிரிக்காவிலும், 34 வீதமான பங்கு தென் ஆசியா, தென்கிழக்காசியாவிலும் 19 வீதமான பங்கு மத்திய கிழக்கு ஆசியாவிலும் வடஆபிரிக்கா பிரதேசங்களிலும் 6 வீதமான பங்கு கரீபியன் தீவுகள் இலத்தீன் அமெரிக்காவிலும் செலவிடப்படுகின்றது. மிகுதிப்பணம் தலைமை அலுவலக நடவடிக்கைகளுக்காக செலவிடப்படுகின்றது.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஐக்கிய இராஜதானியில் உள்ள வேலைத் திட்டங்களை விட ஏனைய 34 நாடுகளில் இயங்கி வருகின்றது. நீண்ட கால அபிவிருத்திக்கு போதிய பலம் கொடுக்காத போதிலும் அது அவசர காலங்களில் அளிக்கப்படும் உதவியைப் போலவே முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியதென்றாலும். இயற்கை விபரீத வேளைகளில் சமுதாயத்தினர்களுக்கும், குழந்தைகளுக்கும் அவர்களின் அவல நிலையில் இருந்து நிரந்தர முன்னேற்றப் பாதையில் செல்லவும் இந்நிதியம் சந்தர்ப்பத்தை அளிக்கின்றது.

<u>யாழ்ப்பாணத்தில் சிறுவர் பாதுகாப்பு நிதியம்</u>

சிறுவர் பாதுகாப்பு நிதியமானது தனது கிளை ஸ்தாபனத்தை 1985 யூலையில் யாழ்ப்பாணத்தில் அமைத்தது. இதனுடைய முக்கியநோக்கம் சிறுவர் பாதுகாப்பும், சிறுவர் பராமரிப்பும் ஆகும். ஆனால் தற்போதைய நிலைமை காரணமாக நிதியமானது அகதிகளுக்கான நிவாரண புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதியத்தின் செயற்பாடுகள்

### சிறுவர் பாதுகாப்பு உதவித்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் நிதியமானது சிறுவர்களைப் பராமரிப்புடன் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பினை வழங்கி அவர்களுக்கான கல்வி, சுகாதாரம் போஷாக்கு என்பவற்றை கவனித்து வருகின்றது. இதன்படி சுகாதார தரிசிப்பாளர்களைச் நியமித்து அவர்கள் மூலமாக குழந்தைகளின் உடல் நலம் கவனிக்கப்படுவதுடன் அவர்களின் போஷாக்கு நிலைமைகளும் கவனிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் நிதியமானது 187 அநாதைக் குழந்தைகளைப் பராமரித்து வருகின்றது. அவர்களுக்கு வேண்டிய பணம் உட்பட சகல உதவிகளும் நிதியத்தினால் வழங்கப்படுகின்றது. இவர்களை ~~அநா~~ அநாதைக் குழந்தைகளாக அநாதை இல்லத்தில் சேர்ப்பதைத் தடுப்பதற்காகவே இவர்களை வீடுகளில் வைத்து நிதியம் பராமரித்து வருகின்றது. இவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளும் நிதியத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### சுகாதார உதவித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் நிதியமானது சுகாதார தரிசிப்பாளரை நியமித்து தாய், சேய் சுகாதார நலன்களைப் பேணுகின்றது. இதற்காக சுகாதார தரிசிப்பாளர்களுக்கு வேண்டிய பயிற்சிகளையும், சம்பளங்களையும் நிதியம் வழங்கி வருகின்றது. இத்துடன் அரச வைத்தியசாலைகளில் ஏற்படும் வைத்தியர் பற்றாக்குறையை நீக்கவும் நிதியமானது வைத்தியர்களை நியமித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் யாழ் தாதியர் பயிற்சிப் பாடசாலைக்கு தேவையான உபகரணங்களை வழங்குவதுடன் தேவைப்படும் போது விரிவுரைகளை நடாத்தியும் பல வழிகளில் நிதியம் உதவியளித்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி நிவாரணத் திட்டம்

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சொந்த இடங்களை விட்டு வெளியேறி அகதிகள் முகாம்களில் தங்கி உள்ளவர்களுக்கு இந்நிறுவனமானது உடனடி நிவாரணமாக உலர் உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றது. இதன்படி சாவகச்சேரியில் உள்ள அனைத்து அகதிகளுக்கும் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வருவதுடன் உடுபுடவைகளும் சமையல் பாத்திரங்கள், சவர்க்காரங்கள், பாவனைப் பொருட்கள் முதலியன வழங்கப்பட்டன. இதே பொருட்கள் உடனடி நிவாரணமாக தீவுப் பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களுக்கும் வழங்கப்பட்டன.

## விவசாய உதவித்திட்டம்

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் இடம் பெயர்ந்த விவசாயிகளுக்கும் உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன்படி வடமராட்சியிலும், சங்கானையிலும் விவசாயிகள் உதவித் திட்டமானது நடைமுறைப் படுத்தப்பட்டது. இதில் விவசாயிகளுக்கு கடன்கள் நிதியத்தினால் வழங்கப்பட்டது. இவை சிறு சிறு தொகையாக மீளப் பெறப்பட்டு மீண்டும் ஒரு தொகை விவசாயி களுக்கு கடனாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் * கீழ் விவசாயிகளின் நீர்ப் பாசன வசதிக்காக பொன்னாலையில் உள்ள நீர் தாங்கியை நிதியம் புனரமைப்பு செய்தது. இதனால் நூற்றுக் கணக்கான விவசாயிகள் நன்மையடைந் தனர்.

நிதியமானது விவசாயத் திணைக்களத்துடன்சேர்ந்து தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்குத் தேவையான விதை வகைகளான குரக்கன், பயறு, மரக்கறி விதைகள், புகையிலை விதைகள், நல்ல இன விதைகள், மண்ணெண்ணெய், உரவகைகள் கிருமிநாசினிகள் என்பவற்றை கடனடிப்படையில் வழங்கியுள்ளது. இத்திட்டத்துடன் இணைந்த வகையில் வடமராட்சி கிழக்கு வாழ் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் கடனடிப்படையில் பணமாகவும், மீன்பிடி உபகரணங்களான வலை போன்ற உபகரணங்க ளும் வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம்

அ) உணவு
ஆ) சமையல் அறை உபகரணங்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்கள்
இ) உடைகள்
ஈ) பிளாஸ்ரிக் கூரைகள்
உ) குழந்தைகளுக்கான பைக்கற்றுக்கள்

தாதிமார் பயிற்சிக் கல்லூரிக்கான உதவி

புத்தகங்கள், எழுது உபகரணங்கள், சாதனங்கள் கல்வியும்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் பிரிவிற்கான உதவி

அ) மருந்து வகைகள் ஆ) சாதனங்கள் இ) மேலதிக உணவுத் திட்டம்

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரிக்கான உதவி

அ) சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்கான நிதியுதவி
ஆ) மருந்துகளும், சாதனங்களும்
இ) வீட்டுத் தோட்ட விதைகள்

கிராம அபிவிருத்திச் சுகாதாரத் திட்டத்திற்கான உதவி

அ) சுகாதாரபணியாளர் பயிற்சிக்கான உதவி
ஆ) கிராமிய சுகாதார உதவியாளர்களுக்கும், சுகாதாரப் பணியாளர்களுக்கும் வேதன உதவி
இ) மருந்துகள்
ஈ) ஊர்காவற்றுறை, குருநகர், வைத்தியசாலைக்கான சாதனங்கள்
உ) தாய், சேய் நிலையங்களுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அபிவிருத்தியில் பிந்திய வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான வளர்ப்பு நிதியுதவி

ஜெய்ப்பூர் கால் உற்பத்தித் தொழிற்சாலைக்கு சக்கர நாற்காலிகளும் முச்சக்கர வண்டிகளும் செய்வதற்கான உதவி

பருத்தித்துறை வைத்தியசாலை, மானிப்பாய் ஜெய்ப்பூர் கால் உற்பத்தி நிலையம் யாழ் நகர சபை என்பவற்றின் புனர் நிர்மாண பணிகளுக்கான உதவி

பிள்ளைகளுக்கான சத்துணவுக் கலவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதி முகாம்களில் சுகாதாரக் கல்வித்திட்டம்

சாவகச் சேரியில் உள்ள ஆதரவற்ற தாய்மார்களுக்கு வருவாய்க்கு வழிகாட்டும் திட்டம்

யாழ் மாவட்டம் முழுவதற்குமான அநாதைகள் ஆதரவுத் திட்டம்

உடுவிலில் உள்ள "ஆரீக்" இற்கான உதவி

கைதடியில் உள்ள அரச முதியோர் இல்லத்திற்கு சமையலறைப் பொருட்கள்

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் உள்ளூர்க் குழுக்களுக்கும் மிதிச்சக்கர பாரவூர்தி விநியோகம்

முனைப் பாலர் பூசியர் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள்

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கமக்காரர்களுக்கான உதவி

அ. நெல், பாசிப்பயறு, குரக்கன்

கரவெட்டியில் உள்ள கமக்காரர்களுக்கானஉதவி

வடமராட்சி கிழக்கில் உள்ள மீனவர்க்கான உதவி (வள்ளம், வலைகள்)

கைத்தொழில் திணைக்கள உதவி இயக்குநர்க்கான உதவி

அ. புதிய நெல் இனங்களை புகுத்துவதற்கு

ஆ. பழமரக்கன்று, காய்கறி விதைகள் உற்பத்தி

இ. பாசிப்பயறு, குரக்கன், விதைகள் உற்பத்தி

ஈ. காய்கறி பயிரிடல்

சங்கானை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள பெண்களை புனர்வாழ்வு

கல்வித் திணைக்களத்திற்கான உதவி

அ) பரீட்சைத் தாள்கள் (போக்குவரத்து)

ஆ) பயிற்சிப் புத்தகங்கள்கொண்டு வருதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் புனர் வாழ்வுக்கழகம்

1983ம் ஆண்டு ஜூலையில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். இதனால் தென்பகுதியில் காலம் காலமாக வாழ்ந்து வந்த தமிழர்களும் மலைநாட்டைச்சேர்ந்த மக்களும் பல்வேறு இடங்களுக்கும் அகதிகளாக இடம் பெயர்ந்து சென்றனர். இவர்கள் இலங்கையின் வட கிழக்குப்பகுதிகளுக்கும் இந்தியாவுக்கும், வேறும் பல வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந்து சென்றனர். இவர்களுள் அதிகமானோர் இந்தியாவுக்கு படகு மூலமாகச் சென்றிருந்தனர்.

இவ்வாறு இந்தியாவுக்குச் சென்றிருந்த ஈழத்தமிழ் அகதிகளின் நலன் பேணவே தமிழர் புனர் வாழ்வுக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அகதிகளை தமிழ்நாட்டு அரசு நன்கு ஆதரித்துப் பராமரிக்கவில்லை. இத்தேவையைப் பூரணமாக நிறைவேற்றவே தமிழர் புனர் வாழ்வுக்கழகம் அங்கு செயல்பட வேண்டியதாயிற்று.

பின்னர் தென்பகுதியில் இருந்தும், மலை நாட்டிலிருந்தும் அகதிகளாக இடம்பெயரும் நிலை மாறி சொந்த மண்ணிலேயே அகதிகளாக மாறுகின்ற நிலை வடகிழக்குப் பிரதேசத்தில் ஏற்பட்டது. இது இயற்கை அழிவுகளால் அன்றி பூரணமாகவே இலங்கை அரசின் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கையினாலேயே ஆகும்.. இதன் காரணமாக தமிழர் புனர் வாழ்வுக்கழகம் வடகிழக்குப் பகுதிகளில் செயல்பட ஆரம்பித்தது. இது வட கிழக்குப் பகுதியில் இயங்கும் அகதிகள் புனர் வாழ்வு நிறுவனங்களுள் முக்கியமான ஒன்றாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழகத்தின் செயற்பாடுகள்

### உடனடி நிவாரணம்

வட கிழக்குப் பகுதிகளில் எல்லாத இராணுவ நடவடிக்கை களினால் இடம்பெயரும் அகதிகளுக்கு உடனடிநிவாரணமாக உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. இதில் அரிசி, மா, சீனி போன்றவையும், சமையல் பாத்திரங்களும் வழங்கப்படுவதுடன் தேவை ஏற்படுமிடத்து சமைத்த உணவுகளும், பால் போன்றவையும் வழங்கப்படு கின்றன. அகதிகளின் உடனடித்தேவை கருதி சமைத்த உணவை வழங்கும் ஒரு நிறுவனமாக தமிழர் புனர் வாழ்வுக்கழகம் விளங்குவது குறிப்பிடத் -தக்கது.

### அழுத்தோர் உதவி

இராணுவ நடவடிக்கை காரணமாக அப்பாவிச்சூடு, ஷெல் தாக்குதல், விமானத்தாக்குதல், வெறித்தாக்குதல்களால் காயமடைந் தோருக்கும், அங்கங்களை இழந்த அழுத்தோருக்கும் பண உதவிகள் வழங்கப்படுகின்றன.

### விதவைகள் புனர்வாழ்வு

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக உழைக்கும் கணவனை இழந்து விதவையாக்கப்பட்டவர்களுக்கும், அவர்களது பிள்ளைகளுக்குமாகப் பல புனர் வாழ்வுத்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. அத்துடன் அவர்களுக்குப் பண உதவிகளும் செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையல் பயிற்சி நிலையங்கள்

இராணுவ நடவடிக்கைகளினால் கணவனை இழந்த விதவைகளும், படித்த தொழில் அற்ற கீழ்மட்ட சமூகங்களைச் சேர்ந்த யுவதிகளும் வருமானத்தை உழைத்துக் கொள்வதற்காக பல தையல் பயிற்சி நிலையங்கள் கழகத்தினால் நடாத்தப்படுகின்றன. இவர்களுக்குப்பயிற்சியின் போது சம்பளம் வழங்கப்படுகின்றன. பயிற்சியின் பின்னர் இவர்கள் தாங்களாகவே வருமானத்தை உழைத்துக் கொள்ள முடியும்.

## சிக்கன கடன் உதவி

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த தமது வாழ்க்கைத் தொழிலை இழந்தவர்களுக்கு தற்காலிக தொழில் ஒன்றை நடாத்துவதற்காக சிக்கன கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் கணவனை இழந்த விதவைகள் சுயதொழில் ஒன்றைச் செய்து கொள்வதற்காகவும் கடன்கள் வழங்கப்படுகின்றன. விவசாயிகளுக்கும், மீன்பிடித் தொழிலாளர்களுக்கும் சிக்கனக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

## அனாதைகள் புனர் வாழ்வு

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தாய் தந்தையர்களை இழந்த குழந்தைகளைப்பராமரிப்பதற்காக அனாதைகள் இல்லங்கள் நடாத்தப்படுகின்றன. இவர்களுக்குத் தேவையான சகல உதவிகளும் கழகத்தினால் வழங்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன்புரி நிலையங்கள்

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடத்திற்குத் திரும்பும்வரை அவர்களைத் தங்கவைத்து பராமரிப்பதற்கான நலன்புரிநிலையங்கள் நடாத்தப்படுகின்றன. இவை பாடசாலைகள், கோவில்கள் போன்ற பொதுஇடங்களிலும் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டில்களிலும் நடாத்தப்படுகின்றன. இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களை தங்கவைத்துப்பராமரிப்பதற்கான குடிசைகள், கிணறுகள், மலசலகூடங்கள் என்பன கழகத்தினால் கட்டப்படுகின்றன. இவர்களுக்குத்தேவையான சமைத்த உணவுகள், உலர் உணவுகள், சமையல் பாத்திரங்கள், உடுதுணிகள் என்பனவும் கழகத்தினால் வழங்கப்படுகின்றன.

## குழந்தைகள் புனர்வாழ்வு

குழந்தைகள் புனர்வாழ்வுக்காக பல பாலர் கல்விநிலையங்கள் நடாத்தப்படுகின்றன. குழந்தைகள் நலன்புரி நிலையங்கள் நடாத்தப்படுகின்றன. குழந்தைகளுக்குத்தேவையான சத்துணவுத்திட்டங்களும் நடாத்தப்படுகின்றன.

## அகதிகள் குடியேற்றத்திட்டங்கள்

இனக்கலவரங்கள் காரணமாகவும், இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும் நிரந்தரமாக இடம்பெயர்ந்து அகதிகளாக்கப்பட்டவர்களை நிரந்தரமாகவே குடியேற்றுவதற்கான குடியேற்றத்திட்டங்களும் கழகத்தினால் நடாத்தப்படுகின்றன. இதற்காக காணிகள் தெரிவு செய்யப்பட்டு அங்கு அகதிகள் குடும்பங்களுக்குத் தேவையான வீடுகள், கிணறுகள், மலசலகூடங்கள் என்பன கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு குடியேற்றப்படுபவர்களும் மீண்டும் மீண்டும் அகதிகளாக இடம்பெயர்வது கவலை தரும்விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) தற்காலிக கொட்டகைகள்

தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு களில் முறையே 500, 385 தற்காலிகக் கொட்டகைகள் இடம் பெயர்ந்தோருக்காக கட்டிக்கொடுக்கப்பட்டன. அவற்றிற்கான செலவுகள் முறையே ரூபா 1,375,000/-, ரூபா 800,000/- ம் ஆகும். இரண்டாவது தொகையில் 75% யாழ்ப்பாணச் செயலகத்தின் புனர் வாழ்வுப்பிரிவு வழங்கியதாகும்.

(2) விவசாய செயற்பாட்டுக்கருத்திட்டம்

விவசாய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 365 பயன் பெறும் குடும்பங்களுக்கு ரூபா 380,260/- செலவிடப்பட்டது.

(3) அகதி முகாம்கள் பராமரிப்பு

தெல்லிப்பளை, மருதங்கேணி, பருத்தித்துறை உதவி அரசாங் அதிபர் பிரிவுகளிலுள்ள 52 அகதிமுகாம்களில் கல்வி சுகாதார, சுத்தமாக்கல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 18,785 பேரைக்கொண்ட 4039 குடும்பங்கள் இம்முகாம்களில் பராமரிக்கப்படுகின்றன. கிணறுகள், மலசலகூடங்கள் என்பனவற்றினை சரி செய்வதற்காகவும், புதியவற்றை அமைப்பதற்காகவும் ரூபா 403,500/- செலவிடப்பட்டது.

(4) குழந்தைகட்கான பாடசாலைகள்

யாழ்ப்பாணம், மருதங்கேணி, பருத்தித்துறை, தெல்லிப் ளை உதவி அரச அதிபர் பிரிவுகளிலுள்ள 1402 பிள்ளைகட்கு 41 ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு முந்திய கல்வி கற்பிக்கிறார்கள். இந்த ஆசிரியர் கட்கு ஊக்குவிப்புத்தொகையாக மாதாந்தம் ரூபா 500/- வழங்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-படுகின்றன. தளபாடங்களும், சத்தளவுகளும் தனிப்பதற்காக ரூபா 326,000/- செலவிடப்பட்டது.

(5) உடைகள்
-----

வேறு மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்த 495 குடும்பங்களுக்கு மல்லாகத்துடன் இணைந்த ரூபா 495,000/- இந்தளவு உடைகள் வழங்கப்பட்டன.

(6) நிவாரணம்
------

ரூபா 12,967,295/- பெறுமதியான 317 மெட்ரிக் தொன் உணவுகளும், ரூபா 636,295/- பெறுமதியான காய்கறிகளும் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

(7) கைம்பெண் திட்டம்
------------

27 கைம்பெண்களுக்கு தமது சொந்த முயற்சி மூலம் சுய தேவைகள் பூர்த்திக்காக ரூபா 21,000/- உதவிப்பணமாக வழங்கப்பட்டது.

(8) சுயதொழில் வாய்ப்புக்கடன் வசதிகள்
----------------------

சிலவர்த்தகம் குடிசைக்கைத்தொழில் என்பவற்றில் ஈடுபடுவதற்-காக 1612 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ரூபா 2,959,750/- கொடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, மருதங்கேணி, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், தென்மராட்சி போன்ற இடங்களி-லுள்ளோர் இதனால் பயனடைந்தார்கள். ஐ.ஆர்.எல் 83 தென்மராட்சித்திட்டத்தில் எம்மோடு பங்கு கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9) தையற் பயிற்சி நிலையம்

ஆர்.ஆர்.என் 1983 இன் உதவியுடன் யாழ்ப்பாண நகரத்தில் ஒர் தையற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் பத்துப்பெண்கள் இப்போது பயிற்சி பெறுகிறார்கள்.

(10) புள்ளிவிபரவங்கி

மக்களுக்கும் உடமைகட்கும் ஏற்பட்டசேத விபரங்களைத் திரட்டுவதற்காக அரசசார்பற்ற நிறுவனங்களின் கட்டமைப்பிற்கு ரூபா 100,000,000/- உதவியாக வழங்கப்பட்டது.

(11) "இனக்கலவரத்தினால் ஏற்பட்ட சேதங்களை கணிப்பதற்காகவும் இதற்கான புனர்வாழ்வு செயற்பாடுகளை அடையாளம் காண்பதற்காக -வுமான வேலைத்தளம்" ஒன்று 1991 செப்டம்பர் 6,7ம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிகள் புனர் வாழ்வுக்கழகம் T.R.R.O

இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதல் பல்வேறு வடிவங்களில் மக்கள் அகதிகளாக்கப்பட்டு வந்துள்ளனர். 1958, 1977, 1981, 1983 களில் நடைபெற்ற இனவாதப் பிரளயங்கள் தெற்கிலிருந்து மத்தியதர தொழிலாளர் வர்க்க மக்கள் பாதுகாப்பின் பொருட்டு இடம்பெயர்வதை நிர்ப்பந்தித்தன. ஆயிரக்கணக்கான இந்திய தமிழ்க்குடும்பங்கள் அகதிகள் முகாம்களில் தஞ்சம் புகுந்தனர். இந்த அகதிகளை அவர்களின் முன்னைய இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு அரசாங்கம் முயன்ற போது அவர்களது பயங்கர அனுபவங்கள் தடைக்கற்களாகின. பல வருடங்களாக நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்து அரச செல்வம் பெருக்கிய மக்களின் அவலநிலை கண்டு ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் விளைவே தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக்கழகமாகும்.

மனித நேய உந்துதலினால் அகதிகளுக்கு புனர் வாழ்வு அளித்து ஜீவனோபாயம் கொடுத்து வாழ்வளிக்கும் குறிக்கோளைக் கொண்டு 1977ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18ம் திகதி தமிழர் அகதிகள் புனர் வாழ்வுக்கழகம் எனும் பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனம் 1982ம் ஆண்டு யூன் 22ம் திகதி வரையறுக்கப்பட்டதாக இலங்கைக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. ஆனால் இது 1983 யூலையில் தான் செயற்படத் தொடங்கியது. 1983ம் ஆண்டு யூலை மாதம் நடைபெற்ற இனக்கலவரத்தின் போது குடும்பத்தலைவனை, தாயை, குழந்தைகளை, வீடுவாசலை சொத்துக்களை இழந்து வடபகுதி நோக்கி எக்கதியுமற்ற அகதிகளாக வந்த மக்களுக்கு புனர் வாழ்வளித்தல், அவர்களை மீளக்குடியமர்த்தல் நோக்குடன் இது தன் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிகோள்கள்

(1) அகதிகளுக்கு உடனடி நிவாரணங்களாக உணவு, உடை, உறைவிடம், மருந்து போன்றவற்றைக் கொடுத்தல்.

(2) மத, சமூக ஸ்தாபனங்களின் அனுசரணையுடன் அகதிகள் குடும்பங்களை மீளக்குடியமர்த்தல்.

(3) இனக்கலவரங்களுக்கு பலியான குடும்பத்தலைவர்களின் ஆதரவற்ற குடும்பங்களுக்கு உடனடியாகவோ, தொடர்ச்சியாகவோ தேவைக்கேற்றபடி புனர்வாழ்வு அளித்தல்.

(4) மருத்துவ உதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(5) ஆதரவற்ற குடும்பங்களின் நன்மைக்காக வருமானமளிக்கக்கூடிய சமூக செயற்திட்டங்களை ஏற்படுத்தல்.

## நிறுவனத்தினால் வழங்கப்படும் உதவிகள்

### உடனடி உதவி

இனக்கலவரத்தினாலும், இராணுவ நடவடிக்கையினாலும் குடும்பத் தலைவனை இழந்த குடும்பங்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும், காயப் பட்டவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படுகின்றன. குடும்பத்தலைவனை இழந்த குடும்பம் ஒன்றுக்கு உடனடி உதவியாக ரூபா 1000/-ம், காயப்பட்டவர்களுக்கு 50 ரூபாவிலிருந்து 1000/- ரூபா வரையிலான பணஉதவியும் வழங்கப்படுகின்றது. இது முகாமில் உள்ளோருக்கும் உறவினர் வீடுகளில் தங்கி இருப்போருக்கும் வழங்கப்படுகின்றது. இத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை, மருந்து ஆகிய உதவிகளும் உடன் வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிக உதவி

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டவர்களுக்கும், குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கும் நிரந்தரமாக ஊனமுற்றோரின் குடும்பங்களுக்கும் அவர்கள் வருமானத்தைத் தேடிக்கொள்வதற்காக சுயதொழில் முயற்சியில் ஈடுபடக்கூடியதாக தையல் இயந்திரம், கோழிப்பண்ணை, மாட்டுப்பண்ணை, ஆட்டுப்பண்ணை, சிறுகடை, மீன்பிடி, கமம் போன்றவற்றுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. கடுமையாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையினை வங்கியில் நிலையான வைப்பிலிட்டு பெறப்படும் வட்டி மூலமாகவும் உதவிகள் மாதாந்தம் வழங்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக நலன்புரி வேலைத்திட்டங்கள்

---

நிறுவனத்தின் செயற்திட்டப் பிரிவினால் பின்வரும் சமூக நலன் புரி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

(1) மீளகுடியமர்த்தல்

(2) பாதிக்கப்பட்டோர் தொழில் முயற்சிகளை மீள ஆரம்பித்தல்.

(3) வன்செயல்களினால் பிரதான உழைப்பாளிகளை இழந்த குடும்பங் களுக்கான புனர் வாழ்வு

(4) அகதிகள் குடியேற்றம்

(5) ஏனைய சமூக நல அபிவிருத்தி

மீளக்குடியமர்த்தல்

---

இராணுவ வன்செயல்கள் காரணமாக வீடுகளை இழந்த இடம்பெயர்ந்த வறிய மக்களுக்கு தற்காலிக வதிவிடங்கள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. இத்திட்டமானது கிராமியரீதியில் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒரு வீட்டுக்கான உதவித் தொகையானது 3000/- ரூபாவிலிருந்து 6000/- ரூபாவரை வேறுபடுகின்றது. மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, யாழ் மாவட்டங்களில் இத்திட்டம் செயற்படுத்தப் -பட்டது. ஏறக்குறைய 2500 குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் உதவியைப் பெற்று மீளக்குடியமர்த்தப்பட்டனர். இவ்வாறு மீளக்குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மீண்டும் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்து இடம்பெயர்ந்தமை கவலை தரும் ஒரு விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் முயற்சிகளை மீள ஆரம்பித்தல்

இத்திட்டத்தின் கீழ் விவசாய உதவித்திட்டங்கள், மீன்பிடி உதவித் திட்டங்கள், தச்சு, மேசன் தொழிலாளர் உதவித்திட்டம் போன்ற திட்டங்களுக்கான உதவிகள் வழங்கப்படுகின்றன.

விவசாய உதவித்திட்டம்

மாவிட்டபுரம் போன்ற பகுதிகளில் கைவிடப்பட்ட வெற்றிலைத் தோட்டங்களைப் புனரமைப்பதற்கும், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, பூன்னாலைக்கட்டுவன் போன்ற இராணுவ முகாம்களுக்கு அண்மையில் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள தோட்டங்களை மீண்டும் பயிர்ச்செய்கைக் -குட்படுத்த இத்திட்டத்தின் கீழ் பல உதவிகள் வழங்கப்படுகின்றன. ஆரம்பத்தில் இத்திட்டத்தின் கீழ் உதவிகள் நிவாரணமாக வழங்கப்பட்டன. ஆனால் தற்பொழுது இவை கடன் திட்டமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இம்முயற்சிகளுக்கான உதவிகள் உள்ளீடுகளாகவும், பணமாகவும் வழங்கப்படுகின்றது. நிவாரணமாக 750 விவசாயிகள் நன்மை அடைந்துள்ளனர்.

23 கிராமங்களில் கிராமத்துக்கு 25 விவசாயிகள் என்ற அடிப்படையில் சிறுவிவசாயிகள் கடன் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இவை கிராமிய அமைப்புக்களின் செயற்பாட்டுத்திறமைகளை வளர்க்கும் நோக்குடன் கிராமிய அமைப்புக்களினூடாக செயற்படுத்தப்படு கின்றன. மிக வறுமை மட்ட விவசாயிகள் இத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்படுகின்றனர். இத்திட்டத்திற்காக எந்தவிதமான நிபந்தனைகளும் விதிக்கப்படமாட்டாது. இவ்வுதவிகள் யாருக்கு முக்கியமாகத் தேவைப்படு -கின்றதோ அவர்களுக்கே இவ்வுதவிகள் சென்றடைய வேண்டும் என்பதில் நிறுவனம் கவனம் செலுத்துகின்றது. அடிப்படை சமூகமாற்றத்தை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதய நிலமை காரணமாக ஏற்பட்ட வன்செயல்கள், விவசாய நட்டங்கள், பாதிப்புக்கள் என்பவற்றின் விளைவாக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடன்களை மீளப்பெறுவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வட்டியில்லாக் கடன்களாகவே. வழங்கப்படுகின்றன.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக வெளியேற்றப்பட்ட விவசாயக் குடும்பங்களில் 100 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் பிறிதோர் இடத்தில் விவசாயத்தை மேற்கொள்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டன. இதற்காக விவசாயிகளுக்கு கடன்கள் வழங்கப்பட்டன. அவர்களிடமிருந்து மீளப்பெற்ற தொகையிலிருந்து மேலும் 50 விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் நிவாரண உதவியாக 1000/- ரூபாவிலிருந்து2500/- ரூபாவரை உதவியாக வழங்கப்படுகின்றது. கடனாக 2750/- ரூபாவிலிருந்து 8500/- ரூபாவரையான உதவிகள் வழங்கப்படுகின்றன. நிறுவனத்தினால் எதிர்காலத்தில் செயற்படுத்த இருக்கும் கடன் திட்டங்களுக்கு இந்தத் திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றத்திட்டம்

அகதிகள் குடியேற்றத்திட்டமானது 1983ம் ஆண்டே ஆரம்பிக்கப் -பட்டது. 1983 ஜுலையில் நடைபெற்ற இனக்கலவரங்கள் காரணமாக பல்லாயிரம் தமிழ் மக்கள் தென்பகுதிகளிலிருந்தும், மலையகத்திலிருந்தும் வடக்கு கிழக்குக்கு இடம்பெயர்ந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்து வடக்கு நோக்கி வந்தவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் ஊற்று, முறிப்பு கோணாவில் ஆகிய மூன்று கிராமங்களை உருவாக்கி குடியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு குடிசைகள், கிணறு, பயிர்ச்செய்கைக்கான உதவிகள், மருந்து உதவிகள் வழங்கப்பட்டு 300 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. பல பிரச்சனைகளுக்கும் மத்தியிலும் 215 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்றும் அக்கிராமங்களில் குடியிருக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மை -யோர் மலையக மக்களாவர்.

ஏனைய சமூகநல அபிவிருத்தித்திட்டங்கள்

செவிப்புலனற்றோர் தொழில் முயற்சித்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் புலன்களை இழந்தோர் சுயதொழிலில் ஈடுபட்டு வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உதவிகள் வழங்கப்படுகின்றன. இவர்களுக்கு முற்றும் நிவாரணமாகவே உதவிகள் வழங்கப்படுகின்றன. சுயதொழில் முயற்சிகளான மெழுகுவர்த்தி, கடிதஉறை, இனிப்பு, டொபி, கற்பூரம் போன்ற பொருட்களைத் தயாரிப்பதற்கான இயந்திரங்களும், மூலப்பொருட்களும் வழங்கப்படு கின்றன. இத்திட்டமானது கைதடி நவீல்டில் பாடசாலையில் உள்ள செவிப்புலன்ற்றோருக்கு வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து இவர்கள் வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். இது சிறப்பாக இயங்கிய ஒரு திட்டமாகும். ஆனால் தற்போதைய சூழ்நிலைகள் காரணமாக இத்திட்டத்திற்கான மூலப்பொருட்கள் இன்மையால் இத்திட்டமானது பாதிக்கப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சித்திட்டம்

இத்திட்டமானது நிறுவனத்தினால் நடாத்தப்படும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கும், ஏனைய பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிக்கும் திட்டமாகும். இத்திட்டமானது அறவழிப் போராட்டக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டு நிறுவனத்தினால் நிதியளிக்கப்பட்டது.

வேறு உதவிகள்

அரியாலை கிழக்கு வாழ் வறிய 37 குடும்பங்களுக்கு சுய தொழில்களை ஆரம்பிப்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டன. இதன்படி ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2000 ரூபா வரையிலான உதவிகள் வழங்கப்பட்டன. அத்துடன் இவர்களுக்கு ஒரு சனசமூக நிலையம் அமைப்பதற்கும், 10 பொதுக்கிணறுகள் அமைப்பதற்குமான உதவிகளும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிவாரணம்

இடம்பெயர்ந்த கீழ் மாகாண பல்கலைக்கழக மாணவர்கட்கான உதவி, இடம்பெயர்ந்த மாணவர்கட்கான உதவி, ஊர்காவற்றுறை - சீருடைத்துணி விநியோகம் வல்வெட்டித்துறை - சமையல் உபகரணங்கள், வடமராட்சி உணவு உற்பத்தி, அகதிமுகாம்கள் பராமரிப்பும், இடம்பெயர்ந்தோருக்கான உதவிகளும், பாவனவு இடம்பெயர்ந்த மாணவர்கட்கான கல்வி உதவிகள், வன்முறையில் பாதிக்கப்பட்ட -வர்கட்கான உடனடி உதவி, பாடசாலைப்பிள்ளைகட்கான எழுதுகருவிகள், செயற்கைக்கால் பொருத்துதல்.

## புனர் வாழ்வு

கமச்செய்கை - சுழற்சிமுறைக்கடன், வடமராட்சி வலிகாமம் பிரதேசங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கான தற்காலிக குடில்களும், பொருளாதார உதவியும், இடம்பெயர்ந்த மீன்பிடிக் குடும்பங்கட்கான உதவிகள், தீவகத்திலிருந்தும், வேறு இடங்களில் இருந்தும் இடம்பெயர்ந்தோருக்கான அரைநிரந்தர வதிவிடங்கள், கைம்பெண்கள், அநாதைகட்கான உதவி, அரியாலையில் சனசமூக அபிவிருத்தி கமச்செய்கை, திக்கத்தில் 30 மீன்பிடிக்குடும்பங்கட்கான புனர் வாழ்வு. அமெரிக்க உதவி / 'கெயர்' விவசாயத்திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண வாலிபர் கிறிஸ்தவ இயக்கம்

1844ம் ஆண்டில் இலண்டன் மாநகரிலே சேர் ஜோர்ஜ் வில்லியம்ஸ் என்பவரின் தலைமையில் 12 வாலிபர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் ஓய்வு நேரங்களைப் பயனான வழிகளில் செலவிட வேண்டும் என்றும் தங்களுடைய ஜீவியம் பிறருக்குப் பிரயோசனமுடையதாக அமைய வேண்டும் என்றும் அதற்கு வேதாகமப் படிப்பு மிகவும் இன்றியமையாதது. என்று செய்த தீர்மானத்தின் விளைவாக வாலிபர் கிறிஸ்தவ இயக்கம் முதன் முதல் இங்கு ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் கிளைகள் உலகின் பல பாகங்களிலும் நிறுவப்பட்டு இன்று சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன.

1884 ம் ஆண்டில் வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியிலும் 1885ம் ஆண்டில் யாழ் மத்திய கல்லூரியிலும் இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட தொடங்கின. 1939ஆம் ஆண்டு வாலிபர் கிறிஸ்தவ இயக்கத்தின் மகாநாடு ஒன்று யாழ்ப்பாணக் கல்லூரியில் மிகவும் சிறப்பாகவும், எடுப்பாகவும் நடைபெற்றது. யாழ்ப்பாணச் சரித்திரத்தில் முக்கிய இடத்தையும் பெற்றது. 1962ம் ஆண்டில் பல அகதிகளைக் கொண்டிருந்தமை இதனை அடப்பிய சேவையை நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது. 1970ம் ஆண்டில் பரந்தனில் நிறுவப்பட்டு இன்று வரை சிறப்புறச் சேவையாற்றி வரும் இளைஞர் பயிற்சி நிலையத்தின் முதல் அங்கமாகவும், முக்கிய நிர்வாகக் குழுவாகவும் யாழ்ப்பாண வாலிபர் கிறிஸ்தவர் இயக்கம் இருந்து செயலாற்றுகின்றது. இந்தப் பயிற்சி நிலையம் விவசாயம், மாட்டுப்பண்ணை, ஓட்டுநர் பயிற்சி, றக்டர் பயிற்சி ஆகியவற்றில் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. இதுவரை சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர் இங்கு பயிற்சி பெற்று வெளியேறி உள்ளனர். இவர்களில் பலர் அரசாங்க சேவையிலும் சிலர் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்று தமது வாழ்க்கையில் மேம்பாடடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பயிற்சிக்குக் காலத்திற்குக் காலம் தெரிவு செய்யப்படும் இளைஞர்களுக்கு இலவசமாக உணவு, தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பயிற்சி நிலையம் கொழும்பு வாலிபர் கிறிஸ்தவ தேசிய இயக்கத்தினர் நேரடி இயக்கத்தின் கீழ் இயங்கி வந்தாலும் இதன் நிர்வாகப் பொறுப்பையும், ஊழியர் பொறுப்பையும் யாழ்ப்பாண வாலிபர் கிறிஸ்தவ இயக்கம் கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். 1983ம் ஆண்டு வடபகுதியில் ஏற்பட்ட இராணுவப் பிரச்சனைகளால் யாழ்ப்பாணம், கந்தர்மடம் பழம் வீதியைச் சேர்ந்த பல வீடுகள் எரிந்து நாசஞ் செய்யப்பட்டன. இப்படியாக வீடுகளை இழந்த எட்டுக் குடும்பங்களும் அவர்கள் இருந்த காணியிலே புதிய வீடுகளை அமைத்துக் கொடுத்து அவர்களை மீளவும் அங்கு குடியேற்றி அவர்களுக்கு புதிய வாழ்வு அளிக்கப்பட்டது. 1983ம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு வீடு, வாசல், பொருள் பண்டங்களை எல்லாம் இழந்த அநேக குடும்பங்கள் தெற்கிலங்கையில் இருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். இவர்கள் ஆங்காங்கே நிறுவப் பட்டிருந்த அகதிகள் முகாம்களில் வைத்துப் பராமரிக்கப்பட்டனர். யாழ்ப்பாண வாலிபர் கிறிஸ்தவ இயக்கத்தின் முன்னாள் தலைவரும் அதன் முக்கிய ஆலோசனை நிர்வாகியுமாகப் பணியாற்றி காலஞ்சென்ற திரு.வே.எச் சபாரத்தினம் அவர்கள் தாம் அங்கம் வகித்த அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் 1983இல் வழங்கிய நிதியத்தின் மூலம் இயக்கச்சிப் பகுதியில் வேண்டிய அன்பளிப்புச் செய்த 40 ஏக்கர் காணியை 64 குடும்பங்களுக்கு தலா அரை ஏக்கர் வீதம் பகிர்ந்தளித்து அக்காணியில் ஒரு வீடும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அத்துடன் மண்டபம் ஒன்றையும் நிறுவி அதில் தையல் பயிற்சி நிலையம், பாலர் பாடசாலை சமூக அபிவிருத்தி மண்டபம் ஆகியவற்றை அமைத்து அவ்வூருக்கு "சாந்திபுரம்" என்று பெயரிட்டு அதனைப் பராமரித்து வருகின்றது.

பொது மண்டபத்தில் தையல் பயிற்சி, பாலர் பாடசாலை, இரவுப் பாடசாலை ஆகியவற்றை நடாத்துவதுடன் அங்கு குடியேறிய மக்களின் பொருளாதார விருத்திக்காக கோழிப்பண்ணை வீட்டுத் தோட்டம் என்பவற்றை ஒவ்வொரு குடும்பமும் மேற்கொள்ள நிதியுதவி வழங்கியது. அவர்கள் கைதொழில் செய்து ஜீவனம் நடாத்தவும் நிதியுதவி வழங்கியது. இப்படியாகக் குடியேற்றம் செய்யப்பட்ட 64 குடும்பங்களுக்கு தனித்தனி மலசல கூடங்கள், கிணறுகள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987ம் ஆண்டில் நடுப்பகுதியில் வடபகுதியில் ஏற்பட்ட பாதிப்பினால் குடும்பங்களில் சுமார் ஆயிரம் குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு உடனடி நிவாரணமாக உணவுப் பொருட்கள், உடுபுடைவைகள், சமையல் பாத்திரங்கள் என்பவைகளை வழங்கி அவர்களின் துயர் துடைத்தது.

இதே காலப் பகுதியில் குடும்பத் தலைவனை இழந்த பதினெட்டுக் குடும்பங்களுக்கு 18 வீடுகளைக் கட்டிக் கொடுத்து அவர்களின் துயர் துடைத்து வாழ்வளித்தது. இந்த வீடுகள் இணுவில், உடுவில், சுன்னாகம், தீவுப் பகுதிகளில் யாழ் நகரப் பகுதி ஆகிய இடங்களில் நேரடிக் கண்காணிப்பின் கீழ்க் கட்டிக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

1987ம் ஆண்டில் நடைபெற்ற 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவ மாணவிகளுக்கு அடுத்தபடியாகப் புள்ளிகளைப் பெற்ற மூன்று பிள்ளைகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு வருடமொன்றுக்கு ரூபா 1080/- வீதம் வழங்கி வருகின்றது. இப்பரீட்சையில் தெரிவு செய்த இரு ஆண் பிள்ளைகளில் ஒருவர் யாழ் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்று வருகின்றனர். ஒரு பெண்பிள்ளை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றார்.

1987ம் ஆண்டில் ஏற்பட்ட பாதிப்பினால் குடும்பத்தில் உழைப்பாளியை இழந்த குடும்பத்தைச் சேர்ந்த 85 பிள்ளைகளுக்கு நாதம் ரூபா150/- வீதம் கொழும்பு சொம்சா நிறுவனத்தின் மூலம் உதவி பெற்று வழங்கி வருகின்றது.

யாழ்ப்பாண வாலிபர் கிறிஸ்தவ இயக்கம் யாழ் மாநகரத்தைச் சேர்ந்த கலைமகள் சனசமூக நிலையப் பாலர் பாடசாலை இயக்கச்சி, சாந்திபுரம் பாலர்பாடசாலை ஆகிய மூன்று பாலர் பாடசாலைகளையும் பொறுப்பேற்று நடாத்தி வருவதுடன் இப் பாடசாலைகளில் கற்பிக்கும் 7 ஆசிரியைகளுக்கும் மாத வேதனமாக ரூபா 355/- வீதம் வழங்கி வருவதுடன் இப்பாடசாலைகளில் கற்கும் பிள்ளைகளுக்கு பிஸ்கற், பால் வழங்குவதற்கு மாதாந்தம் ரூபா 250/- வீதமும் வழங்கி வருகின்றது. சுமார் 150 பிள்ளைகள் வரை இங்கு கல்வி கற்று வருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைப் படிப்பை முடித்து பாடசாலையை விட்டு வெளியேறித் தொழில் இன்றி இருக்கும் வயது வந்த இளம் பெண் பிள்ளைகளுக்குத் தொழிற்பயிற்சி வழங்குவதற்கு அரியாலை கலைமகள் வீதியில் ஒரு தையல் பாடசாலையும் இயக்கச்சி சாந்தபுரத்தில் ஒரு தையல் பாடசாலையும் நிறுவி நடாத்தி வருவதுடன் இப்பயிற்சி நிலையங்களுக்கு வேண்டிய தையல் இயந்திரங்களையும் இன்னும் தேவையான பொருட்களையும் வழங்கி உற்சாகப்படுத்தி வருவதுடன் இங்கு தையற் பயிற்சியை பயிற்றுவிக்கும் ஆசிரியைகளுக்கு வேதனமாக தலா ரூபா 350/- வீதம் மாதாந்தம் வழங்கி வருகிறது. அரியாலை தையல் பயிற்சிப் பாடசாலையில் கற்கும் பிள்ளைகளுக்கு தையல் பயிற்சியுடன் வாரத்தில் இரண்டு நாட்கள் மனையியல் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. சுமார் இருபது பிள்ளைகள் இப்பயிற்சியைப் பெற்று வருவதை குறிப்பிடத் தக்கதாகும். யாழ்ப்பாண வாலிபர் கிறிஸ்தவ இயக்கத்தின் மாதாந்த வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கமாக ஒரு கடைத் தொகுதியை அமைத்தல் நல்லது என்று 1985ம் ஆண்டு தலைவராக இருந்த திரு.எம்.சி.பிரான்சிஸ் அவர்கள் கூறிய ஆலோசனைக்கேற்ப போசனசாலையின் வடக்குப் பகுதியைப் பிரித்து ஒரு கடையும் மேற்குப் புறமாக இரு மாடிகளைக் கொண்ட கடைத் தொடர் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டது. அவைகள் வாடகை அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளன.

பொது மண்டபமும் மேல் மாடியில் உள்ள சில அறைகளும் கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்கும் கிரியோஸ் வேதாகம சங்கம் யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கியம், ஸ்கோப் நிறுவனம், யாழ் திருச்சபை நற்செய்திக் கழகம், செஞ்சிலுவைச் சங்கம், அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்1983 ஆண்டு ஸ்தாபனங்களின் கூட்டங்கள் நடாத்துவதற்கும் மண்டபத்தையும் தமது பணியைச் செய்வதற்கான காரியாலயமாகப் பாவிக்க அறைகளையும் காலத்துக்குக் காலம் கொடுக்கப்பட்டு வருகிறது.

இராணுவத் தாக்குதலினால் பெருஞ் சேதமடைந்த மண்டபத்தின் மேற் கூரையை பெருந் தொகையான நிதியினைச் செலவிட்டு திருத்த வேண்டிய கட்டாயமான நிலைமை ஏற்பட்டது. மேல்மாடியில் இருந்த அறைகளில் பாவனைக்கு இருந்த கட்டில்கள் மேசைகள், மின்விசிறிகள், மெத்தைகள், கட்டிலுக்குரிய விரிப்புக்கள், தலையணைகள் எல்லாம் நெருக்கடியான காலத்தில் தொலைந்தும் பழுதடைந்தும் போய்விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தின் மேற்கூரையைப் புதிதாக அமைக்கவும் அறைகளுக்கு வேண்டிய சகல பொருட்களையும் வேண்டுவதற்கும், வேண்டிய நிதியை கொழும்பு வாலிபர் கிறிஸ்தவ தேசிய இயக்கம் பெருமனதுடன் வழங்கியது. இதற்குத் தேசிய இயக்கத்தின் முக்கி யத்துவத்தை முக்கிய நிர்வாகிகளுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

நூற்றாண்டு விழாவின் ஞாபகமான திருநெல்வேலிப் பகுதியில் பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதன் முன்னோடியாக அம்பிகை மகாத்மாஜி சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்டு வந்த பாலர் பாடசாலையை 1990ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் பொறுப்பேற்று நடாத்தி வருவது குறிப்பிடத் தக்கதாகும். யாழ்ப்பாண வாலிபர் கிறிஸ்தவ இயக்கத்தின் 75வது ஆண்டு விழா மலரில் தி.டபிள்யூ,.எச் தேவடாட்சம் அவர்கள் எழுதிய கட்டுரையில் இருந்து பல ஆதாரங்களைப் பெறக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. குறிப்பிடத்தக்கக் கூடியதாகும்.

இவ்வாறாகக் கடந்த 100 வருடங்களாக இவ்வியக்கம் பல இன்னல்களுக்கு மத்தியில் கடவுளின் கிருபையால் வழி நடத்தப்பட்டு இன்று பல முன்னேற்றங்களை அடைந்த நிலையிலே காணப்படுகின்றது. புதிய காலத்துக்குள்ளே இன்று பிரவேசிக்கும் யாழ்ப்பாண வாலிபர் கிறிஸ்தவ இயக்கம் மக்கள் சேவையை மனதில் கொண்டு இறைவனின் வழி நடத்தலில் நடந்து கிறிஸ்தவ சேவையை மக்களுக்கும், நாட்டுக்கும் ஆற்ற வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இவ்வியக்கத்தைச் சேர்ந்த சகல நிர்வாகிகள், அங்கத்தவர்கள், எல்லோரினதும், முயற்சிகளும், சேவைகளும் மென்மேலும் விருத்தியடைந்து எமது நாட்டிலே சேவை மனப்பான்மையும், தியாக சிந்தையும் கொண்ட புதிய சமுதாயம் தோன்ற வேண்டும் என்ற ஆண்டவரின் ஆசீர்வாதங்களும், வழிநடத்துதலும் தொடர்ந்து இந்த இயக்கத்தின் மேல் இருக்க வேண்டும் என்று நாம் எல்லோரும் இறைவனிடத்தில் மன்றாடுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85 அநாதைகளுக்கு 150/- வீதம் வழங்கப்பட்டது.

சிறுவர் பாடசாலைகள் கீழ்க்காணும் இடங்களில் நடாத்தப்படுகின்றன.

1. காந்தி சிறுவர் பாடசாலை — அரியாலை
2. கலைமகள் சிறுவர் பாடசாலை — அரியாலை
3. யக்கச்சி சிறுவர் பாடசாலை — யக்கச்சி
4. மகாத்மாஜி சிறுவர் பாடசாலை — திருநெல்வேலி
5. நவாந்துறை சிறுவர் பாடசாலை — நவாந்துறை

திருநெல்வேலியிலும் யக்கச்சியிலும் இரண் தையல் நிலையங்கள்

பரந்தனில் ஒரு இளைஞர் பயிற்சி நிலையம் இங்கு விவசாயப் பயிற்சி வழங்கப்படுகிறது. இப்போது இங்கு 19 பயிற்சியாளர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களுக்குத் தங்குமிடம் உணவு, பயிற்சி போன்றன இலவசமாக வழங்கப்படுகின்றன.

4 மாணவர்கள் தரை மூன்று புலமைப் பரிசில் தொகையாக 500/- பெறுகிறனர். 14- 16 வயதிற்கு உட்பட்ட ஆண்/பெண் இருவருக்கும் 3 நாள் பயிற்சி முகாம் அமைக்கப்பட்டது. 59 பிள்ளைகள் இதில் பங்குபற்றினர்.

40 மீனவர்களுக்கு சுற்றுக் கடனாக ரூபா 2500 வீதம் வழங்கப்பட்டது. இதில் வலைகள் வழங்கப்படும் இந்தக் கடனை மீண்டும் சிலர் கட்டத் தொடங்கி விட்டனர்.

வர்த்தக கல்வி நிலையம் ஒன்று எம்மால் நடாத்தப்படுகிறது. இதில் பாடசாலையில் வெளியேறிய மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். இதில் ஆங்கிலத் தட்டச்சு, சுருக்கெழுத் தமிழ்த்தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி வழங்கப்படுகிறது. மே மாத முடிவில் முதலாவது தொகுதி மாணவர்கள் வெளியேறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் நலம் காக்கும் பிரிவு

1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஒன்றாம் திகதி வெள்ளிக்கிழமை அன்று இருபாலை பேச்சியம்மன் ஆலயத்தில் இடம் பெற்ற உண்ணாவிரதப் பிரார்த்தனையில் இவ் அமைப்பு உருவாகியது. யாழ் குடா நாட்டில் மக்கள் அமைதியும், நிம்மதியும் அற்று இருந்த வேளையில் பல்வேறு காரணங்களாலும் மக்கள் என்றும் இல்லாதவாறு பற்பல இடர்களை ஒன்றன் பின் ஒன்றாக சந்திக்க நேர்ந்தது. இத்தருணத்தில் மக்களின் அமைதி வேண்டியும், நபர்களின் இருந்த விடுதலை வேண்டியும் தமிழ் மக்கள் தன்னாதிக்கம் பூரண இறைமை உள்ள தனித்துவ இனமாக சகல சுபீட்சமும் பெற்று வாழ வேண்டியும், மௌன ஊர்வலம் ஒன்றை இருபாலை பொது நல அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் ஒழுங்கு செய்தோம். இவ்வூர்வலம் இருபாலை தனிட்டன் வீரபத்திரர் ஆலய முன்றலில் ஆரம்பமாகி இருபாலை கிழக்குப் பகுதி ஊடாக பேச்சியம்மன் ஆலயத்தை வந்தடைந்து அங்கே அமரர் திரு.செல்லையா சபாரட்ணம் அவர்கள் தலைமையில் உண்ணாவிரதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. உண்ணாவிரதத்தில் மதப் பிரார்த்தனைகளும் உண்ணாவிரத மகிமைகள் குறித்த சொற்பொழிவுகளும் இடம் பெற்று மாலையில் இருபாலைச் சந்தி வர்த்தகர்கள் ஒழுங்கு செய்திருந்ததாக சாந்தி உபசரணையுடன் இனிது நிறைவேறியது. பின்பு தேவை ஏற்படும் சமயங்களில் ஊர்வலங்கள், பிரார்த்தனைகள், உண்ணாவிரதங்கள் என்பன எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டு வந்தது. இவற்றுக்கு அவ்வப்போது அமரர் திரு.செல்லையா சபாரட்ணம் அவர்கள் தலைமை தாங்கி வந்தார்.

1987ம் ஆண்டு சித்திரைத் திங்கள் இரண்டாம் நாள் மேற்படி ஊர்வலங்கள் பிரார்த்தனைகள் உண்ணாவிரதங்களில் முக்கிய பங்காற்றிய பெரியார்களை ஒன்று கூட்டி சகல மதங்களுக்கும் இணைந்த சர்வமதப் பிரார்த்தனையாக மாதந்தோறும் நடாத்துவதற்கு முன்னோடியாக ஓர் நிர்வாகக் குழுவை தெரிவு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தோம். இவ்வேண்டுகோளை அன்புடன் ஏற்றிருந்த பெரியவர்கள் நிர்வாக சபை ஒன்றைத் தெரிவு செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின் மாதந்தோறும் முதல் வரும் சனிக்கிழமைகளில் உண்ணாவிரதத்துடன் கூடிய சர்வமதப் பிரார்த்தனை அதிகாலை முதல் பிற்பகல் வரை இடம்பெற்று வந்தது. (நிர்வாக சபை விபரம் உள்ளே தரப்பட்டுள்ளது)

1987 ம் ஆண்டு ஆனித்திங்கள் ஆறாம் நாள் அச்சுவேலி, தம்பாலை, வலாய், இடைக்காடு, பத்தைமேனி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் இலங்கை இராணுவத் தேடுதல் நடவடிக்கைகளினால் தமது இல்லங்களை விட்டு வெளியேறி வேறு கிராமங்களுக்கு புகலிடம் தேடிச் சென்ற வண்ணம் இருந்தனர். இவர்களில் சுமார் 40 குடும்பங்களை ( 210 அங்கத்தவர்களை) நாம் பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மீண்டும் உடனடியாக இருபாலைப் பகுதி பொதுநல அமைப்புக்களின் ஒத்துழைப்புடனும் எம்முடன் இணைந்து பங்காற்றி வரும் பெரியார்களினதும் ஒத்துழைப்புடன் பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டது. குறித்த அகதிகளை பராமரிக்க பெருமளவு நிதி/பொருள் தேவைப்படுவதால் நிதி/பொருள் சேகரிப்பிலும் மற்றும் அகதிகள் பராமரிப்பிலும் ஈடுபடக் கூடியவாறு செயற்குழு தெரிவு செய்யப்பட்டு இருபாலை நலன் காக்கும் பிரிவு என்ற பெயரும் உருவாக்கப்பட்டது. 1987ம் ஆண்டு ஆவணித் திங்கள் 8ம் நாள் வரை எமது அகதி முகாம் பராமரிப்பு சேவை நீடித்தது. இதில் தொண்டர்களாக கடமை புரிந்தவர்களது பெயர்களும் உதவி வழங்கியோரின் விபரங்களும் உள்ளே தரப்பட்டுள்ளது.

1987ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 10ம்நாள் ஆரம்பமான இந்திய அமைதிப் படையினரின் தேடுதல் நடவடிக்கைகளினால் கோப்பாய்ப் பகுதி மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டு தமது இல்லங்களை விட்டு வெளியேற நேர்ந்தது. 1987ம் ஆண்டு நவம்பர் மாதப் பிற்பகுதியில் தான் பெரும்பாலான மக்கள் தமது இல்லங்களுக்கு வருகை தரக் கூடியதாக இருந்தது. இச்சமயத்தில் தமது குடும்பத் தலைவர்களை அல்லது உறுப்பினர்களை இழந்தும், உடமைகளை இழந்தும், வீடுகளை இழந்தும், பலர் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இதனைக் கண்ணுற்ற நாம் அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்ய முன்வந்தோம். இருந்தும் அந்நேர சூழ்நிலைகளால் உடனடியாக எம்மால் இயங்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988ம் ஆண்டு தைமாதப் பிற்பகுதி முதல் பாதிப்புற்ற கோப்பாய்ப் பகுதி மக்களின் தகவல்களை திரட்டி வந்தோம். 1988ம் ஆண்டு மாசி மாதம் மீண்டும் மேற்கூறிய பொது நலன்விரும்பிகளை அழைத்துக் கூட்டம் நடாத்தி மக்களின் நிலைப்பாட்டை விளக்கிக் கூறினோம். இதன் பலனாக 1988ம் ஆண்டு சித்திரை மாதம் நான்காம் திகதி கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு எனப் பெயர் மாற்றம் செய்து புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு புதிய யாப்பு விதியும் அங்கீகரிக்கப்பட்டது. யாப்பு விதியை நாம் தயாரித்த போது கோப்பாய் தெற்கு நடாத்கர்தோரடி வாசியான திரு.யா.இமானுவேல் அவர்கள் பேருதவி வழங்கி இருந்தார். குறித்த யாப்பு விதி நகல் பிரதி பொதுச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. அதனின் ஆராய உபகுழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டு இருந்தது. உபகுழு செய்த சில திருத்தப் பிரேரணைகளுடன் யாப்பு விதி பொதுச்சபையில் ஏகமனதாக அங்கீகரித்து நிறைவேற்றப்பட்டது. இதனை அடுத்து புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. நிர்வாகசபை விபரம் உள்ளே தரப்பட்டுள்ளது.

இவ் அமைப்பின் சின்னமாக பசு, பசுக்கன்று, பாற்குடம் அமைய வேண்டிய நோக்கத்தை சிறிது வெளிப்படுத்த விரும்புகின்றோம். சாதாரண நாட்டுப் பசுவானது புல் தரைகளை நாடிச் சென்று தனது உணவைத் தேடிக் கொள்கின்றது. தனது கன்றுக் குட்டிக்குப் பால் கொடுப்பதுடன் நின்று விடாது மீதிப் பாலைப் பிறருக்கும் பயன்பெறச் செய்கின்றது. அதே போல் இக்கிராமிய அமைப்பும் பிற ஸ்தாபனங்களிடம் இருந்து உதவிகளைப் பெற்று அங்கத்தவர்களுக்கும், அங்கத்தவர் அல்லாதவர்களுக்கும் உதவிகளை வழங்கும், என்ற நோக்கில் இச் சின்னம் தெரிவாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது கடந்த காலப் பணிகள்

1. 1987ம் ஆண்டு வைகாசி மாதம் அச்சுவேலி, இடைக்காடு, தம்பாலை, வளலாய், பத்தமேனிப் பகுதியில் இடம் பெயர்ந்த சுமார் 60 குடும்பங் களைக் கொண்ட 210 அங்கத்தவர்களை 1987 ஆவணி வரை உள்ளூர் பொது மக்களின் பெருமளவு நன்கொடையுடன் பராமரித்து வந்தது.

2. 1988ல் எரியுண்ட ஓலைக் குடிசை வீடுகளுக்கு ( 3வீடுகள் ) சீமெந்து, கல், மணல் என்பன வழங்கி வீடுகள் புனரமைக்க உதவியது. இதற்கு போருட் ஸ்தாபனம் ரூபா 50,000/ வழங்கி இருந்தது. மற்றும் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83 மூலமும் உதவி பெறப்பட்டது.

3. 1989இல் கோப்பாய் தெற்கில் எரியுண்ட கைத்தறி நெசவாளர்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் மூலம் 43,650 ரூபா சுழற்சிமுறைக் கடனாக வழங்கப்பட்டது.

4. 1989 இல் கோப்பாய் தெற்கு சலவைத் தொழிலாளர்களுக்கு போருட் ஸ்தாபன உதவியுடன் ரூபா 25000/ இளைப்பாற்று மண்டபம் அமைத்துக் கொடுத்தது. அத்துடன் நீர் இறைக்கும் இயந்திரமும் வழங்கப்பட்டது.

5. அவுஸ்திரேலிய தூதுவராலயம் செய்த உதவியுடன் 1989 இல் ரூபா ஒரு இலட்சத்து முப்பதினாயிரம் 20 விதவைகளுக்கு சுயதொழில் முயற்சிக்காக உதவிகள் வழங்கப்பட்டது.

6. 1989இல் இலண்டனில் உள்ள ஸ்கொட் ஸ்தாபனம் மூலம் பத்து ஆங்கில தமிழ் தட்டச்சு இயந்திரங்களும், பத்து தையல் இயந்திரங்களும் பெறப்பட்டு இலவச பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

7. 2989இல் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் மூலம் 192,500/ விவசாயிகளுக்கு சுழற்சி முறைக் கடனாக வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. 1989இல் தென்னாசியா பாட்னசிப் நிறுவனம் மூலம் தந்த இலட்சம் திட்டத்தில் 2,50,000 ரூபா பெறப்பட்டு பத்து விதவைகளுக்கு 97,000 செலவில் சுயதொழில் வழங்கப்பட்டது. மேலும் இங்கு 35 குடும்பங்களுக்கு மலசலகூடமும், 40 சிறுவர்களுக்கு பாடசாலையும் அமைத்துக் கொடுக்கப் பட்டது.

9. 1991 கெயர் அமெரிக்க விவசாய உதவித் திட்டத்தில் 1500 பயனாளி களில் கோப்பாய், உரும்பிராய் தெற்கு, அன்னுங்கை, கோண்டாவில் வடக்கு, குமரகோட்டம், நாயன்மார்கட்டு விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டது.

<u>குறிப்பாக கடந்த ஆறுமாத கால சேவைகள்</u>

10. 1992 இல் 1000 விவசாயிகளுக்கு கெயர் அமெரிக்க விவசாய உதவித் திட்டத்தில் கோப்பாய், உரும்பிராய் தெற்கு, நாயன்மார் கட்டுப்பகுதி விவசாயிகளுக்கு உதவி வழங்கப்பட்டது.

11. 1992இல் இலங்கை ஸ்கொட் ஸ்தாபனம் மூலம் 36,000/- பெறுமதியில் கிருமிநாசினி தெளிகருவிகள் 10 விவசாயிகளுக்கு நீர்வேலி ப.நோ.கூ.சங்கம் மூலம் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டது.

12. தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சு வகுப்பு நடைபெற்று வருகிறது. (18மாணவர்கள்

13. புதிய தையல் பயிற்சி வகுப்பிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

14. அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்தின் சுழற்சி முறையில் 35 விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

15. கெயர் அமெரிக்க விவசாய உதவித் திட்ட மீளீட்டுப் பணத்தில்
மீளப்பெறப்பட வேண்டிய தொகை - 28,7,750
இதுவரை மீளப்பெறப்பட்டது - 26,2,105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.0 புனர் வாழ்வு நடவடிக்கைகளின் அரச சார்பற்ற நிறுவன இணைத்தின் பங்கு

3.1 அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்தின் வாழ்வுப் பணிகள்

3.2 தமிழர் புனர் வாழ்வு கழகமும் அதன் புனர் வாழ்வுப்பணிகளும்

3.3 இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் புனர்வாழ்வும் நிவாரணப்பணிகளும்

3.4 யாழ் மறைமாவட்ட மனித முன்னேற்ற நிலையத்தின் நிவாரண புனர் வாழ்வுப்பணிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிகள் புனர் வாழ்வுக்கழகத்தின் நிவாரணப்புனர்வாழ்வுப்பணிகள்

### மருத்துவ உதவி

தற்போதைய சூழ்நிலை காரணமாகவும் போக்குவரத்துப்பிரச்சனை காரணமாகவும் முக்கிய மருந்துப்பொருட்கள் தட்டுப்பாடும், அரச வைத்தியசாலைகள் சரியாக இயங்க முடியாத நிலையும் காணப்படுகின்றன. இதனால் அகதிகளாக்கப்பட்ட, காயப்பட்ட, நோய்வாய்ப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன. மாவட்டத்தில் மிகவும் கஷ்டமான கிராமங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. ஆரம்ப மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வழங்கப்படுகின்றன. மருத்துவ நிலையங்கள், கிராமங்கள் தோறும் ஆரம்பிக்கப்பட்டு மருத்துவ சேவையாற்றப்படுகின்றன. அரச வைத்தியசாலைகளுக்கும் தேவைப்படும் போது மருந்துப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. அம்புலன்ஸ் வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. அரச வைத்தியசாலைகள் இயங்க முடியாத கட்டத்தில் நோயாளிகளையும், காயப்பட்டவர்களையும் தனியார் மருத்துவமனைகளில் வைத்துச் சிகிச்சையளிப்பதற்கும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி உதவி
-------

கைக்கலவரத்தாலும், இராணுவ நடவடிக்கையினாலும் குடும்ப தலைவனை இழந்த குடும்பங்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும், காயப்பட்டவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படுகின்றன. குடும்பத்தலைவனை இழந்த குடும்பம் ஒன்றுக்கு உடனடி உதவியாக ரூபா 1000/- மும், காயப்பட்டவர்களுக்கு ரூபா 50/- இருந்து ரூபா 1000/- வரையிலான பண உதவியும் வழங்கப் படுகின்றன. இம் முகாமில் உள்ளோருக்கும், உறவினர் வீடுகளில் தங்கியிருப் போருக்கும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டோருக்கு உணவு, உடை, மருந்து ஆகிய உதவிகள் உடன் வழங்கப்படுகின்றன.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டவர் களுக்கும், குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கும் நிரந்தரமான ஊனமுற்றோரின் குடும்பங்களுக்கும் அவர்கள் வருமானத்தைத் தேடிக்கொள்வதற்காக சுயதொழில் முயற்சியில் ஈடுபடக்கூடியதாக தையல் இயந்திரம், கோழிப்பண்ணை, மாட்டுப்பண்ணை, ஆட்டுப்பண்ணை, சிறுகடை, மீன்பிடி, கமம் போன்றவற்றுக்கு உதவிகள் வழங்கப்படு -கின்றன. கடுமையாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையினை வங்கியில் நிலையான வைப்பிலிட்டு பெறப்படும் வட்டி மூலமாகவும் உதவிகள் மாத்திரம் வழங்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளக்குடியமர்த்தல்

இத்திட்டமானது 1983 யூலையில் நடைபெற்ற இனக்கலவரத்தின் விளைவாக இடம்பெயர்ந்தவர்களை குடியமர்த்தியதுடன் ஆரம்பித்து இவ்வாறு இத்திட்டமானது 1983, 1985, 1986 களில் மிக முக்கியமான ஒரு செயற்திட்டமாக இருந்து வருகின்றது. ஒரு அகதிக்குடும்பத்தினை குடியமர்த்துவதற்கு சுமார் ரூபா 25,000/- முதல் ரூபா 40,000/- வரை செலவிடப்படுகின்றது. ஒரு கிணறு அமைத்துக் கொடுப்பதற்கு ரூபா 20,000/- வரையில் செலவிடப்படுகின்றது. 1983ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அகதிகள் முகாம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ் - பண்ணை அகதிமுகாமிலிருந்த அகதிகள் கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டவர்கள், 1984 ஏப்ரல் மாதம் பாதிக்கப்பட்டவர்கள்குடியிருப்பதற்கு ஒழுங்கு செய்து காடுவெட்டி அப்பரவு செய்யவும் வீடு கட்டவும், விவசாயம் செய்ய விதைபொருட்கள், மண்வெட்டி, கத்தி, கோடரி, போன்றன வழங்கப்பட்டன. குடியமர்த்தப்பட்டவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன. 150 குடும்பங்களுக்கு 150,000/- ரூபா செலவு செய்யப்பட்டது.

அகதிகளாக இடம்பெயர்ந்தவர்களையும், இராணுவமுகாம்களைச் சுற்றி யிருந்தவர்களையும் மீளக்குடியமர்த்த வேண்டிய பாரிய பொறுப்பு நிறுவனத்திற்குண்டு. எனவே இவ்வாறான குடும்பங்கள் வேறு பாதுகாப்பான இடங்களில் தற்காலிகமான குடிசைகள் அமைத்துக் குடியமர்த்தப்படுவதுடன் இவர்கள் தங்கள் வாழ்வைக்கொண்டு நடாத்துவதற்குமான பண உதவிகளும் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் சுவீடனில் உள்ள "டைக்கோனியர்" என்ற நிறுவனம் பாதிக்கப்பட்ட விவசாயக்குடும்பங் -களைக் குடியமர்த்துவதற்கு உதவியளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1460 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு குடிசைகள் அமைக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டதுடன் பண உதவிகளும் வழங்கப்படுகின்றன. 1987ல் 307 வடமராட்சிக்குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டன. வலிகாமம் வடக்கில் 173 குடும்பங்களும் இத்திட்டத்தின் கீழ் நன்மை பெற்றன. நாட்டில் எங்கெங்கு தேவைகள் உண்டோ அங்கெல்லாம் அகதிகள் புனர் வாழ்வுக்கழகத்தின் உதவிகள் உடனுக்குடன் தேவைக்கேற்றபடி ஆற்றப்பட்டு வருகின்றன. இக்குடும்பங்களைத் தாபரித்து முன்னேற்றும் பணியில் கழகம் நின்றுழைத்து வருகின்றது. இதற்காக நிறுவனமானது வெளிநாட்டில் இருந்தும் உள்நாட்டிலிருந்தும் உதவிகளைப் பெற்று மக்களுக்கு உதவி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீடுகள் இல்லாது மர நிழல்களில் தங்கியுள்ள அகதிகள்



TRRO வினல் அமைக்கப்பட்ட அகதிகளுக்கான
வீடமைப்புத் திட்டங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடம் பெயர்ந்து அகதிகளாகத் தங்கியிருக்கும் மக்கள் நிவாரணத்துக்காக காத்திருக்கின்றனர்



TRRO வினல் அமைக்கப்பட்டுள்ள அகதிகளுக்கான விடமைப்புத் திட்டங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ வன்செயல்கள் காரணமாக வீடுகளை இழந்து இடம்பெயர்ந்த வறியமக்களுக்கு தற்காலிக வதிவிடங்கள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றது. இத்திட்டமானது கிராமியரீதியில் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒரு வீட்டுக்கான உதவு தொகையானது ரூபா 3000/- லிருந்து ரூபா 6000/- வரை வேறுபடுகின்றது. மன்னார், வவுனியா, யாழ் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஏறக்குறைய 2500 குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் உதவியைப்பெற்று மீளக்குடியமர்த்தப்பட்டன. இவ்வாறு மீளக் குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மீண்டும் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்து இடம்பெயர்ந்தமை கவலைதரும் ஒரு விடயமாகும்.

கல்வி உதவி
--------

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ் மாவட்டத்தில் அநேக பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பாடசாலைக்கட்டிடங்கள், தளபாடங்கள் என்பன முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பாடசாலைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படுகின்றன. தற்போதுள்ள பாடசாலைகளை விரிவாக்கி அகதிகளாக இடம்பெயர்ந்த மாணவர்களையும், பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அத்துடன் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பாடசாலைகளுக்கு தொண்டர் ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கு வேதனம் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கு சீருடைகள், அப்பியாசக்கொப்பிகள், பாடசாலைக்கட்டிடம், தளபாடம் என்பனவும் வழங்கப்படுகின்றன.

வேலைவாய்ப்பு உதவி
-------------

விவசாயம்
------

மாவிட்டபுரம் போன்ற பகுதிகளில் கைவிடப்பட்ட வெற்றிலைத்தோட்டங்களை புனரமைப்பதற்கும், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, புன்னாலைக்கட்டுவன் போன்ற இராணுவ முகாம்களுக்கு அண்மையில் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள தோட்டங்களை மீண்டும் பயிர்ச்செய்கைக்கு ஈடுபடுத்த இத்திட்டத்தின் கீழ் பல உதவிகள் வழங்கப்படுகின்றன. ஆரம்பத்தில் இத்திட்டத்தின் கீழ் உதவிகள் நிவாரணமாக வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



TRRO விறல் அகதிகள், இடம்பெயர்ந்தோருக்கான கல்வி முன்னேற்ற நடவடிக்கையின் ஒரு அங்கமான பாலர் பாடசாலை




பாலர் பாடசாலை அமைந்துள்ள தற்காலிகக் கட்டிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




TRRO வினல் அகதிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள
குடி நீர் கிணறு.



அகதிகளுக்கான வெற்றிலைச் செய்கை திட்டம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆனால் தற்பொழுது இவை கடன் திட்டமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இம்முயற்சிகளுக்கான உதவிகள் உள்ளீடுகளாகவும் பணமாகவும் வழங்கப்படுகின்றது. நிவாரணமாக 750 விவசாயிகள் நன்மை அடைந்துள்ளனர்.

23 கிராமங்களில் கிராமத்துக்கு 25 விவசாயிகள் என்ற அடிப்படையில் சிறுவிவசாயிகள் கடன் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இவை கிராமிய அமைப்புக்களின் செயற்பாட்டுத்திறமைகளை வளர்க்கும் நோக்குடன் கிராமிய அமைப்புக்களினூடாக செயற்படுத்தப்படுகின்றன. மிக வறுமை மட்ட விவசாயிகள் இத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்படுகின்றனர். இத்திட்டத்திற்காக எந்தவிதமான நிபந்தனைகளும் விதிக்கப்படமாட்டாது. இவ் உதவிகள் யாருக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்றதோ அவர்களுக்கே இவ் உதவிகள் சென்றடைய வேண்டும் என்பதில் நிறுவனம் கவனம் செலுத்துகின்றது. அடிப்படை சமூகமாற்றத்தை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தற்போதய நிலைமை காரணமாக ஏற்பட்ட வன்செயல்கள் விவசாய நட்டங்கள் பாதிப்புக்கள் என்பவற்றின் விளைவாக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடன்களை மீளப் பெறுவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வட்டியில்லாக்கடன்களாகவே வழங்கப்படுகின்றன.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக வெளியேற்றப்பட்ட விவசாயக் குடும்பங்களில் 100 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் பிறிதோர் இடத்தில் விவசாயத்தை மேற்கொள்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டன. அவர்களிடமிருந்து மீளப்பெற்ற தொகையானது மேலும் 50 விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் நிவாரண உதவியாக 1000/- ரூபாவிலிருந்து 2500/- ரூபாவரை உதவியாக வழங்கப்படுகின்றது. கடனாக 2750 ரூபாவிலிருந்து 8500 ரூபா வரையான உதவிகள் வழங்கப்படுகின்றன. நிறுவனத்தினால் எதிர்காலத்தில் செயற்படுத்த இருக்கும் கடன் திட்டங்களுக்கு இத்திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்பிடி உதவித்திட்டம்
--------------

வறியநிலையில் உள்ள மீன்பிடிக்குடும்பங்களுக்கு நிவாரணமாகவும் கடனடிப்படையிலும் உதவிகள் வழங்கப்படுகின்றன. நிவாரணமாக 2000/- ரூபாவுக்குட்பட்ட தொகையும் கடனாக 3500/- ரூபாவிலிருந்து 5000/- ரூபா வரையிலான உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்உதவிகளும் மீன்பிடி உபகரணங்களாகவும், பணமாகவும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் உதவிகள் பெறும் பல குடும்பங்கள் தற்போதய போர்க்கால சூழ்நிலை காரணமாக தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி அகதிகளாக உள்ளனர்.

கோழிவளர்ப்புத்திட்டம்
--------------

வன்செயல்கள் காரணமாக தனது கணவனை இழந்து தன்னையும், தன் குழந்தைகளையும் காப்பாற்றத்தவிக்கும் விதவைகளுக்கு வாழ்வளித்து நம்பிக்கையூட்டு -முகமாக இத்திட்டத்தின் கீழ் விதவைகளுக்கு உதவி வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் நிவாரணமாகவும், கடனாகவும் உதவிகள் வழங்கப்படுகின்றன. இதன்படி கோழிக்குஞ்சுகளும், அதனை வளர்ப்பதற்கான கூடுகளும், அதற்கான பராமரிப்புச் செலவுக்கான பணமும் சேர்த்து ரூபா 5000/- வரையிலான உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் ஈடுபட்டோருக்கு கால்நடை வைத்திய உத்தியோகத்தர் மூலமாகவும் உதவிகள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் குரும்பசிட்டிப்பகுதிகளில் 25 பெண்கள் பங்கு கொண்டனர். இவர்களுக்கு கூடுகளும் 25 இறைச்சிக் கோழிக்குஞ்சுகளும் வழங்கப்பட்டன.

ஆடு வளர்ப்புத்திட்டம், மாடுவளர்ப்புத்திட்டம்
--------------------------

வன்செயல்கள் காரணமாக தமது பிரதான உழைப்பாளியான குடும்பத் தலைவனை இழந்து தன்னையும், தன்குழந்தைகளையும் பராமரிக்க யாருமற்ற நிலையில் தவிக்கும் விதவைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஆடுகளும், கொட்டில்களும் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் குரும்பசிட்டி கிராமத்தில் 50 பேருக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விதவைகளுக்கான வீடமைப்புத் திட்டம் (TRRO)



விதவைகளுக்கான கோழி வளர்ப்புத் திட்டம் (TRRO)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



TRRO விறல் அமைக்கப்பட்ட அகதிகளுக்கான மாடு வளர்ப்புத் திட்டம்



TRRO விறல் அமைக்கப்பட்ட அகதிகளுக்கான ஆடு வளர்ப்புத் திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு வளர்ப்புத்திட்டம் இதன்படி இவர்களுக்கு மாட்டுக்கன்றுகள் வாங்கிக் கொடுக்கப்படுகின்றன. இவர்கள் பால்கறந்து விற்பதன் மூலம் ஒரு சிறிய வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இத்திட்டத்தின் கீழ் நிவாரணமாகவும், கடனாகவும் உதவிகள் வழங்கப்படுகின்றன. இதன்படி 5000/-ரூபா வரையிலான உதவிகள் வழங்கப்படுகின்றன.

## மீன்பிடித் தொழில் திட்டம்

வறிய நிலையில் உள்ள மீன்பிடி குடும்பங்களுக்கு நிவாரணமாகவும், கடனாகவும் உதவிகள் வழங்கப்படுகின்றன. நிவாரணமாக 2000 ரூபாவுக் -குட்பட்ட தொகையும், கடனாக 3000 ரூபாவிலிருந்து 5000 ரூபா வரையிலான உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ் உதவிகளும் மீன்பிடி உபகரணங் களாகவும், பணமாகவும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் உதவிகள் பெறும் பல குடும்பங்கள் தற்போதய போர்க்கால சூழ்நிலை காரணமாக தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி அகதிகளாக உள்ளனர்.

## கைத்தொழில் உதவித்திட்டம்

தச்சு மேசன் தொழிலாளர் உதவித்திட்டம் வன்செயல்கள் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தமது சுய தொழில் களான தச்சு, மேசன் தொழில்களை இழந்த தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படுகின்றன. இதன்படி இவர்களுக்கு நிவாரணமாகவும், கடனாகவும் உதவிகள் வழங்கப்படுகின்றன. இவை தொழில் உபகரணங்களாகவும் பணமாகவும் வழங்கப்படுகின்றன. பலாலி, குரும்பசிட்டிப்பகுதிகளைச் சேர்ந்த பல தச்சு, மேசன் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் நன்மை அடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெசவுத் தொழிலாளர் உதவித்திட்டம்

வறிய நிலையிலுள்ள நெசவுத்தொழிலாளர்களுக்கு நிவாரணமாகவும், கடனாகவும் உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் நூல் தறி போன்றனவும் பணமும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் கோப்பாயில் 16 வறிய குடும்பங்களைச் சேர்ந்த நெசவுத் தொழிலாளர்கள் தெரிவு செய்யப்பட்டு 3000 ரூபா வரையிலான கடன்கள் வழங்கப்படுகின்றன. இவர்களிடமிருந்து மீளப்பெற்ற தொகையிலிருந்து மேலும் மூன்று நெசவுத்தொழிலாளர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

## மட்பாண்ட தொழிலாளர் உதவித்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் வறியநிலையில் உள்ள மட்பாண்ட தொழிலாளர்களுக்கு நிவாரணமாகவும், கடனாகவும் உதவிகள் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் வடமராட்சி; தென்மராட்சிப்பகுதிகளில் இருந்து மட்பாண்டத் தொழிலாளர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கு களிமண், விறகு போன்ற உள்ளீட்டுப்பொருட்களும் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட சூளைகளும் திருத்திக் கொடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WIDOWS REHABILITATION PROGRAMMES BY ACTIVITIES (PERIOD 1988–1991)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதவைகளுக்கான புனர் வாழ்வு திட்டங்கள்

அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்தினால் விதவைகளுக்கான பல செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன

கோழி வளர்ப்பு - 14.3%

தையல் பயிற்சி - 17.4%

கால்நடைவளர்ப்பு - 28.6%

மீன்பிடித்தல் - 5.9%

விவசாயம் - 15.4%

நிலையான வைப்பு - 1.4%

சிற்றளவிலான வியாபாரம் - 17.1%

கைத்தறி நெசவு - 12.5%

ரி.வி திருத்தம் கடை - 6.2%

தேயிலை - 12.5%

விறகு வியாபாரம் - 12.5%

தட்டெழுத்து பயிற்சி - 6.2%

சைக்கிள் திருத்தல் - 12.5%

மாதாந்த கொடுப்பனவு - 12.5%

ஓலைசத்தைக்கைத்தொழில் - 6.2%

சலூன் - 6.2%

பாய் பின்னல் - 12.5%

மேற்காட்டியவை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REHABILITATION




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனர் வாழ்வு நடவடிக்கைகள்

அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்தினால் விதவைகளுக்கான பல புனர் வாழ்வு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன,

| | | |
|---|---|---|
| குடிசைகள் அமைத்தல் | - | 38.3% |
| விதவைகளுக்கான கல்வி கற்பித்தல் | - | 0.8% |
| வருமானம் பெருக்குதல் | - | 8.1% |
| மீன் பிடித்தல் | - | 2.6% |
| விதவைகளுக்கான உதவி | - | 13.3% |
| கல்வி | - | 0.2% |
| தோட்டம் செய்தல் | - | 26.8% |
| சிறியளவான வியாபாரம் | - | 6.6% |
| விதைகள் கொள்வனவு | - | 3.1% |

போன்றன மேற்காட்டிய வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள்

Australian high Commission, colombo.
Australion council of churches, Sydney, Australia.
Algeemeen, Diakonel Bureau, Netherlands.
Bread for the world, Federal republick of Germany.
Canadian high commission, colombo.
christian aid, London, U K.
Corso, wellington, New Zealand.
Cebemo, Netherlands.
Church of Sweden mission, Sweden.
Cafod, London, U K.
Caritas, Norway.
Caritas, Nederalandica, Netherlands.
Dutch Inter church Aid, Netherlands.
Diakonischeswerk, federal Republick of Germany
Diakonia, Sweden.
Dan church Aid Denmark.
Dutch Lenten Campaign, Netherlands.
European human rights Foundation, London, U K
Hivos, Holland.
Interchurch Co-ordination committee for Development, projects [I.C.C.D]-Netherlands.
Misereor, Federan republick of Germany.
Novib, Holland.
Norwegian Church Aid Norway.
Norwegian refugee Council, Oslo Norway.
Royal Norwegian Embassay Development Corporation [NORAD] Colombo.
Stitchting Memisa medicus mundi, Netherlands.
Stitchting Saamhorighids, Netherlands.
Irocaire, Ireland.
World Councial of churches Geneva, Switzerland.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.2 தமிழர் புனர் வாழ்வுக்கழகம் அதன் நிவாரணப்புனர்வாழ்வுப்பணிகள்

### கல்வி வசதி

யாழ்ப்பாணம், மருதங்கேணி, பருத்தித்துறை, தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 1402 பிள்ளைகளுக்கு 41 ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு முந்திய கல்வி கற்பிக்கிறார்கள். இந்த ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத்தொகையாக மாதாந்தம் 500/- ரூபா வழங்கப்படுகிறது. தளபாடங்களும், சத்துணவுகளும் அளிப்பதற்காக 346,000/- ரூபா செலவிடப்பட்டது.

### நிதி உதவி

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த தமது வாழ்க்கைத் தொழிலை இழந்தவர்களுக்கு தற்காலிக தொழில் ஒன்றை நடாத்துவதற்காக சிக்கன கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன. தங்கள் கணவனை இழந்த விதவைகள் சுய தொழில் ஒன்றை செய்து கொள்வதற்காகவும் கடன்கள் வழங்கப்படுகின்றன. விவசாயிகளுக்கும், மீன்பிடி தொழிலாளர்களுக்கும் சிக்கன கடன்கள் வழங்கப்படுகின்றன. 27 விதவைப்பெண்களுக்கு தமது சொந்த வைத்தியம் சுயதொழில் தேவைகள் பூர்த்திக்காக ரூபா 210,000/- உதவிப்பணமாக வழங்கப்பட்டது.

### மீளக்குடியமர்த்தல் உதவி

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடத்திற்கு திரும்பும் வரை அவர்களை தங்கவைத்து பராமரிப்பதற்கான நலன் புரி நிலையங்கள் நடாத்தப்படுகின்றன. இவை பாடசாலைகள், கோவில்கள் போன்ற பொது இடங்களிலும் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டில்களிலும் நடாத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களை தங்கவைத்து பராமரிப்பதற்கான குடிசைகள், கிணறுகள், மலசலகூடங்கள் என்பன இக்காலகத்தில் கட்டப்படுகின்றன. இவர்களுக்கு தேவையான சமைத்த உணவுகள், உலர்உணவுகள், சமையல் பாத்திரங்கள் ஆடுவிகள் என்பன காலகத்தில் வழங்கப்படுகின்றன. இனக்கலவரங்கள் காரணமாகவும், இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும் நிரந்தரமாக இடம்பெயர்ந்த அகதிகளாக்கப்பட்டவர்களை நிரந்தரமாகவே குடியேற்றுவதற்கான குடியேற்றத்திட்டங்களும் காலகத்தில் நடாத்தப்படுகின்றன. இதற்காக காணிகள் தெரிவு செய்யப்பட்டு அங்கு அகதிகள் குடும்பங்களுக்கு தேவையான வீடுகள், கிணறுகள், மலசலகூடங்கள் என்பன கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு குடியேற்றப்படுபவர்களும் மீண்டும், மீண்டும் தொடரும் யுத்தங்களால் அகதிகளாக இடம்பெயர்வது கவலை தரும் விடயமாகும். தெல்லிப்பளை, மருதங்கேணி, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 52 அகதிமுகாம்களில் கல்வி சுகாதார சத்துணவுத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 18,785 பேரைக் கொண்ட 4039 குடும்பங்கள் இம் முகாம்களில் பராமரிக்கப்படுகின்றன. கிணறுகள், மலசல்கூடங்கள் என்பவற்றினை சரி செய்வதற்காகவும் புதியவற்றை அமைப்பதற்காகவும் ரூபா 403,500/- செலவிடப்பட்டது. தற்காலிக கொட்டகைகள் தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் முறையே 500, 385 தற்காலிக கொட்டகைகள் இடம்பெயர்ந்தோருக்காக கட்டிக் கொடுக்கப்பட்டன. இவற்றிற்கான செலவுகள் முறையே ரூபா 1,875,000 வும், ரூபா 800,000 வும் ஆகும். இரண்டாவது தொகையில் 75% யாழ்ப்பாணச் செயலகத்தின் புனர்வாழ்வுப் பிரிவு வழங்கியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு உதவி

விவசாய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 365 பயன்பெறும் குடும்பங்களுக்கு ரூபா 380,260 செலவிடப்பட்டது.

## கைத்தொழில்

தையல்பயிற்சி நிலையங்களில் கணவனை இழந்த விதவைகளும் படித்த தொழில் அற்ற கீழ் மட்ட சமூகங்களைச் சேர்ந்த யுவதிகளும் வருமானத்தை உழைத்துக் கொள்வதற்காக பல தையல் பயிற்சி நிலையங்கள் கழகத்தினால் நடாத்தப்படுகின்றன. இவர்களுக்குப்பயிற்சியின் போது சம்பளம் வழங்கப்படுகின்றன. பயிற்சியின் பின்னர் இவர்கள் தாங்களவே வருமானத்தை உழைத்துக் கொள்ள முடியும். ஆர்.ஆர்.எல் 1983 இன் உதவியுடன் யாழ்ப்பாண நகரத்தில் ஒரு தையல் பயிற்சிநிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் பத்துப்பெண்கள் இப்போது பயிற்சி பெறுகிறார்கள். சிலவர்த்தக குடிசைக்கைத்தொழில் என்பவற்றில் ஈடுபடுவதற்காக 1612 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ரூபா 2,959,750/- கொடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, மருதங்கேணி, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், தென்மராட்சி போன்ற இடங்களிலுள்ளோர் இதனால் பயனடைந்தார்கள். ஆர்.ஆர்.எல் 83 தென்மராட்சித்திட்டத்தில் எம்மோடு பங்கு கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் புனர் வாழ்வும் நிவாரணப்பணிகளும்

### மருத்துவ உதவி

நடமாடும் மருத்துவ சுகாதார சேவை அரசினால் மேற்கொள்ளப்படும் சுகாதார சேவைக்கு உபசரணையாக இத்திட்டம் அமைந்துள்ளது. மூன்று மாதத்திற்கு ஒரு முறை பத்து கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முக்கியமாக அடிப்படை மருத்துவக் கவனிப்பும் சுகாதாரக்கல்வி, தொற்று நோய்த்தடுப்பு, போசாக்குத்தன்மை ஆகிய வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் சர்வதேச செஞ்சிலுவைச் செயற் குழுவின் உதவியுடன் வெளிமாவட்டத்தில் இருந்து வடக்கு நோக்கி இடம்பெயர்ந்து வந்த அகதிகளுக்கு 3 நடமாடும் சுகாதார சேவை மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம் வேண்டிய ஆளணியை கொடுத்து உதவியது.

அரச மருத்துவ மனைகளில் தொண்டர் மருத்துவசேவை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது மருத்துவர் பற்றாக்குறையை ஈடுசெய்ய இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இருபது மருத்துவர்களை சேவைக்கு அமர்த்த சங்கத்திற்கு அனுமதி இருக்கின்றது. அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 2500/- சம்பளம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ஐந்து மருத்துவமனைகளில் இவர்கள் சேவையாற்று கிறார்கள்.

முதலுதவி அம்புலன்ஸ் சேவை, அவசர உதவிச்சேவைகள், பயிற்சி வகுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 1990ம் ஆண்டு ஆனி மாதத்தில் தோன்றிய போர்க்கால நிலைக்கு சங்கம் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. மேற்படி பணிகள் தீவிரமாக்கப்பட்டன. பெருமளவில் இளைஞர்களின் சேவை தேவைப்பட்டு அழைப்புக்கள் விடுக்கப்பட்டு அவர்கள் காலத்திற்கு சேவையான பங்களிப்பை செய்தார்கள் முதலுதவி வகுப்புக்கள் பயிற்சிகள் இரவு பகலாக மேற்கொள்ளப்பட்டன. இது சர்வதேச செஞ்சிலுவைச்சங்க செயற்குழுவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன. செஞ்சிலுவைச்சங்க கோட்பாடுகளுக்கமைய சர்வதேச செஞ்சிலுவைச்சங்க செயற் குழுவுடனும், தலைமை செயலகத்துடனும் இணைந்து மனிதநேயப்பணிகள் மேற்கொள்ளப் பட்டன. யாழ் வைத்தியசாலையை இயங்க வைப்பதிலும், உணவுப்பொருட்களை வடபகுதிக்கு கிடைக்க செய்வதிலும் சங்கக்கிளை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க செயற் குழுவுடன் சேர்ந்து பணியாற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செஞ்சிலுவைச் சங்கத்தினால் அகதிகளுக்கான
நிவாரணம் வழங்கப்படுகிறது.



செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்படும்
நடமாடும் வைத்திய சேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் சேவை ஆரம்பத்தில் சில பாடசாலைகளிலிருந்து மாத்திரம் 146 அணியுடன் இச்சேவை இயங்கி வந்தது. போர்க்காலம் ஏற்பட்டதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள், பெண்களும், ஆண்களுமாக இச்சேவையில் சேர்ந்து கொண்டனர். அவர்களுக்கு அடிப்படை அவசர போர்க்கால முதலுதவிப் பயிற்சிகளும் சிலருக்கு அடிப்படைத்தாதிகள் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

அனர்த்தங்களுக்கு ஆயத்தமாயிருத்தல் இந்த யுத்தநிலைமையினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவும் வகையில் இரவு பகலாக அம்புலன்ஸ் சேவையில் ஈடுபட்டதுடன் எமது முதலுதவியாளர்களும் எப்போதும் அந்த அனர்த்தங்களுக்கு ஆயத்த நிலையிலேயே இருந்தனர். இரத்தானம் தேவையேற்படும் போதெல்லாம் வழங்கி வந்தோம். எமது நடமாடும் வைத்தியசேவை திட்டமிட்டுச் செயற்பட்டது. வைத்தியவசதிகள் குறைவான கிராமப்புறங்களில் எமது ஆரம்ப சுகாதாரப்பராமரிப்புச்சேவை செயலாற்றியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளக்குடியமர்த்தும் உதவி

சர்வதேச செஞ்சிலுவை செயற்குழுவின் உதவியுடன் குடிசைகள் திருகோணமலை முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்த ஏறக்குறைய பன்னிரண்டாயிரம் குடும்பங்கள் மிகவும் கஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள். இவர்களுக்கு தற்காலிக குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்படும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு முல்லைத்தீவில் 600 குடிசைகளும், வடமராட்சி கிழக்கில் 406 குடிசைகளும், அரியாலையில் 206 குடிசைகளும் அமைக்கப்பட்டது. குடிசைகள் கட்டி முடிக்கப்பட்ட -வுடன் குடிசைகள் வழங்கப்பட்டு உலர் உணவுப்பொதிகளும் வழங்கப்படுகின்றது. அவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் விவசாய மீன்பிடி ஆகியவற்றுக்கான உதவித் திட்டம் சர்வதேச செஞ்சிலுவை செயற்குழுவிடம் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வீடமைப்புத்திட்டங்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் வீமன்காமத்தில் 82 வீடுகள் 1990ல் கட்டி முடிக்கப்பட்டது. இத்திட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டதாக சங்கத்திற்கு நிதி வழங்கியோர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். இந்த ஆண்டில் தம்பாலை இராசலிங்கம் நகர், பொலிகண்டி ஆகிய இடங்களில் 306 வீடுகள் கட்டுவதற்கான திட்டம் இருந்தும், ஆரம்பவேலைகள் மேற்கொள்ளப்படும். சூழ்நிலை காரணமாக அமுல் செய்யப்படவில்லை. வருங்காலத்தில் இத்திட்டத்தை அமுல் செய்யக்கூடிய காலம் வருமென சங்கம் எதிர்பார்க்கின்றது.

மக்களுக்கு அனர்த்தங்கள் ஏற்படும் பொழுது தொடர்ந்து மூன்று தினங்களுக்கு நாம் நிவாரணம் வழங்கினாலும் சுயவேலை வாய்ப்பை உருவாக்கும்படியாகக் கட்டம் கட்டமாக திரும்பச் செலுத்தும் கடன் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தோம். 1991ம் ஆண்டில் 807 குடிசைகளும், 1992ம் ஆண்டில் வடமராட்சி கிழக்கில் 650 குடிசைகளையும் "நோர்குரோஸ்" இன் உதவியுடன் கட்டிமுடித்துள்ளோம். இக்குடிசைகளில் இடம்பெயர்ந்த மக்கள் குடியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி உதவி
-------

வலது குறைந்தோருக்கும், இடம்பெயர்ந்தோருக்கும், அநாதரவாளர்களுக்கும், பாடசாலையிலிருந்து விலகியோருக்குமென இக்கல்வித்திட்டங்கள் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. தமிழ், ஆங்கில சுருக்கெழுத்துக்கான முதலிரண்டு பயிற்சிநெறி முடிவடைந்து இறுதிப்பரீட்சையும் நடாத்தப்பட்டுள்ளது. தகைமையுடையோருக்கு தராதரப்பத்திரங்களும் வழங்கப்படும். இந்நெறியில் பங்கு பெறுவோர் தமக்கு விருப்பமான தொழிலைத்தெரிவு செய்து கொள்ள முடியும். இப்பயிற்சி நெறியுடன் ஆங்கிலப்பயிற்சியும் தமிழில் கருத்தரங்குகளும் நடைபெறுகின்றன. ஆர்வமுடைய எவரும் இதில் பங்குபற்றலாம்.

பத்திரிகைத்தொழில், சுகநலமும், சமூக சேவையும் ஆகியதுறைகளிலும் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேர்வுப்பரீட்சை அடிப்படையில் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கற்கைநெறிகள் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. இதன் மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வேலைவாய்ப்புக்கான வழிகளை அமைக்கக் கூடியதாக இருக்கும். கூட்டுறவுப்பயிற்சி, தரவு சேகரிப்பு, பனை உற்பத்தி, வாழை உற்பத்தி ஆகிய துறைகளில் குறுகியகாலப் பயிற்சி நெறிகளை எமது கல்விக்குழு நடாத்தியதோடு சமூக, பொருளாதார, மருத்துவ, விவசாய, தொழிநுட்ப நூலக விடயங்கள் சம்பந்தமான கருத்தரங்குகளும் வாராவாரம் நிகழ்த்தியது. எமது கிளைகளினால் நடாத்தப்படும் கற்கைநெறிகளுக்கான அனுமதிப்பரீட்சை, தராதரப்பத்திரங்கள் வழங்கல் ஆகியவற்றுக்கு கல்விக்குழு பொறுப்பாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைவாய்ப்பு உதவி

விவசாயம்

வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பையும், விவசாயிகளின் வசதிக்குறைவையும் கருத்தில் கொண்டு விவசாயத்திட்டம் உருவாக்கப்பட்டது. மாவட்டத்திலுள்ள சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் குறைந்தது பத்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு விதைகளை இலவசமாக வழங்கியதன் மூலம் வீட்டுத்தோட்டம் ஊக்குவிக்கப்பட்டது. இவ்விதைகள் வட்டக்கச்சி, கண்டி, கன்னொருவ, பல்லேகல, பேரதெனியா போன்ற இடங்களிலிருந்து பெறப்பட்டன. அரசாங்க விவசாய பண்ணைகளில் பயிற்றுவிக்கப்பட்ட தொண்டர்கள் மூலம் இத்திட்டம் அமுலாக்கப்பட்டது. இருப்பவுள்ளோரின் நன்மைக்கெனப் பண்ணையில் இவர்கள் ஒர் மாதிரித் தோட்டத்தை அமைத்திருந்தனர். இத்திட்டத்தின் பயனாக இவ்வாண்டு ஆரம்பத்தில் ஏராளமான மரக்கறிகள் விளைவிக்கப்பட்டன.

மீன்பிடித்தல்

ஆழ்கடலி மீன்படித்தலுக்குத் தற்காலத்தில் தடைசெய்யப்பட்டுள்ளதால் அநேகமான மீன்பிடித்தொழிலாளிகள் வேலையற்று இருக்கிறார்கள் இதுதவிர அநேக மீன்பிடித்தொழிலாளர்கள் இடம்பெயர்ந்து முகாம்களிலும் தற்காலிக குடிசைகளிலும் அகதிகளாக வாழ்கின்றனர். 3200 மீன்பிடித் தொழிலாளர்களுக்கு வலைகளையும், ஏனைய உபகரணங்களையும் வழங்குவதற்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பிரிவுக்குழுக்கள் மூலம் அமுலாக்கப் -பட்டு இணைப்பதிகாரிகளினாலும் தொண்டர்களினாலும் நெறிப்படுத்தப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில்

---

புனர்வாழ்வுத்திட்டங்கள், விதவைகள், அநாதைகள் ஆகியோருக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக 1989ம் ஆண்டு பனம் பொருட்களில் இருந்தும் வாழைநாரில் இருந்தும் செய்யக்கூடிய கைப்பணி வேலைகளில் பயிற்சி கொடுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் புலோலி, எழுவைதீவு, காரைநகர், வரணி, முல்லைத்தீவு, யோகபுரம், உயிலங்குளம் ஆகிய இடங்களில் பனம்பொருள் கைப்பணிப்பயிற்சியும் மயிலங்கேணி, நல்லூர், புள்ளாலைக்கட்டுவன், பூநகரி ஆகிய இடங்களில் வாழைநார் கைப்பணிப் பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டு நிறைவு கண்டுள்ளது. பயிலுனருக்கு பயிலும் காலத்தில் நாள் ஒன்றுக்கு 20 ரூபாசப்படியும் மேலும் ஊக்குவிப்புபணமும் வழங்கப்படுகின்றது.

அவுஸ்திரேலியா நாட்டு உயர்ஸ்தானிகள் வழங்கிய ரூபா 15,000/- நன்கொடையைக் கொண்டு அநாதைகளுக்கும், இளம்விதவைகளுக்கும் தட்டச்சுப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது.

பனம்பொருள் உற்பத்தி, வாழை உற்பத்திப்பொருட்கள், வானி, குடை கதிரைபின்னல், நோல்உற்பத்திப்பொருட்கள், கைவேலை, தையல்வேலை ஆகிய துறைகளில் தொழில்வாய்ப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு இத்துறைகளில் தொழில் முன்னிலைப்பயிற்சி வகுப்புக்களும் நடாத்தப்படுகின்றன. இடம்பெயர்ந்தோருக்கும், அநாதைகளுக்கும், வலதுகுறைந்தோருக்கும் இத்திட்டங்களால் சுயதொழில் வாய்ப்பு உருவாக்கியுள்ளது. விதவைகளைப் பராமரிப்பதில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. சுயவேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் சுயாதீனமான சீவியம் நடாத்துவதற்கும் உதவியாகப் போதுமான பொருள் வளம் இல்லாதவரும் தொழில் திறமையில்லாதோருமாகிய விதவைகளுமே எமது திட்டத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏனைய உதவிகள்

ஒரிடத்தில் அனர்த்தம் ஏற்பட்ட பின் உடனடியாக மூன்று நாட்களுக்கு இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்கப்படுகின்றது. இணைத்தலைமை யலுவலகத்திலும், வைத்தியசாலையிலும் தொண்டர்களின் பணிக்காக அவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படுகின்றது. சுயதொழில் வேலைவாய்ப்பில் அக்கறை -யுள்ளோருக்குக் கட்டம் கட்டமாகத் திருப்பிச் செலுத்தும் கடன் அடிப்படையிலேயே உதவி காணப்படுகிறது. கர்ப்பிணித்தாய்மாருக்கும், இடம்பெயர்ந்த பாலூட்டும் தாய்மாருக்கும் சத்துணவு நிவாரணம் வழங்கப்பட்டது. தற்காலிக குடிமனைகளில் வாழ்க்கையை மீள ஆரம்பிப்போருக்கும் நிவாரணம் வழங்கப்படுகிறது. இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்கும் சீருடைத்துணிகளும், பாடசாலை உபகரணங்களும் குறைந்த விலையில் வழங்கப்பட்டன. வெளிமாவட்ட பல்கலைக் -கழக மாணவர்களுக்கு உலர்உணவும் உடுப்பும் வழங்கப்பட்டன. சவர்க்காரம் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் வானளாவ உயர்ந்திருந்த வேளையில் எமது கல்வி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களுக்கு கொள்வனவு விலையில் விநியோகிக்கப்பட்டது. அத்துடன் நூலக சேவையும் நடாத்தப்படுகின்றது.

யாழ் குடாநாட்டில் நிலவும் மின்சாரமற்ற சூழ்நிலையில் எமது பாடசாலை மாணவர்களுக்கென ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் ஒரு மின் உற்பத்தி இயந்திரம் வழங்குவதற்கான எமது கோரிக்கைகளை செஞ்சிலுவைச்சம்மேளனம் அங்கீகரித்ததாயினும் கூட்டுப்படைத்தலைமையகம் இக்கோரிக்கையை நிராகரித்துள்ளது எனினும் யாழ்ப்பாணக்கிளை நான்கு இயந்திரங்களை மட்டுமே கொண்டுவரக்கூடியதாக இருந்தது. கோப்பாய், சண்டிலிப்பாய், பருத்தித்துறை பிரிவுகளுக்கு இவ்வியந்திரங்கள் வழங்கப்பட்டு அப்பிரிவுகளிலுள்ள கலா ஒவ்வொரு பாடசாலையிலும் இவை பாவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மறைமாவட்ட மனிதமுன்னேற்ற நிலையத்தின் நிவாரண புனர்வாழ்வுப் பணிகள்

---

### மருத்துவ உதவி

கிராமங்கள் தோறும் சென்று அங்குள்ள சுகாதார நிலைமை ஆராய்ந்து மக்களை சந்தித்து அவர்களுக்கு சுகாதாரத்தைப்பற்றி அறிவுரைகளை வழங்கவும் வைத்திய வசதியற்ற கிராமங்களில் நோயாளிகளைப் பார்வையிட்டும் வேண்டிய மருந்துகளையும், ஆலோசனைகளையும் வழங்கவும் ஒரு நடமாடும் மருத்துவ சேவைப்பிரிவு யாழ் திருச்சிலுவை கன்னியரின் ஊடாகச்செயற்பட்டு வருகின்றது. இவற்றையெல்லாம் விட சமுதாயத்தில் காமுக வெறியர்களால் பலாத்காரத்தினால் பாதிக்கப்பட்டோரும் தமது வாழ்வை சிதைக்க முயலும் பெண்களுக்கு நம்பிக்கை ஊட்டி அவர்களுக்கு மறுவாழ்வு வழங்குவதற்காக சில திட்டங்கள் அந்தரங்கமான முறையில் செயற்பட்டு வருகின்றன. மேற்கூறிய செயற்திட்டங்கள் மனிதமுன்னேற்ற நிலையத்தின் பிரதேசரீதியான பங்களிப்பு எனலாம். இவை தவிர தேவைக்கேற்ற -படி தனிப்பட்ட முறையிலும் நிவாரணரீதியாகவும் நாடளாவியரீதியில் பாரிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. வைத்தியசாலையில் உதவியற்ற நோயாளர் களுக்கு குறிப்பாக யாழ் வைத்தியசாலையில உதவியற்ற நோயாளிகளுக்கு அருட் சகோதரிகள் அருட்தந்தையர்கள் ஊடாக அவசியமான உதவிகள் வழங்கப்படு கின்றன. கிராமங்களில் இருந்து ஜி.சீ.ஈ (                    ) படித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒருமாதகாலம் அவர்களுக்கு நிறைவான முதலுதவிசிகிச்சை பயிற்சி அளிக்கப்பட்டு தத்தமது கிராமங்களில் தொண்டாற்ற அனுப்பப்படுகின்றன. அத்தோடு நின்றுவிடாமல் மீண்டும் மீண்டும் அவர்கள் அழைக்கப்பட்டு கலந்துரையாடல் மூலம் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளக்குடியமர்த்தம் உதவி

1987 வரை அனாதைகளை பராமரிக்கும் குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டது. 1988ல் உருத்திரபுரத்தில் 'உதயதீபம்' என்னும் தற்காலிக இல்லம் அமைக்கப்பட்டது. அங்கு 33 பிள்ளைகள் பராமரிக்கப் -படுகின்றனர். யாழ்ப்பாணம் 'தீபகத்தில்' 31 பிள்ளைகளையும் முல்லைத்தீவில் 15 பிள்ளைகளையும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். ஒரு பிள்ளைக்கு மாதாந்தம் ரூபா 500/- வரை செலவிடப்படுகின்றது. சில விசேட சந்தர்ப்பங்களில் உயர்கல்விக்கும் ரூபா 500 வரை வழங்கப்படுகின்றது. தற்காலிக வதிவிடங்கள் அமைப்பதற்காக 1000 அதற்கான விண்ணப்பங்கள் நிலையத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் ஓலைக்கூரைகளை உடைய மண் வீடுகளே நிலையத்தால் தெரிவு செய்யப்பட்டு 809 வதிவிடங்களை அமைப்பதற்கு உதவி செய்யப்பட்டது. ஒரு வீட்டுக்கு 5000/- ரூபாவுக்கு மேல் செலவிடப்பட்டது.

## கல்வி உதவி

இத்திட்டத்தின் கீழ் அந்தந்த கிராமத்தின் தேவைக்கேற்ப பாலர் பாடசாலைக்கான கட்டடங்களை அமைக்க வேண்டிய தளபாடங்கள் விளையாட்டு உபகரணங்கள் கற்பித்தலுக்கான உபகரணங்கள் கொள்வனவு, கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு குறைந்தது 3 வருடங்களுக்கு ஊதியம் வழங்கப்படவேண்டிய நிதி உதவிகள் என்பன வழங்கப்படுகின்றன. அத்தோடுமட்டுமல்லாது கடமைபுரியும் ஆசிரியர்கள் பாடசாலைப்படிப்பை முடித்தோருக்கு சிறுகைத்தொழில்களான தையல், பின்னல்வேலை போன்றவற்றிற்கு பழகுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும், வயது வந்தவர்களுக்கும், பெண்களுக்கும் பல்வேறு கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யும் அக்கிராமத்தில் உள்ள சுகாதாரம் கல்வி போன்ற துறைகளில் உள்ள பிரச்சனைகள் தீர்ப்பதற்கும் முயற்சி எடுக்கும் அக்கிராமத்தை வழி நடத்துவோராக செயற்பட எதிர்பார்க்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரிரு இடங்களில் பெற்றோர் வேலைக்குச்செல்ல அவர்களின் குழந்தைகளை பெற்றோர் திரும்பிவரும்வரை அதாவது காலை இருந்து மாலை வரை பராமரிக்க உணவு ஊட்ட பால் பராமரிப்பு நிலையங்களும் நடைமுறைப்படுத்தப் படட்டு வருகின்றன.

பால் பாடசாலை விபரங்கள்

| இடம் | பாலர்பாடசாலை எண்ணிக்கை |
|---|---|
| கிளிநொச்சி (புனர்வாழ்வு நிலையங்கள்) | 04 |
| மானிப்பாய் | 06 |
| குடத்தனை | 01 |
| வல்வெட்டித்துறை | 01 |
| சில்லாலை | 04 |
| புதுக்குடியிருப்பு | 02 |
| முகமாலை மிருசுவில் | 02 |
| செந்தாங்குளம் | 05 |
| மாங்குளம் | 03 |
| கிளிநொச்சி | 10 |

இளைஞர் தலைமைத்துவம், முதியோர் கல்வி, முறைசாராக்கல்வி, சுகாதாரக்கல்வி, சாதி, சீதனம், பெண்கள் மேற்குறிப்பிட்ட இந்த தலைப்புக்களில் தொடர்ச்சியாக செயற்பாடுகளும் கருத்தரங்குகளும் கிராம மட்டங்களிலும், பங்கு மட்டங்களிலும், , மவாட்ட மறை மாவட்டமட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலையம் பங்குக்குழுக்களினூடாக எப்போதும் ஊக்குவித்த வண்ணம் உழைக்கின்றது. தேவைப்படுபவர்கள் தமது தேவைகளை பங்குக் குழுக்களினூடாக நிலையத்திற்கு அறிவிக்கும்பட்சத்தில் செவ்வைய ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு இச்செயற்பாடுகள் திறம்பட நடைபெற ஆவன செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கடன் நற்சமூகப்பணி நிலையத்தினால் நடாத்தப்படும் தலைமைத்துவ பயிற்சிக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

வேலைவாய்ப்பு உதவி
--------------

விவசாயம்
------

கிளிநொச்சியிலுள்ள 2000 கமக்காரர்களுக்கு 900 மெற்றிக் தொன் உரவகைகளை விநியோகிப்பதற்கு நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இதனைக் கொண்டுவர வாகன வசதி போதாமையால் கிளிநொச்சி அரசாங்க அதிபர் இத்திட்டம் நிறைவேறத் துணைபுரிந்தார். 3700 கத்திகள், 3700 மண்வெட்டிகள், 3700 தலவாங்குகள் ஆகியன பாதிக்கப்பட்ட கமக்காரர்களுக்கு வழங்கப்பட்டன. இன்னும் இது போன்ற கருவிகள் வேண்டும் போது வழங்கப்படுகின்றன. விதைநெல் வாங்குவதற்கு 1989ல் கடன்கள் வழங்கப்பட்டன. இக்கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த ரூபா 1,000,000/- தேவைப்பட்டது.

மீன்பிடித் தொழில்
------------

மீனவர் கிராமங்களை நிலையத்தொண்டர்கள் தங்கு சென்று பார்வையிட்டு அவர்களுக்குத் தேவையான நிதியுதவிகளை கொடுத்திருந்தார்கள். ஏற்கனவே மீனவ கடன் திட்டத்தின் கீழ் 1,500,000/- ரூபா வழங்கப்பட்டது. மாரீசன்கூடல், மாதகல் ஆகிய இடங்களில் சனசமூகநிலையங்கள் கட்டுவதற்கு உதவி செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில்
---------

தச்சன், மேசன், சலவைத்தொழிலாளர் முதலிய பல தரப்பட்ட தொழிலாளர்க்கும் அவரவர்களுக்கு தேவையான கருவிகளும் உதவிகளும் வழங்கப்படுகின்றன. பத்திரிகையாசிரியர் தொழில் நிறுவனத்தில் 74 இளைஞர்கள் பயிற்சி செய்ய உதவி செய்யப்பட்டன. இளவாலை, சில்லாலை, அராலி ஆகிய இடங்களில் தட்டச்சு வகுப்புகள் நடாத்தப்பட்டன. வெல்டிங் வசதிகள் 5 இடங்களிலும், தையல் நிலையங்கள் 26 இடங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தையல்நிலையங்களுக்கு 4 தையல் இயந்திரங்களும் 10,000/- ரூபா 1987 முதல் 1988 வரை 32640 குடும்பங்களுக்கு உதவியளிக்கப்பட்டன. 1987 ஒக்டோபர் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை கிராமங்களில் 24400 குடும்பங்களுக்கு உணவுப்பொருள்களும், 5209 குடும்பங்களுக்கு மாதாந்த பண உதவியாக ரூபா 300/- இருந்து 450/- ரூபா வரை வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிகள் புனர் வாழ்வு நிதியம் 83

## அகதி நிவாரண புனர் வாழ்வுப்பணிகள்

---

### மீளக்குடியமர்த்தல் உதவி

சடுதியாக ஏற்பட்ட அகதிகள் வருகை அகதிகள் முகாம்களை உருவாக்க வழிகோரியது. அத்துடன் நீர் வசதி, சுகாதார வசதி என்பவற்றுக்கும் தேவை கூடியவை குருநகர், கைதடி, மாதகல் என்பவற்றில் உள்ள அகதி முகாங்களுக்கு கிணறுகளை அமைக்கவும், தற்காலிக சமையல் அறைகள், மலசலகூடங்கள் என்பவற்றை அமைப்பதற்கும் நிதியம் நிதி உதவிகளை வழங்கியது. மேற்கூறிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு நிதியத்தினால் பணஉதவியும் வழங்கப்பட்டது. இதைத்தவிர வட்டுக்கோட்டை வயல் கழகத்திற்கு ரூபா 45,000/- அகதிகளுக்கான சனசமூக நிலைய மண்டபம் அமைப்பதற்கு வழங்கப்பட்டது.

### நிதி உதவி

வரையறுக்கப்பட்ட நிதி வழங்கல் காரணமாக நிதியத்தினால் இக்கலவரத்-திலல் இறந்தவரின் அடுத்த உறவினருக்கு ரூபா 1000/-ம், காயமுற்றோருக்கு ரூபா 500/-ம் வழங்கப்பட்டன. மொத்தமாக 160 குடும்பங்கள் மரண உதவிப்பணத்தைப் பெற்றுக் கொண்டன. இதைத்தவிர இக்குடும்பங்களுக்கு துணிகள், பால்மா போன்ற ரூபா 500/- பெறுமதியான பொருட்களும் வழங்கப்பட்டன. ரூபா 160,000/- காசாக வழங்கப்பட்டது. 22 நபர்களுக்கு தலா ரூபா 500/- ப்படி காயமுற்றோருக்கான சகாய நிதி வழங்கப்பட்டது. இவர்களுக்கும் துணிகள் பால்மா அடங்கிய பார்சல் வழங்கப்பட்டன. மொத்தமாக ரூபா 11,000/- காசாக வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி உதவி

இது பாடசாலைகளுக்கான மேசைகள், கதிரைகள் மாணவர்களுக்கான சீருடைகள் மற்றும் பாடசாலைக்கு தேவையான பொருட்களையும் உள்ளடக்குகிறது. யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளுக்கு ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேசைகள், கதிரைகள், அப்பியாசக் கொப்பிகள் என்பன வழங்கப்பட்டன. நிதியம் கிளிநொச்சி முகாமில் வசித்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கி இருந்தது.

## வேலைவாய்ப்பு உதவி

நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றுடன் தொடர்பு கொண்டு இடம்பெயர்ந்த ஊழியர்களுக்கு இடமாற்றம் சம்பளத்துடன் கூடிய விடுமுறை மூன்று மாத சம்பள முற்பணம் என்பவற்றை அரசாங்கம் வழங்குவதற்கு நிதியம் உதவி வழங்கியது. நிதியம் அரசிற்கு அரசாங்க மற்றும் ஊழியர்கள் தொடர்பாக குடியமர்வு சம்பந்தமாக ஓர் செயல்திட்டத்தை முன்வைத்தது. இதன்படி அரசாங்கம் ஊழியர்களுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.0 அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் எதிர் நோக்கும் பிரச்சனைகள்

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமானது என்ன நோக்கத்தை நிறைவேற்ற உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்தையே நிறைவேற்ற முடியாமல் இருப்பது அது கொண்டிருக்கும் முக்கிய பிரச்சனை ஆகும். குறிப்பாக 15 நிறுவனங்களை அது தனது அங்கத்தவர்களாக கொண்டிருக்கும் இந்த அமைப்பு அங்கத்தவ நிறுவனங்களின் பணியை ஒன்றிணைப்பதனை நோக்காகக் கொண்டிருக்கிறது. அதாவது ஒரு பிரதேசத்தில் மட்டும் எல்லா நிறுவனங்களும் சேவையை ஆற்றாது வெவ்வேறு இடங்களில் ஒவ்வொரு நிறுவனத்தின் பணியும் ஆற்றப்பட வேண்டுமென இந்த நிறுவனம் கருதுகிறது. தறுவம் இந்நிறுவனங்கள் தமக்கிடையே முரண்பட்டு சில சமயங்களில் ஒரிடத்தில் வசிக்கும் மக்களுக்கே எல்லா அங்கத்துவ நிறுவனங்களும் சேவையினை வழங்க முன் வருவதால் வெவ்வேறு இடங்களில் வாழும் மக்களுக்கு இந்த அமைப்பில் எந்தவொரு அங்கத்துவ நிறுவனத்தினதும் சேவை கிடைக்காமல் போகின்றது.

அரச சார்பற்ற நிறுவனங்களில் அங்கம் பெறாத பல அமைப்புக்களும் சமூக சேவையில் ஈடுபட்டு இருக்கின்றன. இவை இந்த அமைப்பில் அங்கத்துவம் பெறாத காரணத்தினால் அவற்றுக்கான எந்தவொரு பணிப்புரையினையும் விடும் அதிகாரம் இணையத்திற்கு இல்லாமல் போய்விட்டது. இதன் காரணமாக எல்லாவகையான சமூக சேவை நிறுவனங்களின் பணியினையும் ஒன்றிணைக்கும் கட்டுப்பாடு இணையத்திற்கு இல்லை. ஆகவே இணையத்தின் அங்கத்துவ நிறுவனங்களுக்கும் அங்கத்துவ அல்லாத நிறுவனங்களுக்கு இடையே முரண்பாடு தோன்றி வருகிறது.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கிடையே 1990ம் ஆண்டு யூன் மாதம் தொடங்கிய யுத்தமானது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் காரணமாக பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து வர வேண்டியிருந்தமையால் மக்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்ததுடன், தமது உடமைகளையும் பெரும் பாலானோர் இழந்தனர். இத்தகைய ஆயிரக்கணக்கில் அகதிகளாக்கப்பட்ட மக்கள் நிர்க்கதிக்குள்ளாக்கியிருந்த வேளையில் அரச சார்புடைய நிறுவனங்களால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. இந்நிலையிலேயே அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தோற்றுவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட இணையம் கூட எதிர்பார்த்த எண்ணிக்கையை விட பெருமளவான அகதிகளை பராமரிக்க வேண்டிய நிலை உருவாகியமையால் சரிவர பணியாற்ற முடியாமல் போய்விட்டது.

அகதிகளாக வெளியேறிய மக்களைப் பராமரிப்பதற்கென சரியான அகதிமுகாம்கள் எதும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தனி வீடுகளிலோ அல்லது உறவினர்களுடனோ தங்க வேண்டிய நிலை காணப்பட்டது. இதனால் அகதிகளை இனம் காண்பது பெரும் பிரச்சனையாக மாறியது. இதனால் அரச சார்பற்ற நிறுவனங்கள் உண்மையான அகதிகள் யார் என்பதை இனம் கண்டு பிடிப்பதும், அவர்களது தேவைக்கேற்ற சேவைகள் பெரும் பிரச்சனையாக மாறி உள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு போதிய இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பெரும் பிரச்சனையாக மாறி உள்ளது. இடம்பெயர்ந்த மக்களுக்கு சில இடங்களில் மட்டுமே குடிசைகளை அமைத்துக் கொடுக்க முடிந்தது. ஏனைய மக்கள் கோவில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிலே தற்காலிகமாக தங்கி வந்தனர். இவர்கள் குறித்த இடங்களில் பல பிரச்சனைகளை எதிர் நோக்கியிருந்த போதும் அவர்களுக்கு நிரந்தர வசிப்பிடத்தை ஏற்படுத்திக் கொடுப்பது பெரும் பிரச்சனையாக மாறி உள்ளது. இதன் காரணமாகவே இணையம் சுகாதாரத்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு போதுமான மருத்துவ வசதிகளை அத்திணைக்களமே வழங்க வேண்டுமென வலியுறுத்தி வந்ததுடன் சில சேவைகளை மட்டுமே தன் அங்கத்தவ நிறுவனங்களூடாகவே வழங்கி வர முடிந்தது.

அகதிகளாக வாழும் மக்களுக்கு தேவையான சத்துணவுகளை வழங்கும் கடமைப்பாடு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உண்டு. அகதிகளுக்கு சத்துணவு வழங்கப்படாது இருப்பது தொற்றுநோய்கள் விரைவாக பரவுவதற்கு வழி வகுப்பதுடன் குழந்தைகளின் வளர்ச்சியையும் பாதிப்படையச் செய்கிறது. அகதிகளாக வாழும் குழந்தைகளில் பல போசாக்கு குறைந்தவாக காணப்படுகின்ற காரணத்தால் வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் அவர்களை விரைவாக தாக்க முடிவதுடன், அவர்களின் இறப்பு வீதம் அதிகரித்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலை இணையத்திற்கு ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகளாக வாழும் மக்கள் தமது தொழில்களை இழந்துவிட்ட காரணத்தால் அவர்களுக்கு வருமானம் எதுவுமில்லை. இதன் காரணமாக அவர்களுக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பெரும் பிரச்சனையாக மாறியுள்ளது. இடம்பெயர்ந்த மக்களுக்கு போதுமான வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்காத வரை இவர்கள் தொடர்ந்தும் ஏனையோரில் தங்கியிருக்கும் நிலை காணப்படும். இதனைத்தவிர்க்க நடவடிக்கை எடுப்பது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பெரும் பொறுப்பாக உள்ளது. இதனால் இத்தகைய வழிகளில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கலாம் என்பதும் வேலை இல்லாப்பிரச்சனையை எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என்பதும் இனம் காணப்படுவதும் தீர்த்து வைக்கப்படுவதும் இணையத்தின் பணியாகும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் கொண்டிருக்கும் முக்கிய குறைபாடுகளில் ஒன்றாக போக்குவரத்துச்சீர்இன்மை காணப்படுகின்றது. அரச சார்பற்ற நிறுவனங்கள் போக்குவரத்துக்கு தேவையான வாகனங்களை கொண்டிருக்கவில்லை அதேநேரம் அரச போக்குவரத்தோ அல்லது தனியார் போக்குவரத்தோ தேவைப்படும் அளவிற்கு கிடைப்பதும் இல்லை. இதனால் பல்வேறு இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள அகதிமுகாம்களுக்கு இடையே சிறப்பான தொடர்புகளை வைத்துக் கொள்ள முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் தொலைபேசி தொடர்பாடல்கூட பெறப்பட முடியவில்லை என்பதனால் தொடர்பாடல் என்பது மிகப் பிரச்சனையாகவே உள்ளது. இதனால் அகதிகளுக்கான உணவுப்பொருட்களையோ மருந்துவகைகளையோ நகர்த்துவதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பெரும் பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றனர்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் எல்லாம் "உங்களுக்கு உதவிட எங்களுக்கு உதவுங்கள்" என்ற தாரக மந்திரத்தை கொண்டவையாகும். இதனால் உள்நாட்ட -வரிடமிருந்தும், வெளிநாட்டவரிடமிருந்தும் நிதியுதவியைப் பெற்று அதனைப் பயன்படுத்தியே அவை சமூக சேவையில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் அண்மைக் காலத்திலே அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கிடைக்கும் நிதியுதவி குறைவடைந்து விட்டது. இதனால் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல தமது சமூக சேவையின் அளவையும் குறைத்துக் கொள்ள வேண்டிய நிலையை அடைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் அகதிகளுக்கான பல அத்தியாவசிய சேவைகள் கூட பெறப்பட முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுவோர் பெரும்பாலும் சம்பளமற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இந்நிறுவனங்கள் சேவை நோக்குடையவை என்பதனால் அவை அதிகளவு சம்பளங் கொடுப்பவை மேற்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. இதனால் திறமையானவர்களை வேலைக் -கமர்த்திக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் அமர்த்தப் பட்டவர்களில் கூட பலர் இலவசமாக பணியாற்றுகின்றார்கள். என்பதனால் பல கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதில்லை. இந்நிலைமை அரச சார்பற்ற நிறுவனங்கள் அப்பணியை நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கின்றனவோ அதனை நிறைவேற்ற முடியாத நிலையைஏற்படுத்தியுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்களில் இணையம் கொண்டிருக்கும் நிர்வாக அமைப்பிலும் ஒரு குறைபாடு இருப்பதாகவே காணப்படுகின்றது. இதன் நிர்வாகத்திற்கு பொறுப்பான தலைவர் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் பதவியேற்பவராக காணப்படுகின்றார். ஆனால் எந்தவொரு நபரும் குறைந்தது ஒரு வருடத்திற்காயினும் பதவி வகிக்காவிட்டால் தீர்மானங்களை எடுப்பதும், எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதிலும் பெரும் பிரச்சனை எதிர் நோக்கப்பட வேண்டிவரும். இதனால் தலைவர் மூன்று மாதங்கள் மட்டுமே பதவி வகிப்பது என்ற நிலை பெரும் பிரச்சினையை ஏற்படுத்துவதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.0 முடிவுரை - தீர்வுகளும் விதந்துரைகளும்

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையமானது எதிர்பார்த்தவாறு தன் பணிகளை மேற்கொள்ள முடியாதமைக்கு காரணம் அதனால் எதிர் நோக்கப்படும் பல்வேறு பிரச்சனைகளே ஆகும். அதனால் அது எதிர் நோக்கும் பிரச்சனைகளையும், ,அவை தோன்றியதற்கான காரணங்களையும் கண்டறிந்தால் அவற்றை தீர்ப்பதற்கான வழிவகைகளை கண்டுவிட முடியும். எந்த ஒரு நிறுவனமும் பிரச்சனைகளை கொண்டிருப்பின் எதிர்பார்த்தவாறு திறமையாக இயங்கிவிட முடியாது. அத்தகையநிலை அரசசார்பற்ற நிறுவனத்தில் இருந்தும் நீக்கப்படுவதன் ஊடாகவே அதனிடமிருந்து சிறந்த சேவையை பெற்றுக் கொள்ள முடியும்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியை ஒன்றிணைக்கவென உருவாக்கப்பட்ட இந்த இணையம் அவற்றுக்கிடையே எல்லா நேரத்திலும் ஒற்றுமையை பேண முடியவில்லை. இதன் காரணமாகவே அவற்றின் பணி தேவையான மக்களுக்கு தேவையான நேரத்தில் கிடைக்க முடியாதுள்ளது. இதனை தடுப்பதற்காக இந்த இணையம் அங்கத்துவ நிறுவனங்களுக்கிடையே இறுக்கமான உறவைப்பேண முன்வருதல் வேண்டும். இதற்கு வசதியாக வாராந்தமோ அல்லது மாதாந்தமோ அங்கத்துவ நிறுவனங்களை ஒன்றுகூட்டி கலந்துரையாடல்களை நடத்துதல் வேண்டும். இதனூடாக சிறப்பான சேவையை அவற்றிடம் இருந்து பெறலாம். இணையத்தில் அங்கம் பெறமலும் பல அரசாங்க நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இதன் காரணமாக அவற்றின் சேவையை ஒன்றிணைக்க முடியாதநிலை இந்த அமைப்புக்கு ஏற்பட்டுள்ளது. வயல்கழகம், லோட்டரிக்கழகம் போன்ற பல முன்னணி அமைப்புக்கள் இணையத்தில் சேர்ந்து கொள்ளாமை அவற்றின் சேவைகளை ஒழுங்காக மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனை தடுக்க இந்த இணையம் அரச சார்பற்ற எல்லா நிறுவனங்களையுமே தன்னுடன் இணைத்துக் கொள்ளல் வேண்டும். இதன் பிரகாரம் மக்களுக்கு எதிர்காலத்தில் மேலும் நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையை பெறக் கொடுக்கும் சாத்தியத்தை இவையும் கொண்டிருக்கும்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் அகதிகள் சார்பான பிரச்சனை மேலும் மேலும் அதிகரித்து வந்தமையை காணமுடியும். இதற்கு காரணம் இந்த அமைப்பு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து உள்நாட்டு யுத்தம் மோசமடைந்தது. இதனால் பெருமளவான மக்கள் அகதிகளாக்கப்பட்டு அவர்களுக்கு பெருமளவு சேவை வேண்டப் பட்டது. இதனை சமாளிக்க இதன் அங்கத்துவ நிறுவனங்களுக்கு பணவளமும், மனிதவளமும் இருக்கவில்லை. எனவே இணையம் அங்கத்துவ நிறுவனங்களின் நிதிநிலையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதன் சார்பாக சர்வதேச அமைப்புக்களுடன் தொடர்கொண்டு பெருமளவு நிதியை திரட்டுவதற்கான வழிவகைகளை இணையமே கண்டு கொள்ள வேண்டும். இதனூடாக அங்கத்துவ நிறுவனங்களின் நிதிப்பிரச்சனையை நீக்கி சிறப்பான இயங்கு-வதற்கு வழிவகுக்க முடியும்.

இணையமானது அங்கத்துவ நிறுவனங்களின் பணி உண்மையான அகதிகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதற்கு வசதியாக பல்வேறு இடங்களில் அகதிமுகாம்களை அமைக்க வேண்டியதே இதன் கடமையாகும். இவ்வாறு அகதிமுகாம்களை அமைத்துக்கொண்டால் இடம்பெயர்ந்துவரும் மக்களுக்கு உடனடியாக தேவைப்படும் நிவாரணங்களை வழங்கல் வேண்டும் இல்லையேல் அகதிகளுக்கான தங்கும் வசதிகளையே வழங்க முடியாமல் அவர்கள் வீதியோரங்களிலும், மரநிழல்களிலும் தங்க வேண்டிய நிலை ஏற்படும். இது அகதிகள் மனதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அரசசார்பற்ற நிறுவனங்களின் மீது கொண்ட நம்பிக்கைகளையும் குறைக்கும் இதன் காரணமாக பாரிய அகதிமுகாம்களை அமைத்து அகதிகளை நல்லமுறையில் பராமரிக்க இணையம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்து அகதிகளாக வரும் மக்களுக்கு உணவு வசதியைவிட பெருமளவு மருத்துவ வசதியை வேண்டப்படும். தற்போதைய நிலையில் இயங்கும் எந்த ஒரு நிறுவனமும் போதுமான மருத்துவசதிகளை வழங்குவதில்லை. இதனை நீக்குவதற்கு இணையமே முன்வரவேண்டும். இதற்கு வசதியாக போதுமான மருந்துகளை கொழும்பில் இருந்து கப்பல் மூலமாக வரவழைத்து இருப்பில் வைத்துக் கொள்ளல் வேண்டும். அதேபோல் சேவை நோக்கம் கொண்ட அதேநேரம் சேவையில் இருந்து இளைப்பாறிய வைத்தியர்களையும் தன்னுடன் இணைத்து கொள்வதன் மூலம் இது தரமான வைத்தியசேவையையும் ஆலோசனைகளையும் மக்களுக்கு வழங்க முடியும். இதன் காரணமாக தொற்றுநோய்கள் பரவுவதும் தடுக்கப்படமுடிவதுடன், பல மக்களை தேவையற்ற மரணங்களி லிருந்தும் பாதுகாக்க முடியும்.

அகதிமுகாம்களில் வாழ்கின்ற மக்களில் பெருமளவானவர்கள் சத்துள்ள உணவுகளை பெறவோ அல்லது பயன்படுத்தவோ முடிவதில்லை. இதன்காரணமாக விசேடமாக கர்ப்பிணித்தாய்மாரும் குழந்தைகளும் போசாக்கின்மையால் பாதிப்படைய வேண்டியுள்ளது. குறிப்பாக அகதி முகாம்களிலேயே சிசு மரணங்கள் பெருகுவதற்கு காரணமாகியுள்ளது. இதுவும் இணையம் அங்கத்துவ நிறுவனங்கள் ஊடாக போதுமான சத்துணவுகளை பெற்று கையிருப்பில் வைத்திருப்பதுடன், தேவையான மக்களுக்கு அவற்றை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதன் மூலமாக போசாக்கின்மையை குறைக்க முடிவதுடன் அவர்கள் நோய்வாய்ப் படுவதிலிருந்தும் பாதுகாக்க முடியும்.

அகதிகளாக இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ தமது தொழில்களை இழந்தேயிருப்பர். இத்தகையோருக்கு தற்காலிக தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்கும் பொறுப்பு அவர்களை பராமரிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களினுடையதாகும். இதனை நிவர்த்திக்க வசதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா அரசசார்பற்ற நிறுவனங்களும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டங்களை வைத்து கொள்ளல் வேண்டும். இதன் மூலமாக மனிதவள பயன்பாட்டை அதிகரித்து உற்பத்தியை பெருக்க முடிவதுடன் அகதிகளுக்கான வருமானத்தையும் அதிகரித்து கொள்ள வேண்டும். இதனால் அகதிகள் கொண்டிருக்கும் வறுமைநிலையை போக்கி வருமானம் தேடும்மார்க்கங்களை அதிகரிப்பதற்கான வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதில் அரசசார்பற்ற நிறுவனங்களின் கடமையாக இருத்தல் வேண்டும்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்குவதற்கு சிறப்பான போக்குவரத்து அவசியமாகும். அதற்கான போக்குவரத்துக்கான வாகனங்களோ அல்லது அவற்றுக்கான எரிபொருட்களோ அருந்தலாக இருப்பதால் அகதிமுகாம்களிடையே போக்குவரத்து இடம்பெற முடியாத நிலை காணப்படுகின்றது. இந்நிலைமையால் அகதிகளுக்கு தேவையான நேரத்தில் எவ்வித தேவையான பணிகளை தரமுடியாதநிலை காணப் -படுகின்றது. எனவே அரசசார்பற்ற நிறுவனங்களின் இயைமான போதுமான வாகனங்களையும், எரிபொருட்களையும் அங்கத்துவ நிறுவனங் களுக்கு பெற்றுக் கொடுத்தல் வேண்டும். இதன் மூலமாகவே எல்லா அகதி முகாம்களுக்குமான சேவையை காலதாமதமின்றியும், சிறப்பாகவும் வழங்க முடியும். எனவே அரசாங்கத்திடம் விசேட அனுமதியை பெற்றே நல்ல போக்குவரத்தை கொண்டிருக்கும் நிலையை அங்கத்துவ நிறுவனங் களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுவோர் பெரும்பாலும் சம்பளம் வழங்கப்படாதவர்களாய் இருப்பதால் திறமையானவர்களை வேலைக்கு அமர்த்த முடியாதநிலை காணப்படுகின்றது. அத்துடன் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள்கூட தமது பணியை திறமையாக ஆற்றக் கூடியளவுக்கு பயிற்றப்பட்டவர்களாக இருப்பதில்லை. இந்நிலையை தவிர்க்க நடவடிக்கை எடுப்பது இணையத்தின் கடமையாகும். இதற்கு வசதியாக தங்கள் [illegible] பெற்றவென திறமையானவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுப்பதுடன் அவர்களின் சேவைக்கு நியாயமான சன்மானத்தையும் வழங்குதல் வேண்டும். இத்துடன் சேவை நோக்கம் கொண்டவர்களை இனங்கண்டு வேலைக்கு சேர்ப்பதுடன் அவர்களுக்கு தேவையான பயிற்சிகளையும் வழங்குதல் வேண்டும். இதனால் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணி சிறப்பாக அமையமுடியும்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இயைமாவை சிறப்பான நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்தி கொள்ளுதல் வேண்டும். இதற்கமைய காரியாலயத்தில் ஒரு அமைப்பு வரைபடம் ஒன்றை வரைந்து தொங்கவிடுதல் வேண்டும். எந்த ஒரு நிறுவனத்தின் நிர்வாக அமைப்பு வரைபடமும் பிரமிட் வடிவத்தை கொண்டிருத்தல் வேண்டும். இதன் மிகக் கூடிய அதிகாரத்தை கொண்டோர் குறைந்த எண்ணிக்கையிலும், குறைந்த அதிகாரத்தை கொண்டோர் பெரும் எண்ணிக்கையிலும் இருக்கக் கூடியதாக அமைப்பு வரைபடத்தை ஏற்படுத்தி கொள்ளுதல் வேண்டும். அத்துடன் நிர்வாகத்திற்கு பொறுப்பான ஒவ்வொருவருக்கும் இருக்கும் அதிகாரங்களும் பொறுப்புக்களும் வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இதன் காரணமாக அரசசார்பற்ற நிறுவனங்களின் இயைமாவது நல்ல நிர்வாக அமைப்பை பெற்று மக்களுக்கு சிறப்பான சேவையை ஆற்ற முடியுமென நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள்

| இல | நிலையத்தின் பெயர் | தங்கியிருக்கும் குடும்பங்களின் எண் | பராமரிக்கும் நிறுவனம் |
|---|---|---|---|
| 01. | சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை | 266 | ரி.ஆர்.ஆர்.ஓ |
| 02. | சென்.றோக்ஸ் ச.ச நிலையம் | 276 | சர்வோதயம் |
| 03. | சென்.மேரிஸ் பாடசாலை | 315 | கிறுடெக் |
| 04. | சென்.நிக்கலஸ் பாடசாலை | 159 | கிறுடெக் |
| 05. | சென்.யோசப் ம.வி கொழும்புத்துறை | 136 | கிறுடெக் |
| 06. | இந்து மகா வித்தியாலயம் " | 98 | எஸ்.சீ.எவ் |
| 07. | நமசிவாயம் வித்தியாலயம் கொட்டடி | 206 | ரி.ஆர்.ஓ |
| 08. | துரையப்பா மகாவித்தியாலயம் | 200 | றெட்பானா |
| 09. | சென்.ஜோன் பொஸ்கோ | 88 | றெட்பானா |
| 10. | யாழ்ப்பாண புகையிர நிலையம் | 100 | ரி.ஆர்.ஓ |
| 11. | சன்மார்க்க வித்தியாசாலை | 167 | எஸ்.சி.எவ் |
| 12. | ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் அரியாலை | 164 | போரூட் |
| 13. | முத்துத்தம்பி வித்தியாலயம் | 132 | ஆர்.ஆர்.எவ் 83 |
| 14. | மெதடிஸ்ற் மிஷன் அனைப்பந்தி | 49 | எஸ்.சி.எவ் |
| 15. | சைவப்பிரகாச ம.வி கந்தரோடை | 161 | றெட்குறஸ் |
| 16. | மகேஸ்வரி மகாவித்தியாலயம் | 100 | " |
| 17. | யாழ் இந்து ஆரம்ப பாடசாலை | 100 | " |
| 18. | சரஸ்வதி வித்தியாலயம் அராலி | 210 | சீ.எஸ்.ஐ |
| 19. | கைதடி சீ.எம்.எஸ் | 16 | அறவழிப்போராட்டக் குழு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மவாட்டத்தில் அகதிகள் நிலை - 15.02.1991

| | |
|---|---|
| பிரதேசத்தக்குள் இடம்பெயர்ந்த குடும்பங்கள் | 48,175 |
| தமது சாதாரண தொழிலை இழந்த குடும்பங்கள் | 153,968 |
| வெளிமாவட்டங்களிலிருந்து வந்த குடும்பங்கள் | 8,860 |
| நலன்புரி நிலையங்களில் உள்ள குடும்பங்கள் | 10,436 |

யாழ்ப்பாணத்தில் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளோர் விபரம் - 15.02.1991

| அரசாங்க அதிபர் பிரிவு | நலன்புரி நிலையங்களின் எண்ணிக்கை | குடும்பங்களின் எண்ணிக்கை | குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 06 | 564 | 2760 |
| நல்லூர் | 07 | 209 | 773 |
| கோப்பாய் | 05 | 224 | 1001 |
| தெல்லிப்பளை | 18 | 879 | 3614 |
| சண்டிலிப்பாய் | 23 | 416 | 1532 |
| உடுவில் | 19 | 685 | 2415 |
| சங்கானை | 08 | 187 | 797 |
| கரவெட்டி | 06 | 224 | 913 |
| பருத்தித்துறை | 24 | 3010 | 11897 |
| மருதங்கேணி | 11 | 499 | 1885 |
| சாவகச்சேரி | 19 | 1240 | 5301 |
| வேலணை | 08 | 1840 | 6780 |
| ஊர்காவற்துறை | 03 | 459 | 1859 |
| மொத்தம் | 157 | 10436 | 41527 |

(ஆதாரம் : அண்டறிக்கை 1991)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்த முகாம்களின் விபரம்

A.G.A DIVISION DETAIL OF THE DISPLACED IN CAMPS AS AT
10.12.1992

| உதவி அ.அ.பிரிவு | முகாம்கள் | குடும்பம் | அங்கத்தவர்கள் | பராமரிப்பு |
|---|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 01 | 134 | 560 | S.C.F(U.K) |
| 2. நல்லூர் | 08 | 659 | 2685 | R.R.F 89<br>S.C.F |
| 3. கோப்பாய் | 22 | 650 | 2780 | REDD BARNA |
| 4. சண்டிலிப்பாய் | 28 | 1161 | 5041 | T.R.R.O<br>S.C.F(U.K)<br>C.S.I<br>HUDEC |
| 5. உடுவில் | 33 | 1580 | 7067 | T.R.O<br>SARVODAYA |
| 6. சங்கானை | 29 | 1534 | 6161 | FORUT |
| 7. தெல்லிப்பளை | 09 | 607 | 2540 | T.R.O |
| 8. கரவெட்டி | 04 | 171 | 739 | METHODIST |
| 9. சாவகச்சேரி | 14 | 1987 | 9083 | N.V.D.A.G<br>T.R.O |
| 10. பருத்தித்துறை | 11 | 513 | 2242 | T.R.O |
| 11. மருதங்கேணி | 22 | 915 | 4171 | FORUT<br>T.R.O |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Members Of The Council Of NGOs

(As On 30th November,1991)

| NAME OF ORGANISATION | ADDRESS |
|---|---|
| 1. CARE INTERNATIONAL | 15, Kandy Road, Jaffna. |
| 2. CHURCH OF SOUTH INDIA | Vaddukkoddai. |
| 3. FORUT | Chulipuram & Point Pedro. |
| 4. HUDEC | P.O.Box:2, Bishop House, Jaffna. |
| 5. METHODIST MISSION | 9, Vembadi Road, Jaffna. |
| 6. NON VIOLENT DIRECT ACTION GROUP | P.O.Box: 2, Chavakachcheri. |
| 7. REDD BARNA | 15, Rakka Road, Jaffna. |
| 8. REFUGEES REHABILITATION FUND '83 | 374, Point Pedro Road, Jaffna. |
| 9. RED CROSS SOCIETY | 73, Kandy Road, Jaffna. |
| 10. SARVODAYA | 22, Rasavinthoddam, Jaffna. |
| 11. SAVE THE CHILDREN FUND (U.K.) | Karuvempaa Valavu, Rajaveethy, Thirunelveli. |
| 12. TAMILS REHABILITATION ORGANISATION | 83/2 K.K.S.Road, Kokkuvil. |
| 13. THE REFUGEES REHABILITATION ORGANISATION | 106, 4th Cross Street, Jaffna. |
| 14. YOUNG MEN CHRISTIAN ASSOCIATION | Jaffna Kachcheri, Jaffna. |
| 15. PEOPLE WELFARE ORGANISATION | Irupalai Junction, Kopay. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள்

தளிர் - ஆடி 1984

ஆவணி அமனிக்தொகுப்பு - சச்சிதானந்தன்

தமிழ் அகதிகள் சோக வரலாறு - ஈழ அகதிகள் மறுவாழ்வுக்கழகம்

திசை - 14.01.1984

முரசொலி - 13.02.1991

உதயன் - 24.04.1991 ஆசிரியர் தலையங்கம்

உதயன் - 19.02.1991

ஈழநாடு -005.12.1990

ஈழநாடு - 19.03.1991

ஈழநாடு - 26.07.1991

ஈழநாடு - 08.08.1991 12.08.1991 வரை

கிராம அபிவிருத்தி - இலங்கை மன்ற கல்லூரி கலைத்தொகுப்பு

புதிய உலகம் - ஆடி, ஆவணி 1989

வழிகாட்டி - 1990 யாழ் மறை மாவட்ட ஆணைக்குழுவின் இணைப்பகம்

அன்புப்பிரகாரம் - யாழ் மறை மவாட்ட நீதி சமாதான அபிவிருத்தி ஆணைக்குழு

அன்புப்பிரகாரம் - செஞ்சிலுவைச்சங்கம் (இலங்கை)

சர்வோதயம் - இலங்கை சர்வோதய இயக்கம்

நேரடி சமூகம் - வன்செயல்களின் பாதிப்புக்களை மதிப்பீடு செய்தலும்,
அவற்றிற்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை இனம்
காணுவதற்கான ஆய்வுப்பட்டறை - தமிழர் புனர் வாழ்வுக் கழகம்
R.R.F.(89)

நேரடி பேட்டி - REDDBARNA - உத்தியோகத்தர்
T.R.O. "
SARVODAYAM "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org